NA-3

பொன்னி பொங்கல் மலர்-1950

வரும் தைப்பொங்கல் நாளில் (14—1—1950) மலராவிருக்கும் 'பொன்னி'யின் மூன்ருவது பொங்கல் மலர் ஈடு எடுப்பற்ற கலைக் களஞ்சியமாக விளங்கும்.

புரட்சிக் கவிஞரின் ''சேரதாண்டவக் காட்சி''யொன்று மூவ்றிறப் படமாக, மேலட்டையை அணி செய்யும் வகையில், சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

'பொன்னி' ஓவியர்கள் கண்ணன், அழகப்பன், ஜெகநாத், ரெஸாக், நீலன், பரணி ஆகியோரின் கைவண்ணங்களை மலரின் ஒவ்வொரு பக்கத்திலும் காணலாம்.

முற்றும் ஆர்ட்தாளில் அச்சாகும் 'பொன்னி'பொங்கல் மலர், வண்ணப்படங்களோடு, எண்ணக் குவியலையும் இணையற்ற முறையில் தரவிருக்கிறது. தமிழகத்தின் சிறந்த

தலைவர்கள்
சிந்தனையாளர்கள்
கவிஞர்கள்
எழுத்தாளர்கள்
புலவர்கள்
ஆசிரியர்கள்
ஆராய்ச்சியாளர்கள்

ஆகியோர் தத்தம் எழுத்தோவியங்களை மலருக்கு நல்கியிருக்கிருர்கள்.

சங்க இலக்கியக் காட்சிகளாக, பழந்தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் மூவ்றிறப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழர் வீரத்தைக்

குறிக்கும் போர்க்களக் காட்சிகளும் இடம் பெறுகின் றன. புரட்சிக் கவிஞரின் 'ஒன்பது சுவை' ஒன்பது ஓவியங்களாகக் காட்சிதரவிருக்கிறது.

மறைந்த மாவீரர் தளபதி அழகிரிசாமி அவர்களின் மூன் நிறப்படமும் — அவர் தொண்டு குறித்து வரும் கட் டுரையும் மலரில் முக்கிய பகுதியாகும்.

"திராவிட முன்னேற்றக் கழகப் பிரசாரகர்களா, இத்தனை பேரும்" என்று வியப்படையப் போகிறீர்கள்! ஏறக்குறைய ஐம்பது பேச்சாளர்களின் புகைப் படங்கள் கண்கவரும் வகையில் தொகுக்கப் பட்டுள்ளன.

"குடும்பவிளக்குக் காட்சிகள்" இன்பம் நிறைந்த ஒரு குடும்பத்தை உங்கள் கண்முன்னே, புகைப்படங்க ளாகக் காட்ட இருக்கின்றன.

மலரில் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. எழுதுகிறார்; புரட்சிக் கவிஞரின் புதுக் கவிதை இடம்பெறுகிறது. 'அண்ணா'வின் அரிய கருத்தோவியம் வருகிறது.

'அத்தான்' தீட்டும் சிறுவர் அரங்கம் (கதையும் கவி தையும்) கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் தனிப் பகுதியாக இணைக்கப்படுகிறது.

'ரெஜாக்'கின் கேலிச் சித்திரங்கள் மலர் முற்றும் தூவப்பட்டிருக்கின்றன. அவர் வரைந்துள்ள மூன் நிறப் படம் எண்ண எண்ண நகைச்சுவையூட் டுவதாகும்.

மற்றும்.............................உண்டு. முற்றும் இப் போது சொல்வது இயலாது, முறையுமல்ல. தமிழ்த் திருநாளன்று பெற்று மகிழுங்கள்; 'பொன்னி'யின் அரிய கலைப்படைப்பு உங்களுக்குப் 'பொங்கல் நாளில்' கிடைக்கும் சிறந்த அறிவுவிருந்து.



பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 22

திருவள்ளுவர் ஆண்டு 1980
மார்கழித் திங்கள் 10-ம் நாள்

விலை அணா 5
25—12—49

நம் கல்வி யமைச்சர்

இந்தியை வானொலி வழியாக—மக்கள்
எல்லோரும் கற்க வழிகாட்டும்-கல்வி
மந்திரியார் இந்த நாட்டுமொழி தன்னை
மக்கள் கற்கவழி செய்தாரா?

வாழைப் பழம்போலே தமிழிருக்கும்-ஒரு
வரியும் சரியாகப் புரியாது-இந்த
ஏழைகளைப் படிக்கச் சொல்லாமல்-அமைச்சர்
இந்தியைப் பரப்பமுன் வந்துவிட்டார்

பள்ளிக்குப் பிள்ளைகள் வருவதில்லை-என்று
பாட சாலைகளை மூடுகின்றார்
பிள்ளைகள் கட்டாயம் படித்திடுக-என்று
பேச்சுக்குச் சொல்லவும் கூசுகின்றார்

பத்துப் பதினைந்தே ஆண்டுகளில்-இந்தி
பாராள வந்து நின்றிடுமாம்
கற்றுக் கொள்வது நல்லதென்றே-மிகக்
கண்டிப் பாகவே கூறிவிட்டார்

இந்திக் காதரவுதந்திடு வோர்- நாட்டை
என்றும் ஆள்வது திண்ண மென்றே
மந்தக் கனவுகள் காண வேண்டாம்-கை
மாற்ற மடைவதுண்(டு) ஆட்சி ஐயா!

—அம்மான்



திருச்சி அழைக்கிறது, வாரீர்!

1950 ஜனவரி முதல் நாளன்று, திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற விருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம் பெற்ற பின்பு கூடும் முதல் மாநாடு என்ற முறையில் திருச்சி மாநாடு மிகுந்த சிறப்பு வாய்ந்ததாகிறது.

சென்னையில் செப்டம்பர் 17-ல் உருவான திராவிட முன்னேற்றக் கழகம், கடந்த மூன்றுமாத காலத்தில் தமிழகத்தில் அடைந்துள்ள செல்வாக்கு, எண்ணிப் பார்ப்பவர் யாருக்கும் வியப்பையே தருவதாகும். அக்டோபர் 16ல் தொடங்கி இந் நாள்வரை ஏறக்குறைய 400 கிளைக் கழகங்கள் தழைத்திருக்கின்றன. இக் கிளைக்கழகங்களின் சார்பில் எண்ணற்ற கூட்டங்கள் அவ்வப்போது நடந்துகொண்டிருக்கின்றன. கழகத்தின் பேச்சாளர்கள் நாற்பதுக்கு மேற்பட்டோர் பிரசாரப் பணியைச் செவ்வனே நிகழ்த்தி வருகின்றனர் நாட்டில் முன்னேற்றக் கழகம், இச் சுருங்கிய காலத்தில் அடைந்துள்ள வளர்ச்சிக்கு ஒப்புவமை இல்லை யென்றே கூறிவிடலாம். புதுக் கட்சிக்குத் தமிழக மக்கள் அத்தனை ஆதரவு நல்கி வருகின்றனர்.

அந்த ஆதரவின் பயனாகவே, தூத்துக்குடியிலும், விருதுநகரிலும தலைமைக் கழக நிதிக்காக நாடகங்கள் நடத்தப் பெறுகின்றன. அறிஞர் அண்ணாத்துரை குழுவினர் அந்நாடகங்களில் நடிக்கிறார்கள். அடுத்துத் திருச்சியிலும், ஜனவரி 15ல் சென்னையிலும் மாநாடுகளும், நாடகமும் நடைபெறவிருக்கின்றன.

மூன்றுமாத காலத்தில் நாமடைந்துள்ள வளர்ச்சியை அளக்குமுகமாகவே இம் மாநாடுகள் நடைபெறுமெனலாம். அவ்வகையில் திருச்சி முந்திக்கொண்டதும், முதல் மாநாட்டைத் தன் மாநாடாக ஆக்கிக்கொண்டதும் பெரு

மைப்பட்த் தக்க நிகழ்ச்சியே ஆகும். இம் மாநாட்டுக்கு முதல் நாள் பொதுக் குழுக்கூட்டம் நிகழ விருப்பதும் இம் மாநாட்டின் முக்கியத்துவத்தை அதிகரிப்பதாகு மென்னலாம்.

முன்னேற்றக் கழகம் புதிய கட்சி என்றாலும், கழகத்திலுள்ளவர்கள் நாட்டுக்குப் புதியவர்களல்ல; கழகத்தின் கொள்கைகள் இதுவரை பேசப்படாதவை அல்ல. எனவே முன்னேற்றக் கழகம் புதிய கட்சியா பழைய கட்சியா என்றே கூறமுடியாத நிலையில் பழைய புதுக் கட்சி என்று கூறும் வகையிலே தொண்டாற்றி வருகிறது.

கழகத்தின் முக்கிய பணியாகப் பிரசாரம் செய்வதே இதுவரையில் நடைமுறையில் வந்திருக்கிறது. அப்பணியில் எதிர்பார்த்ததற்கு மேல் சிறந்த பயன் கிட்டியிருக்கிறதென்றே கூறலாம். என்றாலும் பிரசாரம் தொடர்ந்து நிகழ வேண்டியதொன்றேயாகும். மற்ற திட்டங்கள் குறித்துத் திருச்சி மாநாடு தக்க முடிவுக்கு வருமென்று நம்பலாம்.

புதிய அரசியல் வரும் ஜனவரி 26ல் அமுலுக்கு வர விருக்கிறது; இந்தியைப் பரப்பும் பணியில் சென்னை சர்க்காரும் டில்லி சர்க்காரும் முன்னைவிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்; "யார்எங்களைக் கேட்பதற்கு உள்ளனர்?" என்ற முறையில் தான்றோன்றித்தனமாக ஆட்சி நடந்து வருகிறது. "வெள்ளையன் போனான் டொமினியன் வந்தது டும் டும்; டொமினியன் போனது குடியரசு வந்தது டும் டும்"என்ற கதையாக இருக்கிறதே யொழிய மக்கள் வாழ்வு வளமடையவில்லை; நாளுக்கு நாள் பொருளாதாரத் துறையில் நாடு பிற்போக்கடைந்துவருவதும், எடுத்ததற்கெல்லாம் உலகபாங்கிடம் கையெழுத்திட்டுக் கடன் வாங்குவதும் நமக்குத் தெரிகின்ற உண்மைகள். ஜனநாயகப் போர்வை இருந்தாலும் காங்கிரஸ் குறிப்பிடத்தக்க பெருத்த முதலாளிகளின் எடுபிடியாகவே ஆட்சி செலுத்தி வருகிறது.

இந்நிலையில் கழகம் தென்னாட்டுமக்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவேண்டும்; தேர்தல் அடுத்த ஆண்டில் வரலாம்; அப்போது மக்கள் கடமையென்ன என்பதைக் கழகம் விளக்கமாகத் தெரிவித்துவிட வேண்டும். "திராவிடம் தனித்து நிற்கவேண்டும்" என்ற நம் கோரிக்கை ஒரு உருவம் அடைய நாம் செய்யத் தக்க முயற்சிகளைத் திருச்சி மாநாடு வகுத்துத்தர வேண்டும்.

எழுத்துரிமை, பேச்சுரிமை தடைப்படுத்துவதைக் கண்டனம் செய்யும் வகையில் கழகம் தக்க நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும். வளர்ந்து வரும் இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை தரும் முறையில் நாட்டு மக்களின் எழுச்சியைத் திரட்டி அரசினருக்குச் சுட்டிக் காட்ட வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் திருச்சி மாநாடு தீர்க்கவேண்டிய பிரச்னைகள்பல உள்ளன. அத்தனைக்கும் சிறந்த தீர்ப்பினைத் திருச்சி நல்குமென எதிர்பார்க்கிறோம்.

தமிழ்நாடெங்கும் நிறைந்திருக்கும் பல்லாயிரக்கணக்கான முன்னேற்றக் கழகத் தோழர்களைத் திருச்சி மாநாட்டில் கலந்துகொள்ள வாரீர் என்று அழைக்கிறோம்; நாட்டை முன்னேற்றும் நற்பணியில் பங்கு கொள்ள வாருங்கள் என்று அழைக்கிறோம்; திராவிடம் அடிமைத் தளை நீங்கி, உரிமை வாழ்வுபெறத்தக்க திட்டம் தீட்டுவோம், வருக என்று அன்பழைப்பு விடுக்கிறோம்!

திருச்சி மாநாடு சிறக்க நிகழ்ந்து தமிழகத்திற்கு நல்லொளி காட்டவேண்டுமென வாழ்த்துகிறோம்.

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு 1–1–1950 ஞாயிறு காலை 8 மணிக்குத் திருச்சி முருகன் டாக்கிஸுக்கு அருகில் அமைக்கப்படும் ஆசிரியர் வேலாயுதம் பந்தலில் கோவில் பட்டி நகராசபைத் தலைவர் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெறும். பெத்தாம்பாளையம் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைப்பார்கள். தோழர்கள் சி. என். அண்ணாத்துரை முதலியோர் மாநாட்டில் கலந்து கொள்வார்கள். அன்று இரவு 9-30 மணிக்குத் தோழர்கள் அண்ணாத்துரை, கே. ஆர். இராமசாமி நடிக்கும் "சந்திர மோகன்" நாடகம் நடைபெறும்.

காலமும் கருத்தும்

பொங்கல் விழா

சாதிசமயவேறுபாடின்றித்தமிழர்கள் கொண்டாடும்விழா பொங்கல் ஒன்றுதான். தமிழகத்தின் 'தேசிய விழா'வாகப் பொங்கல் சிறப்புற்று வருகிறது. தமிழ்த் திருநாள் நிகழ்ச்சிகள் பொங்கல் விழாவின் சிறப்பைப் பெருக்கி வருகின்றன. திருவத்திபுரம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த ஆண்டுப் பொங்கல் விழாவை மிக நல்ல முறையில கொண்டாடத் திட்டமிட்டிருக்கின்றனர். அச் செய்தியை வேறொரு பக்கத்தில் வெளியிட்டிருககிறோம். அவ் விழாவைக் காரணமாக வைத்துக் காளை வளர்ப்புப்போட்டி போன்ற பல போட்டிகள் நடத்தவிருக்கின்றனர். இந்த முறையை மற்ற ஊர்த் தோழர்களும் பின்பற்ற வேண்டுகிறோம். தமிழகத்தில் கட்சி வேறுபாடற்ற முறையில் தமிழ்த் திருநாள் கொண்டாடபபட்டுவரினும், தி. மு. கழகத் தோழர்கள இத்திருநாள நடத்துவதில் பெரிதும் ஆர்வம் காட்ட வேண்டியது அவசியமாகும் புத்தாடை உடுத்திப் புது விளைவைக் கண்டு இன்பம கொள்ளும் நாளில் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுமாறு விழாவை நடத்துவதே முறையாகும். காளை வளர்ப்புப் போட்டிபோலக் குழந்தை வளர்ப்புப் போட்டியும நடத்தலாம். தமிழ்ப் பேச்சு, கட்டுரை, இசைப் போட்டிகள் நடத்தலாம். தை-முதல்நாள் தொடங்கி ஒரு வாரம ஒரே ஆரவாரமும் மகிழ்ச்சியும் தமிழகமெங்கும் நிலவுமானால் பொங்கல் விழாவின பயனை நாம் அடைந்தவர்களாவோம். வரும் பொங்கல் விழா அவ்வாறு மகிழ்ச்சியின் நிலைக்களனாக விளங்கும் வகையில் தி. மு. கழகத் தோழர்கள ஆவன செய்ய வேண்டுகிறோம.

பகுத்தறிவாளர் மாநாடு

சென்னையில் தோழர் எஸ். இராமநாதன் அவர்கள் முயற்சியில் நடந்தேறிய பகுத்தறிவாளர் மாநாடு பயனுள்ள பணியைச்செய்திருக்கிறது. அம் மாநாட்டிற்குத் தலைமைதாங்கிய பெரியார் டாக்டர் பராஞ்சிபே அவர்கள் தம் தலைமையுரையில் கூறியுள்ள கருத்துக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பயன் பெறத் தக்கனவாகும். மதச் சார்பற்ற அரசாங்கம் எப்படி நடைமுறையில் இலங்கவேண்டும் எனறு சுட்டிக காட்டியும், சாதியை ஒழிக்கச் சரியானவழி கலப்பு மணமே என எடுத்தியாபியும். கர்பபத் தடை அவசியமென விளக்கியும் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கினறது இத் தீர்மானங்களைப பாராட்டுகிறோம; அரசினர் ஏற்று நடைமுறைப்படுத்துவரென நம்புகிறோம. இப் பணியில் தலைப்பட்டவர்கட்குப் பகுத்தறிவுலகம் கடமைப்பட்டுள்ளது.

இந்து சட்டத் தொகுப்பு

வைதிகத்திற்கு எவ்வளவு பலமிருக்கிறது என்று நாம் உணரும் வகையில் இந்துசட்டத் தொகுப்பை எதிர்த்தவர்கள் காட்டிவிட்டார்கள். டாக்டர் பட்டாபி முதலிய பெரும் பெரும் காங்கிரஸ்காரர்கள் 'வைதிகத்தின் பாதுகாவலர்' களாயிருக்கும்போது பண்டித நேரு என்ன செய்ய முடியும்? திணறிப் போயிருக்கிறார். இனிப் பரிசிலனை, எதிர்த்தவர்கட்குச் சமாதானப்படுத்தச் சில திருத்தங்கள் — இப்படி அலைக்கழிக்கப்பட்டு நிறைவேறவிருக்கும் மசோதா எப்படி முற்போக்கானதாக விளங்க முடியும்? அரைகுறைச் சீர்திருத்தங்கட்கே இந்தப் பாடு என்றால், நம் மக்களின் முன்னேற்றம் எப்படி இயல்வதாகும்? பெரிய பத்திரிகைகளெல்லாம் "மசோதாவைக் கைவிடும்படி" தலையங்கம எழுதினவென்றால் பிற்போக்கு சக்திகள் எந்தக் கட்சியிலிருந்தாலும் ஒன்று சேர்ந்துகொள்கின்றன என்று விளங்குகிறதல்லவா? டாக்டர் அம்பேத்காரின் அரசியல் திட்டம் இனிக்கிறது; இந்துத் தொகுப்புச் சட்டம் கசக்கிறது. இந்த நிலையை நாட்டுமக்கள் புரிந்துகொண்டு ஆவன செய்வார்களா?

முன்னேற்பாடு வேண்டும்

14-1-1950-ல் 'பொன்னி' பொங்கல்மலர் வெளிவருவதால் 10-1-1950 'பொன்னி' இதழ் வெளிவராது. இனி அடுத்த பொன்னி' இதழ் 25—1—1950 அன்று தான் வெளிவரும்

மலர்பெற விரும்பும் சந்தாதார்கள் தபாற் செலவின்றிப் பெறும் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு அலுவலகத்திற்கு ரூ. 3—12—0 மட்டும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

மற்ற தோழர்கள் ஆங்காங்குள்ள 'பொன்னி' விற்பனையாளர்களிடம் முன் கூட்டியே பதிவுசெய்து கொள்ளலாம்; அல்லது அலுவலகத்திற்கு ரூ. 4—0—0 அனுப்பி வைத்தால் மலர் பதிவஞ்சலில் அனுப்பப் பெறும்.

கடைசி நேரத்தில் முயன்று 'மலர் கிடைக்கவில்லையே!' என்று ஏக்கமடையாமல் ஒவ்வொரு தோழரும் தக்கமுன்னேற்பாடு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

..பொது மேடை..

பெரும்பட்டு
11-12-49

★ முதற்குறள் திரிப்பு

அகிலமெலாம் ஆடு மாடு களாய்த் திரிந்த அக்காலத்திலேயே, தமிழன் தாய்மொழி பயின்று, தக்கார்பேணி, இயற்கையை ஏட்டிலே தீட்டி இன்புற்று வாழ்ந்துவந்தான். காட்டிலும் மேட்டிலும் காலங் கழித்து, இருளிலும், காற்றிலும் இன்னலடைந்து வாழ்ந்துவந்த தமிழர்க்குச் சூரியன், தன் சுடரொளி காட்டி உலக இருள் ஓட்டி, வழியது காட்டி வாழவைத்தான். எனவே மக்கள் பகல் தந்த பரிதியைச் சுடர்தந்த சூரியனைக் கடவுளெனக் கருதத் தொடங்கினர். அவ்வாறு வணங்குங்கால் இயற்கையாய்த் தோன்றிய எல்லாப் பொருட்குமகாரணப் பெயர்தந்து கூப்பிடுதல்போலப் பரிதிக்கும் காரணப் பெயரிட்டு வணங்கலாயினர். எவ்வாறெனின்? "நீர்மை" என்பதற்குத் தன்மை என்பது பொருள். அது படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று நீர்மையுடைமையால் நீரெனப் பெயர் பெற்றது. இதைப்போலவே தீமையுடைமையால் தீயெனவும், கறங்கியிற்றலால் காற்றெனவும், பரிதி பகலைத் தருதலால் பகலனெனவும் காரணப் பெயர்களை முறையே பெற்றன. இதில் பரிதியாம் இறைக்குத் பழங்காலத் தமிழர்கள் ஆண்பாற்குரிய சிறப்புவிகுதியாம 'அன்' என்பதைச்சேர்த்துப் பகலன் எனக் கூறத் தொடங்கினர். இப்பகலனென்பது பொன்னையுடையவன் பொன்னனெனக் காரணப் பெயர் பெற்றாற் போலப் பகலையுடையவன் பகலனெனக்காரணப் பெயர் பெற்றது இப்பகலனையே திருவள்ளுவரும் தம் குறள் நூலின் முதற்குறளில் "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆயபகலன் முதற்றேயுலகு!" எனக் கூறியிருப்பார். அவ்வாறாயின் இதன் பொருள், எழுத்தெல்லாம் (உலக மொழிகள்)யாவற்றிலுமுள்ள எழுத்துக்கெல்லாம் அகரமாய=அகரமென்ற எழுத்தாகிய, முதல்=முதலையுடையன (அதுபோல) உலகு=உலக மானது, பகலனை=சூரியனாகிய முதற்று =முதல்வனையுடையது. இதில் 'ஏ'காரம் தேற்றப் பொருளில் வந்ததாகக் கொள்ளல் வேண்டும் "ஆய" என்பதை முதலிலும் இறுதியிலும் கூட்டித்தொழிலிடை நிலைத்தீபகமாகப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறிருந்த குறளையே பார்ப்பன மொழி வல்லுனர், வள்ளுவரைப் பார்ப்பனராக்கக் கருதித் திரித்துப்பொருள் செய்வாராயினர். மேலும், திருநாள்படை நாள் கொடை நாளென்றப் பெருநாட்கல்லாது பிறநாட் கறையாச் செல்வக்குடிப் பிறந்த வள்ளுவரை ஆதி என்ற புலைச்சிக்கும், பகவனென்ற பார்ப்பானுக்கும் பிறந்ததாகப் புனைந்துரைக்கின்றார்களென்றால் அப்புல்லர் தம்மதியை என்னென்பது! 'திருக்குறளிலே ஆரியமா? அல்லது, அருந்தமிழா?' என்று ஐயமுற்று அறிய முடியாவகையில் ஐந்தாறு சொற்களே இருப்பதாக ஆரியமும் தமிழும் ஐயமறக் கற்ற அறிஞர்களே கூற ஆசிரியர் முதற் குறளிலேயே 'ஆதி' என்ற வடமொழிச் சொல்லையும, பகவனென்ற வடமொழிச் சொல்லையும் சேர்த்திருக்க முடியுமா?

பா. சு. ஏகாம்பரம்

○●○

ஓமலூர்
1-12-49

நாடு சீர்பெற

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கியமாகத் தேவைப் படுவதுள் ஒன்று கல்வி. கல்வியறிவு செறிந்த

நாடுதான் விரைவில் முன்னேற்றத்தில் முனைந்து செல்ல இயலும் என்பது என் கருத்து. ஆனால் நம் நாட்டிலோ கல்வியின் அவசியம் உணரா மக்களின் தொகை மிக மிக அதிகம். அரசியலார் தரும் புள்ளி விவரப்படி 12-40வயதுக்கிடைப்பட்ட கல்வி வாசனையற்றோர் தொகை 4½ கோடி. அறியாமை அழிய அறிவுவளர வேண்டும். ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் கூடி ஓர் பள்ளியை ஏற்பாடு செய்து கல்வியறிவில்லா நம் மக்களுக்கு அவ்வறிவை ஊட்டப் பாடுபட்டால் ஓர் ஐந்தாண்டுக் காலத்தில் நம் நாட்டு மக்கள் அறிவு செறிந்த ஆண்மையாளராகவிளங்க முடியும். கழகத்தோழர்கள் முயலுவரா?

தி. ப. வேலன்

○◉○

நாகை வெளிப்பாளையம்
20-11-49

சிறுவர் அரங்கம்

10-11-49ல் நீ தாங்கிவந்த இதழில் 'அத்தான்' அவர்களின் சீர்திருத்தச் சிங்கம் பலேஜோர்! இது அரசியல் சிங்கங்களுக்கோர் நல்ல சவுக்கடி. அரசியலைத் திரைப்படம் போல் அன்பர்களுக்கு எடுத்துக் காட்டிய 'அத்தான்' அவர்களுக்கு உன்சார்பாக எங்கள் பாராட்டு உரித்தாகுக. நீயும் அத்தான் அவர்களின் கட்டுரைச் சுமைகளை அடிக்கடி சுமந்து வருவாய் என்று நம்புகிறோம்.

ஆர். மாரியப்பன்

○○◉

கோயமுத்தூர்
7-12-49

மறக்கக் கூடாது

தமிழ் நாட்டிலும், இந்தியாவின் சிற்சில பகுதிகளிலும் கம்பன் திருவிழாவும், பாரதி திருவிழாவும் கொண்டாடி புகழ்மாலைசூட்டுகின்ற நேரத்தில், கவியரசர் பாரதியாரின் தேசிய வெறியையும், கவிதா சக்தியையும் தூண்டிவிட்டு ஆவேசப் படுத்திய மாவீரர் சிதம்பரம்பிள்ளையின் நினைவுநாள் பற்றி மறந்திருப்பது தமிழ் நாட்டிற்கே அவமானமுடையதாகும். மகாத்மாவிடம் தக்க மதிப்புஉண்டு. ஆனால் அவரின் கருத்துக்கள் பிடிக்காததினால் தேசிய மகாசபையிலிருந்தே விலகிவிட்டார், நீண்டகாலம் சிறையிலிருந்து 1936-ம் வருடத்தில் இயற்கை எய்தினர். தமிழ் நாட்டில் ஒரு புதிய விழிப்பு, உணர்ச்சி தாண்டவமாடுகிறது என்றால் இந்திய விடுதலை இயக்கத்தில் சேர்ந்து எண்ணரிய தியாகங்கள் சிதம்பரம் செய்ததால்தான். தன் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் துறந்தார். இன்றைய சர்க்காரும், தேசியத்தலைவர்களும், பலஏடுகளும், வீர சிதம்பரனாரின் திருநாள் வந்துற்றபோது, மறந்துவிட்ட காலையில் "பொன்னி"

> அவர் பெயரை மறவாதே - தமிழா
> அவர் பெயரை மறவாதே;
> அயலவர் ஆட்சி அகலவே உழைத்த
> உயர் தமிழ்ச் சிதம்பரனார்

என்ற பாட்டோடு வந்திருப்பதானது நம் தமிழ் நாட்டிற்கே ஓர் ஒப்பு உவமையில்லாத சிறப்புடையதாகும். சிதம்பரனாரைப் பற்றிப் பேச மறந்து விட்டபோது "பொன்னி" பாராட்டியிருப்பதானது பொன்னியின் நேர்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. அன்னியர்களால் நசுக்கப்பட்ட கப்பல் தொழிலை மீண்டும் நமது நாட்டில் உய்விக்க முயற்சி செய்த கப்பலோட்டிய மாவீரர் சிதம்பரனாரைத்தமிழ்நாடுஉள்ளளவும் மறக்கமுடியாது, கூடாது. அவருடைய புகழ் நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டும். அவர் பெயரை நம் நாட்டில் நிலைக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு நம் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும். கட்சி, கொடி சட்டை பேதமின்றி, உயர்வு, தாழ்வு, ஏமாளி, எத்தன் என்ற பேதங்களுக்குச் சாவுமணி அடிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இளம் வாலிபர்களைச் சேர்ந்ததாகும். இந்தச் சீரிய காரியத்தில் வெற்றிபெற்றால் தான் தமிழ்நாட்டிற்கே தேசிய உயிர் அளித்த உயர்

தமிழ்ச் சிதம்பரனாரைப் போற்றிய தற்கும் அவரை மறவாமல் இருப்ப தற்கும் தகுதிபெற்றவராவோம.

நா. ராமச்சந்திரன்

○●○

சென்னை,
16-12-49

புரிந்துகொள்ளுங்கள்

சில எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். எதொன்றையும் 'கானல்நீர்' ஆக்கிக் காட்டிச் சோகஉணர்ச்சியைப் படிப்போர் உள்ளத்தில் எழுப்புவதுதான் அவர்கள் இலட்சியம். இந்த எண்ணம் அவர்களுக்குப் புகழைத்தரலாம். கதைக்குக் கவர்ச்சியைத்தரலாம். ஆனால் சமூகத்திற்குக் கேட்டைத் தருகிறதே என்பதுதான் வேதனை!

காதல் கதையா — சாதலில்தான் முடியும். கலப்பு மணமா—இருவருக்கும் உணவு-வகையிலோ, உரிமையெண்ணத்திலோ கருத்து மாற்றம் காணும். பிரிவர். அவனுடைய இரண்டாம் மனைவிக்கு அவன் பரிசுகள் அனுப்புவான்!

விதவா மணமா — நடைபெறும்; திடீரென்று ஒரு நாள் அவளுக்குத் தன்முதல் கணவனின் நினைவுவரும். அவலே நினைத்து உரலே இடிப்பது போல் என்னைத் தொடாதே என்று ஆணையிடுவாள் புதுக்கணவனிடம். புதிய திருநீலகண்ட பரம்பரை! பெரும்பாலும் இந்த அடிப்படைகளிலேயே கதை யெழுதி, கற்பனையில்கூடச் சீர்திருத்தங்களைக் கண்டு அலறும் தோழர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு!

எனக்கு அறிமுகமான ஒரு குடும்பம். அவருடையது - அவளுடையது - அவர்களுடையது ஆக 3 இரை குழந்தைகள், சாதாரண பொருளாதார நிலை, ஜாதியால் மட்டுமல்ல - மொழியாலும் வேறுபட்டவர்கள். ஆனாலும் அவர்கள் குடும்பத்தில் பெரியோர் நிச்சயித்த வண்ணம் மணந்து வாழ்பவர்கள் அளவு பூசலும் புகைச்சலும் இல்லை!

ஆகவே, சீர்திருத்தத்தைப் 'பூச்சாண்டி' யாக்கித் தாங்களும் பயந்து மற்றவர்களையும் பயமுறுத்தும் எழுத்தாளத் தோழர்களுக்குச் சொல்லுகிறேன்.

"கொஞ்சம் பேனாவை உறையிலிடுங்கள். உங்கள் இருண்ட அறையின் கதவைத் திறந்து சற்று வெளியில் வாருங்கள். அப்படியே உங்கள் உள்ளத்தின் கதவுகளையும் திறவுங்கள், அங்கே நெடுநாட்களாகக் கேட்பாரற்றுக் கிடக்கும் அச்சமெனும் ஒட்டடையையும் பழைய பழக்க வழக்கங்களெனும் குப்பையையும் அகற்றுங்கள், இன்றைய சமூகத்தின் நிலையையும் தேவைகளையும புரிந்து கொள்ளுங்கள்—தெளிவாக அப்புறம்—எழுதுங்கள்!!

—செல்வநாயகி

○●○

பாளையங்கோட்டை
9-11-49

தம்பி! தம்பி! ஓடிவா!

சிறுவர் அரங்கத்தில் 'அத்தான்' எழுதுகிற சிறுவர் கதைகள், கவிதைகள் என் தம்பி தங்கையரை மிகவும் கவர்ந்திருக்கின்றன.

தம்பி தம்பி ஓடிவா
தங்கையைக் கூட்டிவா

என்றபாட்டை அவர்கள் புத்தகத்தைப் பார்காமலே இப்போது பாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப்பாட்டில் புதைந்திருக்கும் கருத்துக்கள் நம் நாட்டிலுள்ள இன்றைய நிலையைச் சித்தரிக்கின்றன. இம்மாதிரிச் சிறுவர்களுக் கேற்ற கதைகள், பாட்டுகள் ஒவ்வொரு பொன்னி இதழிலும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

--எஸ். குமாரராஜ்

●○●

ஆனைமலை
15–12–49

யான் எய்தும் எக்களிப்பு

கன்னித் தமிழ் வளர்த்த கன்னலரசி! தமிழ்த் தாயின் மாசகற்ற வந்த தலைவி பொன்னியே! வணக்கம்! கோடிவணக்கம்! உணர்வெனும் கனல் கொண்டு அயர்

வினை ஒழித்திடும் நின் கருத்தோவியம் கண்டு கண்டு களித்த யான் எவ்வுலகில் உள்ளேன் என்பதே தெரியவில்லை, மனதிலே மண்டிக் கிடக்கும் மனவிருளை மாய்க்க, அறியாமையை அழிக்க, இடைவிடாது போராடும் நின் ஆற்றலோ போற்றத்தக்கது. இருண்ட வானிலே தோன்றிய விடிவெள்ளி அன்றோ நின் இரு செங்கதிர்கள். "காலத்திற்கேற்ற கருத்தும், நிலமைக் கேற்ற நீதியும்" நின் கலைப் பொக்கிஷத்திலே கனிந்து தவழ்கின்றன. கலையும் கவினழகும், புதுமை உணர்வும் ஒருங்கே பொலிந்த நின் இதழுக்கு எங்கள் வாழ்க்கையையே காணிக்கை செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் எனினும் மிகையல்ல. புதுவை வேந்தன் கவிச்சுவையெலாம் அமுதெனத் திரட்டி ஈந்திடும் எங்கள் வண்டமிழ் வனிதையே! சிலப்பதிகாரக் காட்சியைத்தான் எவ்வழியில் உருவாக்கி எங்களை இன்ப புரிக்கு இழுத்துச் செல்கிறாய்! பண்ணுறத் தெரிந் தாய்ந்த வின்பைந்தமிழ் யாங்கணும் பரவிப் பல்லாண்டு நிலவ வாழ்த்துகிறேன்! சூழ்க நின் சுடரொளி! வாழ்க நினது புகழ் வையமெலாம்!

—ஆ. கு. விழியான்

○●○

வேகுப்பட்டி
14-12-49

புரியாத சொற்களை நுழைக்காதீர்

தமிழகத்தில், தமிழ் மொழியிலுள்ள சொற்களே சரியாகப் புரியவில்லை, உயர்முறை மன்றம், ஆட்சியாளர், இட்டிறுதி அல்லது பொறுப்புக் கட்டுதல் முதலிய சொற்கள் பயனில் வரவில்லை. வந்தாலும் மறைக்கப்பட்டு வருகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் அலுவல்களெல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று சென்னை அரசினர் அறிக்கை விடுத்தும் அதனைப் பொருட் படுத்தாமல்- வெற்றி பெறச் செய்யவில்லை. இங்கிலையில், மத்திய அரசினர்—அரசியல் அமைப்பு மன்றம் மூலம் புரியாத இந்திச் சொற்களை மற்ற மாநிலத்தாரிடம் கையாளும் படி வற்புறுத்தும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். புரியாத—சொற்களை எடுத்தெழுதிக் கண்டித்திருக்கின்றன-'தினசரி' போன்ற நாளிதழ்கள். இந்தி மொழி அறவே கூடாதென்று தமிழர் எதிர்த்தனர். கண்டனங்களைத் தெரிவித்தனர். சென்னை அரசினரும், அரசியல் தலைவர்களும் செல்லுமிடங்களிலெல்லாம் இந்தியினால் தமிழ் கெடாது, அழியாது-என்று கூறினர். இப்பொழுது என்ன கூறுகின்றனர் என்று கேட்கின்றேன்? இந்தியப் புகைவண்டி நிலையங்களிலெல்லாம் இனிமேல் இந்தியிலும் ஆங்கிலத்திலுந்தான் ஊர்ப்பெயர்கள் எழுதப் படவேண்டுமென்று அரசினர் அறிக்கை யொன்று கூறுகின்றது- சனவரி 26—1950 முதல் வெளிவரும் பணத்தாள்களில் (கரன்சி நோட்டுகளில்) அதன் மதிப்பை இந்தியிலேயே வெளியிடப் போவதாகத் தெரிகிறது. வேண்டாத மக்கள் மீது, வற்புறுத்திப் புரியாத சொற்களை நுழைக்காதீர் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதனால் தீங்குதான் நேரிடும்.

ஆ. பழ. குமரப்பன்

○●○

கோவை
19-12-49

காமராஜரும் கட்டைவிரலும்

குருபக்தியை விளக்கத் துரோணாச்சாரியர், ஏகலைவன் கட்டை விரலைக்காணிக்கையாகக்கேட்டாராம். அதுபோல் 20-ம் நூற்றுண்டின் துரோணர், காமராஜருக்கு வெட்டிக் கொடுக்க வேண்டுமாம் தமிழகத்தின், சீர்திருத்த எழுத்தாளர்களின் கட்டை விரலை. அவருடைய மாருதபக்தியை டெல்லி தேவதைகளுக்குக் காட்ட வேண்டுமென்ற அவாவின் பொருட்டுப் போலும்! சில பலகூறுமுன் சிந்திக்கும் பண்பில்லாத சில பறை சாற்றிகள் அதன் மூலம் தன் அறிவு ஒளிவிட்டு வீசுவதாகப் பிறர் எண்ணுவர் என்ற மனப்பால் குடிக்கின்றனர். காலத்தின்

வேகத்தை கயவர்களின் தாக்குதல் என்று கருதுகிறார் காமராஜர். மக்கள் சீர்திருந்த வேண்டும், நல்லொழுக்க முடையவர்களாக, மனிதப் பண்பு மிக்கவர்களாக, பகுத்தறிவு வாதிகளாக விளங்க வேண்டும் என்ற பேருநோக்குடன் உழைத்த உத்தமர்களான, சாக்ரடீஸ், வால்டயர், ரூசோ போன்றவர்கள்— இவர் மதியின் ஒளியைக்கண்டு வெட்கித் தலைகுனிய வேண்டும்; அவ்வளவு அறிவு முதிர்ச்சி காமராஜருக்கு! காலம் கூறும்: காமராஜர்கள் கரைந்து வரும் பழைமையின் ஆதரவாளர்களென்று-- எங்கும் பழைமை வெற்றி பெற்றதில்லை, அறிவொளிஎன்ற பகலவன் முன்பு புதுமையேபூத்துக் குலுங்குகின்றது- அத்தகைய புத்தொளியின் முன்பு காமரர்ஜர்கள் எந்த மூலை. ஜார் கூறவேண்டிய ஒன்றை-காமராஜர் கூறுகின்ருர். ஆனல் ஜாரின் கொட்டத்தை யடக்கப் புரட்சிவீரன் லெனின் தோன்றியதைப்போல், காமராஜர்களின் ஆதிக்கப் போக்கை அடக்க—பகுத்தறிவு வாதிகளிடத்தில் இதோபேனு இருக்கிறது— பிரஞ்சு நாட்டு எழுத்தின் செல்வன் ரூசோவின் பரம்பரை. அழியட்டும் ஆணவப் போக்கு— வளருட்டும் அறிவுக்கதிர்!

A. செல்வன்

○●○

மருதக்குளம்
7-12-49

மதியீனம்!

சென்ற இதழில் புது உலகில் நேரு என்ற கட்டுரை மிகவும் விரும்பத்தக்கது. நான் வதியும் நாங்குநேரி வட்டத்தில் நூற்புக் கழகங்கள் அமைத்து ஆசிரியர்களாகிய எங்களை மனம் வெதும்பச் செய்கின்றனர் சர்க்கார் பிரதிநிதிகள். இவ் வட்டத்தில் பருத்தியே இல்லை. இத்தச் சட்டத்திற்கிடையில், அமெரிக்காவின் முதல் இங்கே வந்தால் ராட்டைக்கும். தக்ளிக்கும் குடிசைத் தொழிலுக்கும் கிடைக்கும் பரிசு என்ன? மனச்சாட்சியில்லாத ஆசிரியர்கள் நாள் ஒன்றுக்கு 5-மணி நேரத்திற்கு 1-மணி நேரம் கற்பிப்பது அபூர்வம். அதிலும் இந்நூற்புப் பயிற்சியை ஆரம்பித்தால் கிராமாந்திர பாடசாலைகளைச் சர்க்காக் காரியாலயங்களாக்கலாமே தவிர பாமர மக்களின் கல்வியின்மையைப் போக்குமிடமாக்க முடியாது. இது உணராது இடம் பொருள் அறியாது பருத்தியில்லாத இவ்வட்டத்தில் நூற்பை வலுப்படுத்துவது மதியீனமாகும். தோழர் டி. கே. சி. யின் புது உலகில் நேரு என்பதை பார்த்த பின்தான் எனக்கும் தெரிய வந்தது. ஆதலால் பொன்னிக்கும் டி. கே. சிக்கும் என் வணக்கம்.

J. சாமுவேல்

○●○

காட்டுப்பாடி
13-12-49

எதிர்பார்க்கிறேன்

பொன்னி கண்ணைக் கவரும் பல வர்ண அட்டைகளை, மேல் போர்த்திக்கொண்டு வருவது விலை உயர்ந்த ஆடையை உடுத்தி இருப்பதுபோல் இருக்கிறது. உள்ளே பல அறிஞர்களின் கருத்துக்களைத் தாங்கி வருவது, மாசற்ற மனதை உடையவள்போல் இருக்கிருள். வெளியேயும் படோடாபம், உள்ளேயும் செறிந்த அறிவு. இதை நோக்குங்கால் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உலுத்தர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவள் அல்ல – பொன்னி, யென்பது விளங்குகிறது. இதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். வைதீகரின் வைரி பொன்னி, சீர்திருத்தச் செல்வி பொன்னி எங்கள் வீட்டிற்கு மாதத்தில் இரண்டுமுறை வருகிருள் இதைவிட மாதத்தில் நான்கு முறை எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை மகிழ்விப்பாள் என எதிர்பார்க்கிறேன். திராவிடத்தின் திக்கெட்டும் பொன்னியின் புகழ் ஓங்குக! வாழ்க பொன்னி!! வளர்க பொன்னி!!! இதை அறிந்து ஆவன செய்ய வேண்டுகிறேன். திரு. கேசவன்

---

* பரிசு பெற்ற கடிதம்: பா. சு. ஏகாம்பரம் பெர்ணம்பட்டு கு, 5- M. O: அனுப்ப முழு முகவரி தருக. வேண்டுகிறோம்



சிறுகதை

-இளமைப்பித்தன்-

சாய்மான நாற்காலியின்மேல் துவண்டு கிடந்தான் துரைசாமி. தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருந்தன அவனது கண்கள். இடது கையின் விரல்கள் ஒரு சிகரெட் துண்டைப் பிடித்திருந்தன. மார்பின்மேல் அன்று வந்த தினசரிப் பத்திரிகை மடித்துப் போட்டபடியே கிடந்தது. மனம் எதிலும் நிலையாக நிற்க வில்லை.

மூடியிருந்த வாசல் கதவு 'படீ' ரென்று திறந்து கொண்ட சப்தத்தைக் கேட்டதும் திடுகிட்டு எழுந்தான் அவன்.

முகத்தில் கலவரம் தோன்றத் துரைசாமியின் நண்பன் நாகலிங்கம் வேகமாக உள்ளே வந்து "துரைசாமி! காரியம் மிஞ்சிப் போய் விட்டது. அந்தப் பக்கமே நான் நடக்க முடியாதபடி செய்து விட்டார்கள்" என்று சொல்லிவிட்டு 'நறநற' வெனப் பற்களைக் கடித்தான்.

"இது நான் எதிர்பார்த்த விஷயம்தான். ஆத்திரப் படாதே. உலகத்தில பணம் கொடுத்துக் கற்றுக் கொள்ளுகிற பாடங்களில் இதுவும ஒன்றுதான்" எனச் சொல்லிவிட்டு நாற்காலியை இழுத்துப் போட்டான் துரைசாமி. சாம்பிய மனத்துடன் அதன் மேல் போய்த் 'தொப்' பென்று உட்கார்ந்தான் நாகலிங்கம். கோபத்தால் சிவந்தும், அவமானத்தினால் கண்ணீர் ததும்பியும் போயிருந்த அவனுடைய கண்கள் பார்ப்பதற்கு மிகவும் விகாரமாக இருந்தன.

இருவரிடையே சிறிது நேரம் அமைதி நிலவியது. ஒருவருக்கொருவர் வாய் திறந்து பேசவில்லை. துரைசாமி எஞ்சியிருந்த சிகரெட் துண்டை வாயில் வைத்து இழுத்துக் 'குபுகுபு' வெனப் புகையை வெளியே ஊதினான். சுவரின் மூலையில் ஒட்டடை படிந்து போயிருந்தது. அதன் மத்தியில் ஒரு சிலந்தி, பெரிய வலையாகப் பின்னிக் கொண்டு அதில் ஏதாவது வந்து விழாதா என்று காத்துக் கொண்டிருந்தது. அவன் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். முதலில் ஒரு 'கொசு' பிறகு ஒரு 'ஈ' இரண்டையும் தீர்த்துவிட்டு வலையின் மத்தியில் திரும்பவும் போய் மோனத் தவத்திலாழ்ந்து விட்டது சிலந்தி!

துரைச்சாமி தனக்குத் தானே சிரித்தான். நாகலிங்கம் நெற்றி நரம்பு புடைக்க "நான் அழுகிறேன். நீ சிரிக்கிறாய். உனக்கென்ன?" என்றான் வேதனையுடன்.

"நாகலிங்கம், நான் உன்னைக் கேலி செய்யவில்லை. முன்பு ஒரு முறை நான் அழுதபோது பிறர் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். அதன் பிறகு அவர்களே அழவேண்டிய நாள் வந்து விட்டது. வாய்விட்டுக் கதறினார்கள். நான் கல கல வெனச் சிரித்தேன். இது தானப்பா வாழ்க்கை" என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் சிரித்தான் துரைச்சாமி.

"நீ அழுதாயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான நாகலிங்கம். ஏனென்றால் கவலையே இல்லாமல் எதற்கும் ஈடு கொடுத்துக்கொண்டு துன்பங்களைப் புன்சிரிப்புடன வரவேற்கும் மிகச் சிலருள் துரைச்சாமியும் ஒருவன். அவன் 'அழுதேன்' என்று தன் வாயாலேயே சொல்லுவதென்றால் அது பெரிய அதிசயமாகத் தானே இருக்கும்!



கைக்குட்டையால்முகத்தைத் துடைத்துக்கொண்டு "துரைசாமி, நீ எப்பொழுது, எதற்காக அழுதாய்? நீ அழுதாயென்றால் ஏதோ ஒன்று நடந்தேறியிருக்க வேண்டுமே? இவ்வளவு நாட்கள் வரையில் என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்து விட்டாயே அந்தக் கதையை" என்று வேதனை, கண்ணீர் எல்லாவற்றையும் ஒரு பக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டுக் கேட்டான் நாகலிங்கம்.

"சொல்லுகிறேன் கேள்." என்று மீண்டும் ஒரு புது சிகரெட்டை எடுத்துப பற்ற வைத்தான். புகை மண்டலத்திற்கு நடுவில் இருவரும் பிரகாசித்தார்கள்.

O

துரைசாமி கதையைச் சொன்னான்:

நாகலிங்கம்! காதல் காதலென்று சொல்லுகிறார்களே இது ரொம்ப ரொம்பப் பைத்தியக்காரத்தனம். எத்தனையோ பேர்களை அது காலை வாரிவிட்டிருக்கிறது. கேட்பதற்கு மிகவும் இனிமை நிறைந்த வார்த்தை அது. அதையே நமபிககொண்டு நாள் முழுவதையும தள்ளிவிடலாமென்ற விஷயம் அனுபவசாலிகளுக்குப் பிடிக்காது; அவர்களைக் கண்டால் காதலுக்கும் பிடிக்காது!

நான் அதில் கொஞ்சம் பழக்கப்பட்டவன். வாழ்க்கையின் மலர்ப்படுகையான இளமை தவழும வயதில், இளமைப் பித்தனாகவே திரிந்துகொண்டிருந்தேன; அதாவது கல்லூரிப படிப்பின் எல்லையைத் தாண்டி அங்கே அரையுங் குறையுமாகக் கேள்விப்பட்டவைகளை, சினிமா, நாடகம, கோயில். திருவிழா, தனிமை, முதலான இடங்களில் அனுபவ பூர்வமாக உணருகின்ற காலம்.

ஒரு நாள் அறையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டோ, படித்துக்கொண்டோ இருந்தேன். சரியாக நினைவு இல்லை. என் நண்பன் சுப்பிரமணியம் என்பவன் திடீரென்று வந்து சேர்ந்தான். கையில் ஒரு நீளமான காகித உறையுடன்.

"என்னப்பா தம்பி அது?" என்று கேட்டேன்.

"வெண்திரைத் தாரகை" என்றான்.

"அப்படி என்றால்?"

'சினிமா வானத்தின் நட்சத்திர நடிகை என்று அர்த்தம்" சிரிப்புக்குப் பின், ஒரு அழகிய போட்டோவை எடுத்து என்னிடம் காட்டினான். அது ஒரு வடநாட்டு நடிகையின் புகைப் படம். அவளுக்குக் கடிதம் எழுதிப் போட்டதில். அன்பளிப்பாக வந்து சேர்ந்ததாம்! அதன் மேல் அவளே சொந்தமாக ஒரு புரியாத மொழியில் கையெழுத்தையும் போட்டிருந்தாள்.

"இதை ஏன் வரவழைத்தாய்?"

"உனக்கு இதன் உள் அர்த்தம் தெரியாது. அசல் நம்முடைய 'மல்லிகா' போலவே இருக்கிறது பார். மூக்கும் முழியும் வாயும...ஆகா...கா..."

உண்மைதான்! அந்தப் படத்திலுள்ளவள் 'மல்லிகா' போன்றுதான் இருந்தாள். மல்லிகா... மல்லிகா...மல்லிகாவேதான்! எங்கள் தெருவுக்கு நாலைந்து தெருக்கள் தாண்டி அவள் இருந்தாலும் சுப்பிரமணியமும நானும் பேசிக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் அவள் எங்கள் உள்ளக் குகையிலிருந்து வார்த்தைக்கு வார்த்தை மெள்ள வெளியே வந்து தலை நீட்டாமல் இருக்க மாட்டாள்.

சாயங்காலம் அழகாக உடையுடுத்திக்கொண்டு கடைவீதிக்குப்போகும்பொழுதும் திரும்பி வரும்பொழுதும அவள் வீட்டு வாசல், ஜன்னல், மாடி முதலிய இடங்களில் எங்கள் முன்னே மின்னல் மாதிரி ஒளி விட்டு மறைவாள். அதுவும் இல்லையென்றால் சினிமாத் தியேட்டர், ஆற்றங்கரை, பள்ளிக் கூடத்திற்குப் போகும் வழி, திரும்பி வரும் வழி, இன்னும் எங்கெங்கேனும் அவளைக் கட்டாயம் சந்தித்து விடுவோம்.

இதில் இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா? அவளைச் சுப்பிரமணியமும் காதலித்தான். நானும் காதலித்தேன். நான் மல்லிகாவை இதயத்தில் சிறையிட்டு வைத்திருப்பதை அவனுக்குச் சொல்லவில்லை. தெரியவும் தெரியாது. ஏதோ அவளைப் பற்றிப் பேசுவான். வருணிப்பான்.நான் பின் பாட்டுப் பாடுவேன் அவ்வளவுதான். அவள் வீட்டு வாசலில் இருவரும் ஒரு நாளாவது அடி



எடுத்து வைத்தது கிடை யாது. எப்படி முடியும்?

"தம்பியப்பா! இந்தப் படத் துக்கு நாள் தவருமல் பூசை போடு. நான் ரெயில்வே ஸ்டே ஷனுக்குப் போய் ஒரு ஆளைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடு கிறேன்" என்று சொல்லி விட்டு வெளியேறினேன். "சிக் கிரமாக வந்துசேரு" என்ருன் சுப்பிரமணியம்.

வீட்டைவிட்டுக் கிளம்பிய நான நேராக ரெயில்வே ஸ்டே ஷனுக்குப் போய்ச் சேர்ந்தேன். 'ஹிகின்பாதம்ஸி'ல் ஒரு புத்த கத்தை வாங்கினேன். அப்படி என்னைச் செய்யத் தூண்டியது எது தெரியுமா? அந்நூலின் 'மல்லிகா' என்ற தலைப்புத் தான். சிமிந்திப் பலகையின் மேல் உட்கார்ந்து புரட்டிக் கொண்டிருக்கும்போது ஒரு கூக்குரல் கிளம்பியது எதிர்த் திசையிலிருந்து, "பிடி, பிடி விடாதே" என்று சத்தம் போட்டுக்கொண்டே ஓடி வந் தார் ஒருவர்.

தறிகெட்டு ஓடிய ஒரு பய லைத் தாவிப்பிடித்தேன். அவன் கையில் ஒரு மணிபர்ஸ் இருந் தது. அதை வாங்கிக்கொண்டு "நிற்காதே ஓடிப்போய்விடு" என்று சொன்னது தான் தெரியும். வாண்டுப் பயல் வண் டாய்ப் பறந்துவிட்டான்.

"என்னப்பா, அவனை விட்டு விட்டாயே?" என்ருர் சத்தம் போட்ட மனிதர், மிகவும் பதட் டத்துடன்.

"பாவம்! அவனைப் பிடித் தால் போலீஸ் ஸ்டேஷன் வரை யிலும் தாங்கள் போய் நிற்க வேண்டியிருக்கும். நமக் கென்ன? 'பர்ஸ்' நம்மிடம் வந்து விட்டது. இந்தாருங் கள்" என்று மணிப்பர்ஸை அவரிடம் கொடுத்தேன்.

"நன்றி" கூறியவர் என்னை ஹோட்டலுக்குள் இழுத்துக் கொண்டு போய் விட்டார். அவர் யாரையோ வழி அனுப்ப வந்திருந்த இடத்தில் இது நடந்து விட்டது. நான் பார்க்க வேண்டிய ஆசாமியும் வர வில்லை. இருவரும திரும்பிவரும் பொழுது ஒருவரையொருவர் விசாரித்துத் தெரிந்து கொண் டோம். அவர் என்னிடம் சொன்ன வீட்டு அடையாளங் கள், தெரு எல்லாம் 'மல்லிகா' இருக்கும் இடந்தான். 'பகி ரென்றது' அதைக் கேட்டதும். ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு நான் போனபோது கூடத்தில் உட்கார்ந்து எதையோ படித் துக் கொண்டிருந்த மல்லிகா வும் அப்படியே அயர்ந்துபோய் விட்டாள்.

"அப்பா: இருக்கிருரா?" என்று கேட்டேன்.

"உள்ளே இருக்கிருர், இப் படி வந்து உட்காருங்கள்" என்று சொல்லி எழுந்துபோய் விட்டாள்.

மனம் 'திக்' 'திக்' கென்று அடித்துக் கொண்டது. என் மானம், பெருமை எல்லாம் அப்பொழுது அவள் கையில் தான் இருந்தன. வாசலில் கோலம் போடும் காலை வேளை யில் அவளைச் சந்தித்தது, காதல் கடிதம எழுதி விசிறி யது, பள்ளிக்கூடம போகும் போது அவள் பேசாதிருக்கும் போதே நான் பேசியது—இப் படியெல்லாம் பழைய நிகழ்ச்சி கள் நெஞ்சில் ஒன்றின் மேல்

ஒன்றாய் வந்து விழுந்து கொண்டிருந்தன. அவரிடம் 'இவன் இப்படியிப்படியெல்லாம் செய்தான்' என்று ஒரு வார்த்தை அவள் சொல்லி விட்டால் என் கதி என்ன ஆவது? நான் நினைத்தபடி ஒன்றும் நடந்து விடவில்லை.

"வாருங்கள்" எனச் சொல்லிக்கொண்டே என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டேன். நல்ல உயிர் வந்தது!

பெண்களுக்குத்தான் எவ்வளவு சாகசம்! சில வேளைகளில் கொடூரமாக நடந்து கொண்டாலும், கொஞ்சம் இளகிய மனம் இருக்கத்தான் செய்கிறது! அப்படி அவர்கள் இல்லாவிட்டால் மனித வாழ்க்கையின் சரித்திரமே அர்த்தமில்லாதபடி எங்கே யாவது திசை மாறிப் போகவேண்டியது தான்.

அவரும் நானும் மிகவும் ரசமான விஷயங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்து விட்டு வெளியில் உலாவப் போனோம்.

இப்படியே எங்கள் நட்பு முறிவுபடாமல் தொடர்ந்து கொண்டே போயிற்று அவருடைய வீட்டில் தாராளமாகப் புழங்க ஆரம்பித்தேன். நாள் தவறினாலும், நான் அங்கே போகத் தவறுவதில்லை. பொழுது போக்க ரேடியோ, சீட்டுக் கச்சேரி, காரம், விளையாட்டு முதலிய சாதனங்கள் அவருடைய வீட்டிலே பயன்பட்டன. மல்லிகா முன்பெல்லாம் நடந்து கொண்ட விதமாக நடந்து கொள்ளவில்லை. மிகவும் நெருங்கிப் பழக ஆரம்பித்தாள். அவள் பெற்றோரும் அதைப்பற்றிக் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. முக்கியமான வீட்டுச் சாமானகளிலிருந்து, முக்கியமில்லாத பொருள்கள் வரையில் எல்லாம் என் வகையில் வந்து விழுந்து விட்டன. பலன் என்ன தெரியுமா? பணம் என கையையும், பையையும் கடித்ததே தவிர அவர்கள் அதைப் பற்றித் துளி கூட எண்ணவே இல்லை. கொஞ்சம் விலை உயர்ந்த பொருள் தேவை என்றால் மல்லிகாவே வாய் திறந்து கேட்க ஆரம்பிப்பாள். அவளே வாய்திறந்து கேட்கும்போது விலையைப்பற்றி என்ன?

இப்படிப் பல விதத்திலும் நான் கண்ணை மூடிக்கொண்டு செலவழித்து வந்தேனே தவிர, நான் எண்ணியபடி, இன்பக் கனவுகளைக் கண்டது கண்டபடி, மல்லிகாவை என்னுடைய கைதியாக்க முடியவில்லை.

ஒரு கடைக்கண் வீச்சு; ஒரு புன்சிரிப்பு; கேலியும் குறும்பும் நிறைந்த பேச்சுக்கள்; இவை தவிர எனக்கொன்றும் எட்டிவிடவில்லை.

ஆறு மாதங்கள் வரையில் என் அறிவே சூனிய வெளியில் சுழித்துச் சுருண்டு கிடந்தது. சுப்பிரமணியத்திடம் இதைப் பற்றி வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அவனும் 'மல்லிகா'வை மறந்துவிட்ட மாதிரியே நடந்துகொண்டான்.

இப்போது உள்ள நேரம்தான் இருக்கும். அவர்கள் வீட்டிற்குள் நான் நுழைந்தபோது அவர்—மல்லிகாவின் தந்தை—

என்னைக் கூப்பிட்டுத் "துரைசாமி! நீ அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவது நன்றாக இல்லை. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் என்னென்னவோ பேசிக்கொள்கிறார்கள்; என் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை." என்று என் நட்புக்கே நன்றி கூறிவிட்டார். எப்படி இருந்திருக்கும் என் மன நிலை!

காதல் களத்திலேற்பட்ட மகத்தான தோல்வியைத் தாங்க முடியாதபடி மனம், நைந்து வளைந்து போய்விட்டது. அறையில் கிடந்து விம்மினேன்; சந்தடியில்லாத இடங்களில் வாய்விட்டுப் புலம்பினேன். அந்தப்பக்கமே நான் நடக்க முடியாதபடி செய்துவிட்டார்கள் அவர்கள்!

வேதனையை விலைகொடுத்து வாங்கிய என்னைக்கண்டு பணத்தைக் கொட்டிப் புத்திபடித்துக்கொண்ட என் பேதைமையைக்கண்டு, பிறர் சிரித்தார்கள். அப்படிச் செய்தவர்களில் சுப்பிரமணியமும் ஒருவன்!

நான் அழுதேன். அவர்கள் சிரித்தார்கள்!

நெடுநாட்களுக்குப் பிறகு, சுப்பிரமணியம், கண்ணீரும கம்பலையுமாக வந்து சேர்ந்தான் என்னிடம். விசாரித்த போது மல்லிகாவின் காதலில் படுதோல்வி யடைந்ததாகக் கூறி அழுதான். அவனைக் கண்டும் பிறர்சிரித்திருக்கலாம். அப்படிச் செய்தவர்களில் நானும் ஒருவன்.

அவன் அழுதான் — நாங்கள் சிரித்தோம்!

பழைய கதைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டதும்தான் உண்மை புலனாயிற்று. மல்லிகாவின் குடும்பம் ஒரு பெரிய சிலந்தி வலை. அதன் நடுவில் அழகுடன் சுழலும் மல்லிகா ஓர் வஞ்சகச் சிலந்தி! காதல், காதலென்று பிதற்றிக்கொண்டு அதிலே போய் விழுந்தோம் அவனும் நானும்! நல்லவேளையாக உயிர் மட்டும் பிழைத்தது! இல்லாவிடில் உன்னுடன உட்கார்ந்து நான் பேசிக்கொண்டிருக்க முடியுமா? — இவ்வாறு கதையை முடித்தான், துரைசாமி.

"என்னடா இது, என் கதையைப் போல் அல்லவா இருக்கிறது நீ சொல்லும் கதையும?" என்று வாய்க்குள்ளாகவே முனகிக் கொண்டான் நாகலிங்கம்.

"ஆமாம்!"

"உண்மையாக நடந்தது தானா?"

"உண்மையோ பொய்யோ, இனிமேல் காதல் கீதல் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு திரிந்தாயோ......... அவ்வளவு தான் நான் சொல்லுவேன்...... ஆமாம்......"

நாகலிங்கம் திடீரென்று எப்படி வந்தானோ அதைப் போலவே திடீரென்று போய் விட்டான். கதைக்கு விஷயமகப்படாமல் தடுமாறிக்கொண்டிருந்த துரைசாமி காகிதமும் பேனாவுமாகத் தோன்றினான்! அரைமணி நேரத்தில் "சிறுகதை" தோற்றம் பெற்றது.



அழகின் கூத்து

மின்னலிடை நெளிக்கின்றாள் மையல் ஏற
    மிடுக்காகத் தென்றலிலே இசைத்து மேகப்
பின்னலிலே சடைப்பில்லை வயிரக்கீற்றுப்
    பிறைசூடிப், பிச்சிப்பூக் கொத்து மீன்கள்
உன்னதமாய்ச் செருகி, யவை உதிர்த்த தன்மை
    உணராமல் இருக்கின்றாள் உச்சி வானில்!
என்னத்தை எழுதுவதென் றெண்ண மின்றி
    ஏதேதோ வண்ணத்தைப் பூசுகின்றாள்!

வில்வளைப்பாள் வானத்தில் கடலின் நீரில்
    விளையாடி அலைக்கரத்தைக் கொட்டிப் பச்சைப்
புல் நெளியும் பட்டாடை போர்த்தி ஆற்றுப்
    புனலருகே நிற்கின்றாள்; மலையில் உள்ள
அல்நிறத்துக் குகையொளிந்து மான்கள் கண்ணில்
    அழகியவள் மருள்கின்றாள்; தமிழ் எழுத்தின்
சொல்லழகில் நடமிட்டுத் துள்ளி ஓடும்
    தண்ணீரில குதித்துமிகக் களிப்படைவாள்!

செம்பிதழில் இதழுடுக்க ஆசைப்பட்டுக்
    கீழ்த்திசையில் அவள்வருகை பார்க்குங்காலை
வம்புக்கென்றே வருவாள் குமரித் தென்றல்!
    வந்துடலை வருடிடுவாள்; பிடிக்கக் கையைத்
தெம்புடனே நீட்டு முனம் ஓடித் தென்னைச்
    சிறுபூவில் சிரிக்கின்றாள்; மறைந்து வண்ணக்
கும்பிருட்டுள் குமரியவள் கூத்துக் காதல்,
    குறைவற்ற கலைச்செல்வம் கொட்டுதம்மா!

— சு. வழித்துணைராமன்

அவா



மைக்குழல் வானின் மலர்ப்பிறையே
மனத்தில் வாழும் மங்கையவள்
மைக்குழற் கடலில் நீந்திடவே
மனமே மிகவும் துடிப்பதனுல்—நானோர்
மணமலர்த் தொடுப்பாய் மாறேனே?

மார்பிடைத் துவளும் பொன்னணியே!
மலர்ந்திடு மென்மையின் மலர் மொட்டின்
சீரெழில் தொட்டுச் சுவைத்திடவே
சித்தம் மிகவும் துடிப்பதனுல்—நானும்
சிறந்தவோர் அணியாய் மாறேனே?

செவ்விதழ் நிகர்த்த தாமரையே!
சிரிப்புடன் உன்னை முத்தமிடும்
கொவ்வை இதழைச் சுவைத்திடவே
குமுறும் என்னிதழ்த் தன்மையதால்—நானும்
குளிர்தா மரையாய் மாறேனே?

மின்னும் ஒளிகொள் பட்டுடையே!
மீறிய அவாவின் ஆற்றலினுல்
கன்னியின் உடலைக் கட்டிடவே
கருத்து மிகவும் துடிப்பதனுல்—நானோர்
பொன்னிற உடையாய் மாறேனே?

— "ரவி"

உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு



19. சீதாலட்சுமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

கரும்புத் தோட்டத்தில் போய், மேய்ந்து கொண்டிரு என்றால் யானை அழுது கொண்டா நிற்கும்? என்றாலும் என் கற்பின் தூய்மையைக் காட்டக் கொஞ்சம கண்ணீர் வடித்தேன்: என நீலிக் கண்ணீரைக் கண்டதுமே அவரது நெஞ்சு நெகிழ்ந்திருக்க வேண்டும்; என்னைப் பரிவோடு அழைத்துக் கொண்டு ரயில் நிலையத்திற்குச் சென்றார். அங்குதான் நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த "இராவணன்" நின்று கொண்டிருந்தான்.

"என்ன சார்! எந்த ஊருக்கு?" என்று கேட்டுக் கொண்டே எங்கள் அருகில் வந்தான் அவன். நல்ல உயரம்! பிரமாதமான அழகு இல்லாவிட்டாலும் எந்தப் பெண்களையும் வசிகரப் படுத்தும் கவர்ச்சி அவனிட மிருந்தது. தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொள்ளும் திறமை இருந்தது. என் கணவரிடம் பேசிக் கொண்டிருந்தான். நானோ அவனை 'எடை' போட்டுக் கொண்டிருந்தேன்.

பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அவன் திடீரென்று, 'சார் உங்கள் மணிபர்ஸ்—அதோ அந்தப்பயல்—'' என்று கத்தினான். தூரத்தில் ஒருவன் ஓடிக் கொண்டிருந்தான்.

என்கணவர் சட்டையைத் தடவிப் பார்த்தார். மணிபர்ஸ் உண்மையிலேயே 'ஜோப்படி' ஆகிவிட்டது. அவ்வளவுதான்! சிராமன் மாயமானைத் துரத்திக் கொண்டு ஓடியதைப் போல, என் கணவர் மணிபர்ஸ் திருடிய மாரிமுத்துவைப் பின் தொடர்ந்தார்.

"ஏனம்மா, உங்க புருஷர் தானே அவரு?" என்றான் அவன்.

"ஆமாம்" என்றேன் சுருக்கமாக.

"எந்த ஊருக்குப்போகனும்!" என்றான்.

"திருநெல்வேலிக்கு?" என்றேன்.

"ரொம்பவும் நல்லதாய்ப் போச்சு! நானும் அங்குதான் செல்கிறேன். துணைக்குத் துணையாய்ப் போச்சு!" என்றான்.

சென்றவரோ, நெடுநேரமாகியும் திரும்பவில்லை, நானும் அவர் வரும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. ரயில் வந்ததும் அவ

ஞேடு வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். அவன் ஏதேதோ கூறிக்கொண்டே வந்தான். தான்பெரிய பனக்காரனென்றும், தனக்குப் பங்களாக்கள் பல உண்டென்றும்.........இன்னும்என்னென்னவோ-- அவனுடைய எண்ணம் எது வேன்று நான் தெரிந்து கொண்டேன். நானும் என்கணவன் வீட்டிலிருந்து வாழா வெட்டியாக என் தாய்வீடு செல்ல விரும்பவில்லை. அங்கு மட்டும் என்னை அருந்ததிஎன்று கொண்டாடப் போகிருர்கள்? ஆகவே அவன் தீர்மானப்படி மதுரையில் இறங்கச் சம்மதிததேன. அவனே அங்கு என்னைச் செக்கடிச் சிங்காரத்தோட்டத்தில் சிறைவைத்தான்.

அசோக வனத்திலே சிறை வைக்கப்பட்ட சிதாவை மீட்க ராமன் குரங்குப்படையுடன் வந்தானும். ஆனல் என் கணவரைப் பற்றியோ. அல்லது அவர் என்னை மீட்க எடுத்துக் கொண்ட முயற்சிகளைப பற்றியோ, எனக்கு ஒரு தகவலும் தெரியாது. ஒருவேளை 'விட்டது சனியன்' என்றிருந்திருக்கலாம்! நானும் செக்கடியில் வாழ்ந்த நாளவரைகும் என் கழுத்திலே கட்டப்பட்டிருந்த ஒரு முழக் கயிற்றுக்கு உரியவரைப பற்றிக் கனவிலும நினைககவே இல்லை! ஏன்? நினைக்கவே நேரமில்லை! அவ்வளவு ரம்மியமான வாழ்க்கை!

வாடிக்கையாக வரும் உள்ளூர் மைனர் கூட்டத்தைத் தவிர்த்து அவ்வப்போது விஜயம செய்யும பெரிய பெரிய அரசியல் தலைவர்கள், ஆ ஃஸ்டுத் தியாகிகள், சங்கீத சாகரங்கள், காலட்சேப வாரியார்கள் எல்லாம் என் காலடியிலே விழுந்து கிடப்பார்கள். 'பெரிய பெரிய அறிவாளிகளும், அரசியல் மேதைகளும் இரவு நேரத்திலே, வெறிநாய்களாக மாறிவிடுகிருர்கள்' என்று யாரோ ஒரு அறிஞர் சொனனதாக ஞாபகம்! அதன உண்மையை என் வாழ்க்கையிலே கண்டேன். கண்ணியமானவர், உத்தமமானவர் என்பது ஊரிலே அவர்களுக்குப் பெயர். நாட்டின் கலாச்சாரத்தை அரித்துத்தின்னும் புழுக்கள் நாங்கள்.

ஆடிவீதியில் தான் ஆனந்தநாதர், பக்தர்களுக்கு அவதார புருஷராகக் காட்சியளிப்பார். அவரது உண்மைச் சொரூபத்தை என் வீட்டிலே் காண வேண்டும். சிங்கத்தை வீழ்த்துவதற்குச் சீறியெழும காண்டாமிருகம் எப்படியோ அபபடிக் காட்சியளித்தார். அதைக் காமம் என்று சொன்னாலும் சரி, கட்டுக்கடங்காத உணர்ச்சியின வெறி என்ருலுமசரி, எனக்கு ஒன்றுதான, ஏனெனில் என்னுடைய ஒரே லட்சியம், என உள்ளத்தின் அடிப் பரப்பிலே கொழுந்து விட்டெரியும் தீ—அணையவேண்டும் என்பதுதான். வயிற்றுப் பிழைப்புக்காகவே இந்தத் தொழிலுக்கு வந்தவனஜா, மூன்றே மாதத்தில் மூனறிலொரு பாகமாக மாறிவிட்டாள் என்பது எனக்குத்தெரியும். ஆனல் என்னைபபொறுத்தமட்டில், வருமானத்தைக் கருதி இதில் இறங்கவில்லை. ஐம புலன்களில் மட்டுமன்றி, என் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் கொப்பளித்துக் கொண்டிருக்கும் இன்பத்துடிப்புக்கு ஒரு முடிவு காணவேண்டும்!

மூச்சு! சிட்டுக்குருவியைப் போல இருபத்தி நான்கு மாதங்களும் பறந்து விட்டன. இடையிலே எத்தனையோ மாறுதல்கள்! பக்கத்து வீட்டுச் சுப்பாயி— கொஞ்சம் பாடத் தெரியும்— அவள் சினிமா உலகத்தின் கோகிலமாக உலவுகிறுள். இப்பொழுது, என் வேட்கையும் ஒருவாறு தணிந்திருந்தது! ஆனால் முடிவில்?

"என் உடம்பில் ஏதோ ஒரு வித அசதி தெரிய ஆரம்பித்தது. இடைவிடாத உழைப்பு-- இரண்டு வருட ஓட்டம்—யந்திரத்திலே ஏற்படும் தேய்மானத்தைப் போல---என்று அசட்டையாக இருந்து விட்டேன். ஒருநாள் கண்ணுடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது திடுக்கிட்டு விட்டேன். கண்களைச் சுற்றி, குழிவிழுந்து பார்ப்பதற்கே விகாரமாயிருந்தது. கீழே விழுந்து நெளிந்துபோன பித்தளைக் குடத்தைப் போல, உருண்டையாயிருந்த என் முகம் உருமாறிக் காட்சியளித்தது. காலம் கொடுத்த சவுக்கடியின் தழும்புகளைப் போலச் சில கீறல்கள்! இவையெல்லாவற்றையும் விட இன்னொரு விஷயம்தான் என் மனதை மிகவும கலக்கியது. கழுத்துக்குக் கீழே, வட்டமாக, ஒரு இடம் மிகவும் பளபளப்பாகத் தெரிந்தது. ஆனால் அதைப பார்ப்பதற்கே மிகவும் பயங்கரமாயிருந்தது. அதைக்கண்டதுமே என் உடம்பு ஒரு கணம் புல்லரித்து விட்டது. ஏதோ ஒரு நோய்--தனது வருகையை அறிவிக்க ஏற்படுத்திய முன அடையாளம--அது மேகமோ—சலமடைந்தேன்.

"நான்பயந்தது போலவே காரியங்கள் மளமள வென்று நடைபெற்றன. என்னைக் கொள்முதல் செய்து கொண்டு வந்தவன் ஒருநாள் புதியதோர் உருப்படியுடன் என் வீட்டுக்குள்ளே வந்தான். செக்கடியின் சமபிரதாயப்படி நான இந்திரலோகத்திற்கு விரட்டப்பட்டேன். இந்திரலோகம்—விழுந்து கடிக்கும் வெறி நாய்கள், உழைத்த உழைப்பிற்குக் காசு கேட்டால் எட்டி உதைக்கும் கழுதைகள் நிறைந்த பட்டி--- அங்குதான் ஆரமபத்தில்நான், செய்த தவறு எத்தகைய பெரிய அழிவுக்கு வித்தாக அமைந்துவிட்டது எனபதை உணர்ந்தேன.

"ஊருக்குச் செல்லலாமா என்று யோசித்தேன். என கணவரைப்பற்றி எண்ணினேன். எனக்கு அழுகை அழுகையாக வந்தது. எபபடி இந்த ஊத்தைச் சரீரத்தோடு அவர் முன்னுல் செல்வது? நான் உளுத்துப்போன மாமிசப் பிண்டம்! ஒன்றுக்கும உதவாத வெறும தசைக் கூடு! சண்டாளி!

"ஆனால் அழுது கண்ணீர் வடிபபதால் மட்டும் அவமானத்தின கறை மறைந்து விடப் போவதில்லை. திருமபிச் சென்று சமூகத்தின் கொள்ளிக் கண்களுக்கு இரையாவதைவிட இங்கேயே இருப்பது என்று முடிவு செய்தேன. ஆனால் பிழைப்புக்கு வழி! யோசித்தேன் பழகிப்போன தொழிலைத் தவிர வேறு தெரியாது. கடைசியில், உடலை, வருமானத்தையெல்லாம் அலட்சி

யம் செய்துவிட்டு, எப்படி என் ஒரேலட்சியமான உள்ளப் பசியைத்தீர்ப்பதற்குப்பொது உடமை ஆக்கினேனோ, அதேஉடலை வியாபாரப் பொருளாக மாற்றினேன். நானோ அழுகிய பண்டம்! ஆனாலும் இதை வைத்துத்தான் பிழைப்பு நடந்தாக வேண்டும்!

"மாலை நேரமானவுடன் என் அலங்கார வேலைகளை ஆரம்பிப்பேன். முகத்திலே ஏற்பட்ட கோடுகளை மறைக்கச் சாயத்தைப் பூசிக்கொள்வேன், தலை நிறையப் பூக்கள் — நாற்றத்தைத் தவிர்க்க — கையிலே கண்ணாடி வளையல்கள்— இத்தனை கோலத்தோடு, தோப்பை விட்டு வெளியேறி, வீதியிலே, ஒரு இருட்டான இடமாகப் பார்த்து, நின்று கொண்டு, 'கிராக்கி' களுக்குக் காத்திருக்க வேண்டும். நாலணா முதல் ஒரு ரூபாய் வரைக்கும "ஏதோ" கிடைக்கும். இதிலே குடிசைக் காரனுக்கு வாடகை வேறு!

"பயங்கரமான வாழ்க்கை! நரக வேதனை தான்! என் ரத்தத்திலுள்ள அணு வெல்லாம் செத்துவிட்டன. என் பழைய அகங்காரம்—என் வேட்கைக்கு ஈடு கொடுக்க யார் உள்ளார்கள் என்றிருந்த இறுமாப்பு— எல்லாம் தவிடு பொடியாகி விட்டன. கொத்தும் கழுகுகள், ரத்தத்தை உறிஞ்சும் கரடிகள், மனித உருவில் வரும் "டார்வின்" சிருஷ்டிகள் — இத்யாதிகளோடு நான் போராடும் பொழுது, என் கணவரின் நினைவு வந்து விடும். அவரின் கண்ணியமான போக்கு—சாந்தமான முகம் — கள்ளமில்லாத உள்ளம்—இவற்றை எண்ணியவுடன் என் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீரைச் சிந்தும்!

"அத்தான்! — அன்பிலே வடித்தெடுத்த இன்பச் சொல் —என் கணவர் ஒருவருக்கே உரித்தான உள்ளத்தின் ஓசை! ஆனால் இன்றோ, என் வயிற்றைக் கழுவ, 'வாடிக்கை' களுக்கு நான் சூட்டும் காகித மலர்! 'பரட்டை' களையும் 'பம்பை'களையும் பார்க்கும் போது, பக்கத்து வீட்டுக்காரியுடன் போட்டியிட்டுக்கொண்டு கூவும் கூக்குரலாகிவிட்டது அது.

"அன்று—நான் கைது செய்யப்பட்ட தினம் — வழக்கம் போலவே 'வருவோர்களுக்காக'க் காத்துக்கொண்டிருந்தேன். வீதியிலே வேகமாக ஒருவர் போய்க்கொண்டிருந்தார். அவரின் முகத்தைக் கவனித்து விட்டேன்: அவ்வளவு தான் என் உடல் பூராவும் மின்சார ஓட்டம் பாய்ந்தது. என்னையறியாமலேயே என் வாய் 'அத்தான், அத்தான்' என்று அலறியது.

"என் கூக்குரலைக் கேட்ட அவர் மிரண்டு விட்டார். வேகமாக நடந்தார். என் கால்கள் என்னையறியாமல் பின் தொடர்ந்தன. மீண்டும் கதறினேன். "அத்தான்! அத்தான்!"

"அப்பொழுது தான் எதிரே வந்த கான்ஸ்டபிளிடம் அடைக்கலம் புகுந்தார் அவர். வெறி கொண்டவளைப்போல விரட்டிவரும் என்னை நிறுத்தினான். தெருவில் சென்றவரை விபச்சாரம் செய்ய அழைத்ததாக என் மீது குற்றப்பளு ஏற்பட்டது. அதற்கு அவர் சாட்சி கூறினார்.

"உண்மையிலேயே அன்று நான் அத்தான் என்று அழைத்துக் கொண்டு ஓடியது என் கணவரைத்தான். நான் கைப்பிடித்த மணாளனைத்தான் அன்று கண்டேன். ஆவேசத்தால் உந்தப்பட்டேன். செக்கடியை விட்டு வெளியேறிய நாள் முதல் அவர் நினைவு நெஞ்சிலே படமெடுத்தாடிக் கொண்டிருந்ததால் என்னை அறியாமலேயே என்வாய் அழைத்தது. — ஆனால் விபசாரத்திற்கல்ல.

"அவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு கதற வேண்டும் போல் இருந்தது. என்னை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டாம்—மன்னிக்க வேண்டாம். இருந்தாலும் அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. பசியோடிருப்பவன, தனக்குக் கிடைக்காது என்று தெரிந்திருந்தும பழக்கடையை முறைத்துப் பார்க்கிறானல்லவா? அதைப் போலத்தான்!

"ஆனால்? அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை நான் அவ்வளவு கோரமாயிருந்தேன். அவர் என்னைத் தெரிந்து கொள்ளும் வகையில் என் உருவம் அமைந்திருக்கவில்லை. என் விகாரத்திரை அவர் கண்களை மறைத்து விட்டது. இப்பொழுது அவருடைய கண்களுக்கு நான் தேவடியாள்! குச்சுக்காரி! ஆம். உண்மையும் அதுதானே!



மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

"ஒரு வேளை அவர் தன் மனைவி சீதாவைப்பற்றி இன்னும் நல்ல அபிப்பிராயமே கொண்டிருக்கலாம். சீதாவுக்காகவே ஒரு வேளை அவர் இப்படி ஊர் ஊராய் அலைந்து கொண்டிருக்கலாம். ஆனால் நான்தான சீதா என்று தெரிந்தால்............?

"யோசித்தேன். சீதா நான்தான் என்று கூறி அவருக்கிருக்கும் கொஞ்சநஞ்ச அமைதியையும் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அவரைப் பார்க்க வேண்டும் என்றிருந்தேன். பார்த்துவிட்டேன். இனிக்கவலையில்லை. 'சீதா எங்கேயோ குளம் குட்டையில் விழுந்து செத்துவிட்டாள்' என்றாவது அவர் திருப்தியடையட்டும். ஆகவே, என்னை இன்னாரெனக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற நினைப்பை மாற்றிக் கொண்டேன். தண்டனையை ஏற்கத் தயாரானேன. என் கணவராலேயே சாட்சி சொல்லப்பட்டு, அவரை விபசாரத்திற்கு அழைத்ததற்காக இப்பொழுது தண்டனை அடைந்திருக்கிறேன. இவ்வளவுதான் இதுவரை நடந்த கதை — இனி எப்பொழுது தொடருமோ?" சீதா, 'சீதா விகாரத்தைக் கூறி முடித்து விட்டாள். நான் கூட இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்

தேன். நண்பர்கள் மட்டுமல்ல, நாடே நகைக்கிறது. இப்படிப் பட்ட நலிந்த வாழ்வினரைக் கண்டு. அவளைப் பாமர மொழியிலே அழைத்தால், பச்சைத் தட்டுவாணிதான். ஆயினும அவளுக்கும் இருதயம் இருக்கிறது. அதிலே, இறுமாபபும் காமக்கொழுப்பும் ஊன்றிய விகார வடுக்கள மறையவில்லை. ஒரு இரவில் மட்டும் இரண்டு மூனறு 'சிதா'க்களைத் தேடி 'இன்பச் சகதி'யில் புரள எண்ணித் திரியும் 'செக்கடி ராயன்' களையும் நாம மறந்து விட முடியாது. ஆனால், நடைமுறையிலே சிறைவாசம் சீதாக்களுக்கு! களிப்பும், கண்ணிய மானவன் என்ற பெயரும் வெறிபிடித்த 'காலி கூலா'க்களுக்கு!

ரோஜாவில் மணம் இருக்கிறது என்பறகாக அதைக் கசக்கி முகர்வதா? தேன் வேண்டும் என்பதற்காகக் கூட்டையே பாழாக்குவா? செக்காட்டி எண்ணெய் எடுப்பது போல, இன்பத்தைப் பிழிந்து எடுத்துப் பெற நினைபபது பைத்தியக்காரத்தனம் என்று தான கூறுவேன். இல்லறத்தை நல்லறமாக நடத்த வேண்டும் என்று உபதேசிக்கப்படும இந்த நாளிலும் கூட இங்கு 'ரோமாபுரிகள' உண்டாகின்றன, அல்லது உண்டாக்கப்படுகின்றன என்றால் நாடும் நாகரிகமும எவ்வளவு சீர்கெட்டுப் போயிருக்கின்றன என்பதை நீங்கள் உணர வேண்டும் என்பதுதான் என ஆவல்!

வணக்கம்

வழிப்போக்கன்

சிறுகதை ஆசிரியர்

மாபஸான்

-மு. அண்ணாமலை-

2

"இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படித்துப் பாருங்களேன்" என்று டால்ஸ் டாயிடம் ரஷ்யக் கவிஞர் இவான் துர்கானேவ் ஒரு பிரஞ்சுப் புத்தகத்தைக் கொடுத்தார்.

"என்ன அவ்வளவு உயர்ந்த புத்தகமா?" என்றார் டால்ஸ் டாய்.

"பரவாயில்லை. படிக்கலாம். இந்த ஆசிரியர் உங்களைப் பற்றி மிக உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறார்." என்று சொன்னார் கவிஞர்.

கொடுக்கப் பட்டது மாப ஸானின் சிறுகதைப் புத்தகம். கொடுத்தவர் மாபஸானின நண்பர் ரஷ்ய நாட்டின் சிறந்த கவிஞர். உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர். அப்பொழுது மாபஸானுக்கு வயது முப்பத் தொன்று; டால்ஸ்டாய்க்கு வயது ஐம்பத்து மூன்று.

டால்ஸ்டாய், இவான் துர்கா னேவ் சொன்னதற்காக இரண் டொரு கதைகளைப் படித்து விட்டுப் போட்டுவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதைத் தொட்டார். அப் பொழுதுதான் மாபஸானிடம் திறமையிருக்கிறது என்பதை உணர்ந்தார். தன் மனத்தைக் கவர வல்ல பல கதைகள் அதிலே இருக்கக் கண்டார். ஒரு குழந்தை 'தன் அப்பா யார்?' என்று கேட்கின்ற கதை(*Simon's papa*)யை அவர் பெரிதும் சுவைத்தார். மாப ஸான் வெறும் பேர்பெற்ற எழுத்தாளன் மட்டுமல்ல; திறமையுள்ள எழுத்தாளனும் கூட என்பதை அறிந்தார். அவனுடைய நாவல் எல்லா வற்றையும் படித்தார். ஆனால் எல்லாவற்றையும் குறை கூறினார். மாபஸானின் சிறு கதைகளை ரசித்த அளவுக்கு அவர் அவனது நாவல்களை ரசிக்க வில்லை; அல்லது அவ ரால் ரசிக்க முடிய வில்லை. ஒரே ஒரு நாவலை அவர் பெரி தும் போற்றினார். 'யுனிவீ' (*Une vie*) எனனும் அவனது முதல் நாவல் தான் அது. பெண்ணின வாழ்க்கையைப் பற்றிக் கூறியது அந்நாவல். விக்டர் ஹ்யூகோ எழுதிய 'ஏழைபடுமபாடு' என்ற நாவ லுக்குப் பின்னர் வெளிவந்த பிரஞ்சு நாவல்களில் இந்த 'யுனி வீ' என்ற நாவல் தலை சிறந்ததாகும் எனறு அவர் சொல்லுகிறார்.

O

தருமம் பல சமயங்களில் இவ னுடைய நாவலில் தோற்று விடுகிறது. காரணம் 'இந்த உலகம் அத்தகையது. இங்கே தர்மத்திற்கு வெற்றியில்லை' என்று மாபஸான் கருதியிருக்க வேண்டும். ஒரு கதையையோ,

அல்லது ஒரு நாவலேயோ படிக்கும்போது, அந்த ஆசிரியர் எந்தக் கதாபாத்திரங்களுக்குச் சார்பாகவும் இரக்கமுள்ளவராகவும் வருகிறார் என்பதை நாம் எளிதில் கண்டுபிடித்துக்கொள்ளலாம். மாபஸான் சில சமயம் அநியாயத்திற்குச் சார்பாகவும் ஆதரவும் காட்டினன்; அவனிடம் சரியான நிதானம் கிடையாது.

"மாபஸான் நன்மை என்பது என்ன? தீமை என்பது என்ன? என்று சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவனிடம நிதானம் இல்லை. அதர்மத்திற்கு வக்கீலாக இருக்கிருன். அவனது பல கதைகளில் அதர்மம வெல்லுகிறது" என்று டால்ஸ்டாய் இதை நோக்கியே குறிப்பிடுகிருர். இவனது நாவல்களைப்பற்றி அவர் விமரிசனம் செய்யும்போது, "இந்தக் கடைசி நாவலில் கதை உறுப்பினர்கள் முரடர்களாகவும், ஒழுங்கற்றவர்களாகவும், காவாலிகளாகவும இருக்கிருர்கள். இந்தக் கொடியர்களின் குறிக்கோளுக்கு ஆசிரியர் இரக்கமும் ஆதரவும் காட்டுபவராகக் காணப்படுகிருர்! 'இன்பம் என்பது உடலாசைப் பூர்த்தி' என்ற ஒன்றைத்தான் இந்த நாவலிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது" என்று எழுதுகிருர்.

டால்ஸ்டாய் மாபஸானைப் பற்றி எழுதுகிற அனைத்தையும் ஏற்றுக்கொண்டால் மாபஸானிடம் நாம் நெருங்க முடியாது. டால்ஸ்டாயின் கலைக் கண்ணேடு பார்த்தால் மாபஸானை ரஸிக்க முடியாது.

O

மனித வாழ்க்கையை இரண்டு கூருகப் பகுக்கலாம்: ஒன்று மனிதன் மனிதனுக வாழ்வது. மற்ருென்று மனிதன மிருக வாழ்க்கை வாழ்வது. இரண்டும் கலக்காமல் வாழ்க்கை இல்லை. உலகம இல்லை. மனிதன் மிருக வாழ்க்கை நடத்தும் போது மிருகத்திற்கும் அவனுக்கும வேற்றுமை இல்லை. மனிதனும ஒரு சிரிக்கும மிருகம் தானே! பகுத்தறிவு, ஒழுக்கம் இந்தக் கண் கொண்டு பார்த்தால் மிருக வாழ்க்கை ஊழல் மலிந்ததாகவே படும். உலகம் ஊழல் இல்லாமல் இருக்கிறதா? ஒழுக்கம் அறிவு இரண்டையும், மனிதன் வசதி, மிதவை, என்பனவற்றிற்குப் பலியிட்டு விடுகிருன். மாபஸான் மனிதனின் மிருக வாழ்க்கையைத் தன்னுடைய கதைகளில் காட்டினன். ஆர்தர் சைமன்ஸ் சொல்லுவது போல, "மாபஸான் நம்முடைய இயற்கைக்கு மிருக உணர்ச்சி தான் அடிப்படை என்று கண்டான். மனிதனின் மிருகப் பகுதியை (*Animalside of the man*) அவன் கதைகளில் வர்ணித்தான். எடுத்துக் கொண்ட விஷயத்தை, இவ்வளவு விஷய ஞானத்துடன் கவர்ச்சிபட வேறு எந்த எழுத்தாளனும் சித்தரித்ததில்லை."

O

இவனுடைய கதைகளில் பலரின் கோபத்திற்கும் நிந்தனைக்கும் ஆளாகாத கதைகளும் உண்டு.

ஒருவன் தன் தங்கையைச் சிறு வயதில் விட்டுப் பிரிந்து கடற் படையில் சேருகிருன். பல ஆண்டுகள் கழித்துத்



தாய்நாட்டுக்குத்திரும்புகிறான். தன் தங்கை என்ன ஆனாள், எப்படி இருக்கிறாள் என்பதொன்றும் தெரியாது. கப்பலை விட்டு இறங்கியதும் ஒரு விபசார விடுதியிலே அந்த இரவைக் கழிக்கின்றான். சடற்படையினர் அனைவரும் ஆனந்தமாகக் குடிக்கின்றனர். ஆடுகின்றனர். பாடுகின்றனர். ஒவ்வொருவனும் ஒவ்வொரு விலைமாதோடு திரிகிறான். அவனும் ஒருத்தியின் மடியிலே படுத்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறான். பேச்சின் இடையிலே அவன் திடீரென்று வெறி பிடித்ததுபோல் எழுந்து பக்கத்திலிருந்த மேசையைத் தள்ளி நொறுக்கினான். மதுக் கிண்ணத்தைக் கீழே விட்டெறிகிறான், அங்குமிங்கும் ஓடினான்.

ஆம். யார் மடியில் படுத்திருந்தானோ அவள் தான் அவனுடைய தங்கை என்று தெரிந்து கொண்டது தான் காரணம். கீழே விழுந்து புரண்டான். ஒவ்வொருவனிடமும் ஓடி 'என் தங்கை' 'என் தங்கை' என்று கத்துகிறான். அவனது தோழர்கள் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகக் கருதுகிறார்கள். ஒருவன் ஒருத்தியை அப்பொழுதுதான் முத்தமிடப் போனான். உடனே அவன் ஓடி அவனை ஒரு குத்து விட்டுக் கீழே தள்ளினான். "இங்கே இருக்கிற ஒவ்வொரு விபசாரியும் யாராவது ஒருவனுடைய தங்கையாகத்தானே இருப்பாள்" என்று கேட்டுக் கொண்டே ஓடுகிறான்.

இந்தக் கதையைத் தழுவி ரஷ்ய மொழியில் டால்ஸ்டாய் எழுதியிருக்கிறார்.

○

ஒரு பள்ளிக்கூடத்து ஆசிரியனைப்பற்றி (Moiron) என்ற கதை.

அந்த ஆசிரியனுக்குக் குழந்தைகளின் மேல் அதிகமான வாஞ்சை யிருந்தது. ஆனால் அந்தக் குழந்தைகள் எதிர்பாராத விதமாக ஒன்றன்பின் ஒன்றாக இறந்து விடுகின்றன. ஏழை ஆசிரியரின் மனம் பெரிதும் உடைந்து விடுகிறது. கடவுளை வைகிறான். உலகத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையையும் கொன்றுவிட விரும்புகிறான. தன்னுடைய பள்ளிக்கூடத்திலே படித்த குழந்தைகளில் ஏழு குழந்தைகளுக்குத் தின்பண்டம் கொடுத்தான். அந்தத் தினபண்டத்தில் கண்ணாடித் துகள்களைக் கலந்து விட்டான். யாருக்கும் தெரியாமல் குழந்தைகளைக் கொலை செய்து கொண்டு வருகிறான்.

ஊராரும் போலீசாரும் அந்த ஆசிரியன் மீது எள்ளளவும் சந்தேகப்படவில்லை. ஏழை ஆசிரியன் தானே என்று நினைத்தனர். ஆனால் பயங்கர

மான ராட்சஸ வேலை நடந்து கொண்டுதானிருந்தது.

மனிதன் எப்படித் திடீரென்று ராட்சதனாக மாறி விடுகிறான் என்பதை இக் கதை காட்டுகிறது. சாதுவாகத் தூய வாழ்வை நடத்திக் கொண்டிருந்த கதாபாத்திரம் ஒரு பயங்கரமான நச்சுக் கொடுக்காக மாறுகிறது.

○

மாபஸானின் முப்பதாவது வயதை அவனது இலக்கியப் புகழின் உச்சிக்காலம் என்று சொல்லலாம். பத்திரிகாசிரியர்கள் அவனை வளைத்துக்கொண்டனர். அவனைப் படிப்பதற்கென்று பலர் தயாராகி விட்டவுடன் பத்திரிகாசிரியர்கள் வழக்கம்போல் தங்கள் நிதானத்தையும் விமரிசன நோக்கையும் இழந்து விட்டார்கள். அவனுடைய கதைகளை மெச்சிப் பலர் கடிதம் எழுதினர். பலர் வீட்டிற்கு வந்தே பேசிக் கொண்டிருந்தனர். நேரில் சென்று இலக்கிய ரசனை செய்தவர்களில் முக்கியமாகப் பிரஞ்சு நகரத்துப்பெண்மணிகளைக் குறிப்பிட வேண்டும். எத்தனையோ பெண்கள் வருவார்கள்; தனியாக வருவார்கள். தனியாகப் போவார்கள். தங்கள் கணவன்மார்களுடன் வந்து பார்த்துச் செல்லும் பெண்களும் உண்டு.

மாபஸான் அழகான பேர்வழி. அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான், இதனால் பெண்கள் அவன் வலையில் எளிதில் சிக்கினர். இவனுடைய 'சமத்துவ' நோக்கில் கன்னிப் பெண்ணுக்கும் குடும்பப் பெண்ணுக்கும் எந்தவித வேற்றுமையும் இருந்ததில்லை.



அவனுடைய கதைகள் அவனது சொந்த வாழ்க்கையிலிருந்தே எழுந்தவையாயிருக்க வேண்டும் என்று வாலஸ் பிராக்வே (*Wallace Brockway*) ஐயப்படுவதை ஈண்டுப்பொருத்திப் பார்த்துக் கொள்ளலாம்.

அவன் தூர்கானேவிடம் தன் சொந்தவாழ்க்கை அனைத்தையும் மறைக்காமல் சொல்வதுண்டு. இன்றைக்கு இந்தப் பெண்ணைப்பார்த்தேன்; அந்தப் பெண்ணோடு பேசினேன் என்று சொல்வான். பெரும்பாலும் பெண்களைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பான்.

பிளாபர்ட் (*Flaubert*) என்னும் பிரஞ்சு நாவலாசிரியர் இவனுடைய பேச்சைக் கேட்கும் போதும், இவனுடைய கதைகள், படிக்கப் படும்போதும் விழுந்து விழுந்து சிரிப்பார். நடை, கதை சொல்லும் முறை ஆகியவற்றை மாபஸான் பிளாபர்ட்டிடமிருந்தே கற்றுக் கொண்டான்.

மாபஸான் முதன் முதலில் இலக்கிய உலகில் ஒரு இளங் கவிஞன் என்ற முறையிலேயே காலடி எடுத்து வைத்தான். பிரஞ்சு மொழியில் பல தனி நிலைப் பாடல்கள் எழுதியிருக்கிறான். அவனது முதல் புத்த

கம் ஒரு கவிதைத் தொகுதி தான். நாள் போக்கிலே, பிளாபர்ட், துர்கானேவ் ஆகியவர்களிடம் கொண்ட நட்பும், எமிலி ஸோலா முதலியவர்களின் நாவல்களைப் படிக்கும் விருப்பும் அவனைச் சிறுகதைகள் எழுதத் தூண்டின. அவன் ஒரு ஆரம்ப எழுத்தாளனாக இருக்கும் போது பிளாபர்ட்டிடம் தன் சிறுகதைகளைக் காட்டினான். ஒரு புகழ் பெற்ற ஆசிரியர் ஒரு ஆரம்ப எழுத்தாளனிடம் எப்படி நடந்து கொள்வது வழக்கமோ அப்படியே பிளாபர்ட் மாபஸானிடம் நடந்து கொண்டார். ஆனால் சில ஆண்டுகளில் தன் இள நண்பனிடம் தனித்திறமை இருப்பதைத் தெரிந்து கொண்டு ஊக்கமளித்தார்.

○

மாபஸான் சுமார் 300 சிறு கதைகள் எழுதியிருக்கிறான். பல நாவல்கள் எழுதியிருக்கிறான். இவனுடைய நாவல்கள் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வில்லை. சுமார் 25 கதைகள் மட்டும் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. அவனுக்கு நிர்ணயமான கொள்கை எதும் இல்லை. கலை கலைக்காகவே என்றும் அவன் நினைக்க வில்லை. கலை பிரசாரத்திற்காக என்றும் நினைக்க வில்லை. ஒரு வேளை கலை என்பது 'கொக்கோக சாம்ராஜ்யத்' திலே ஓடக்கூடிய தேர் என்று அவன் கருதியிருக்கலாம்.

மாபஸானைப் பற்றி ஒரு பிரஞ்சுப் பேராசிரியர் எழுதும் போது 'அவனுடைய காலம் மலையேறி விட்டது; பத்திரிகைகளில் இரண்டொரு பத்தியை நிரப்புவதற்காக அவன் எழுதிக் கொண்டிருந்தான்' என்று குறிப்பிடுகிறார். இது அவ்வளவு நேர்மையான விமரிசனம் இல்லை. மாபஸானின் தனித்திறமையும்(*Originality*) துணிச்சலும் கதையை முடிக்கும் பாணியும் அவனுக்குச் சிறுகதையுலகில் நிரந்தரமான புகழைக் கொடுக்கத் தவற மாட்டா. இளமையும், இந்த உலகத்தினின்று ஆண்—பெண் என்கின்ற உணர்ச்சியும், அதனால் ஏற்படும் சூழல்களும் எப்பொழுது தொலைகின்றனவோ அப்பொழுது அவனுடைய கதைகளும் மதிப்பற்றுத் தொலைந்து விடும். அவனுக்கு எதைப் பற்றியும் ஒரு தீர்க்கமான கருத்து இல்லாமலிருப்பது குறித்துச் சில விமரிசகர்கள், 'அவனது வாழ்வின் இறுதியில் வந்த மூளைக் கோளாறு அவன் கதைகளில் தென்பட்டன' என்று நையாண்டி செய்வர்

○

மாபஸான் 42 ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்தான். பிரஞ்சு நாட்டிலே நார்மானியப் பகுதியிலே அவன் பிறந்தான் அவன் படிப்பு முடிந்ததும் போர் வீரனாகச் சேர்ந்தான். போர் முடிந்ததும் குமாஸ்தா வேலைபார்த்தான். அவனுக்கு அந்த இயந்திர வேலையிலே மனம் செல்லவில்லை. இலக்கிய விஷயங்கள் பேசுகின்ற இடத்திற்கு அவன் அடிக்கடி சென்று விடுவான். எமிலி, ஸோலா, பிளாபர்ட், துர்கானேவ் முதலியவர்களிடம் அவன் கொண்ட பழக்கம் அவனை மேம்படச் செய்தது. அவன், தங்கள் வட்டாரத்திலே உலாவுவதில் அந்த

எழுத்தாளர்கள் மிகவும் மகிழ்வடைந்தனர்.

மாபஸானுக்கு அதிகமான செல்வாக்கிருந்தது; அதிகமான வருமானம் இருந்தது. ஆனால் அதே நேரத்தில் வரவை விட இரண்டுபங்கு செலவிருந்தது. செலவுக்குரிய பணத்தை அவனது எழுத்துத்தான் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் அவனது பேனா அவன் வாழ்வின் இறுதிக் காலத்தில் இரவும் பகலும் ஓய்வில்லாமல் தாளிலே ஊர்ந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு சொட்டு மையையும் அவன் பல ஆயிரம் பிராங்குகளாக ஆக்க முயற்சித்தான். அவனுடைய கடுமையான உழைப்பும், கொஞ்சநேரம் கூட மனநிம்மதியின்றிக் கதைகளுக்கு விஷயம் தேடிக் கொண்டிருந்ததும் அவனுக்கு மூளைக் கோளாறை உண்டாக்கின.

1891 ம் ஆண்டு அவன் ஒரு தனிப்பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே சேர்க்கப் பட்டான். பிறகு அவனுக்குப் பைத்தியம் தெளியவே இல்லை. பைத்தியம் பிடித்த ஒரே ஆண்டில் இறந்துவிட்டான்.

'மாபஸான் இப்படிப் பைத்தியமாகச் செத்தானே' என்று நினைத்த வாசகர்கள் அவனது வாழ்வின் சோகரசமான இறுதி அத்தியாயத்தை இரண்டு சொட்டுக் கண்ணிருடன் படித்து முடித்தனர்.

மாபஸானின் அன்னை அவன் மேல் மிக அதிகமான வாஞ்சை வைத்திருந்தாள். தான இறக்கும் போது "என் மகனைப் பார்ப்பதற்காகவே விண்ணுலகம் போகிறேன்" என்று சொன்னாளாம். ○



ஏழாம் அத்தியாயம்

முதல் சூழ்ச்சி

மோனிசந்த் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரில் அந்தத் துரோகி...ஹி ஹி ஹி சிரிப்புக்காரன் ... அமர்ந்திருந்தான். அவன் நீண்ட நேரம் பேசினான். அவன் பேச்சை மௌனமாகக் கவனித்து வந்தான்.

"அன்பரே. தோழரே, மோனிசந்தரே நாட்டின் பேரால், நம் மதத்தின் பேரால் கேட்கிறேன்..."

"என்ன..."

"சுபேதார் இந்துமத வைரி"

"இருக்கட்டுமே...!"

"அவனை ஒழிக்க வேண்டாமா?"

"ஒழித்து விட்டு..."

"வெள்ளையர் வந்தால்..."

"என்ன மாற்றம்.. ...புதிய சிறை மாற்றம்......அல்லா போய் ஏசு வருவார்!"

"மன்னிக்க வேண்டும்...இந்தத் துடுக்கு மிக்க துருக்கரைப்போல மத சம்பந்தமான செயல்களில் அந்த வெள்ளையர் இறங்கப் போவதில்லையென்று உறுதி கூறுகின்றனர்..."

"அப்படியா..."

ஹி ஹி ஹி...அமீன்சந்தின் காரியம் பலித்து விட்டதற்கடையாளமான பொருள் புதைந்த சிரிப்பு அது! மதவெறியைக்கிளப்பி விட்டான்... மோனிசந்த் சரிந்து விட்டான். ..இனிச் சரணாகதிதான் பாக்கி. ...அமீன்சந்த துணிந்து கேட்டான் கொஞ்சமும் நாட்டுப் பற்று, இன்றி! ... கல்கத்தாவில் போரிடுவது போலப் பாசாங்கு செய்து மூர்ஷிடாபாத்துக்கு ஓடிவிட வேண்டுமாம. அவன்...துரோகத்தின் நச்சு நாக்கு எப்படி நீள்கிறது?

"அமீன்சந்த், உமது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்" என்றான் மிகமெதுவாக, முடிவில்!

மோனிசந்த் அவனுக்கு உண்மையில் இணங்கி விட்டானா?... அவன் மனம் அவ்வளவு சீக்கிரத்தில் துரோக நஞ்சை ஏற்க இடங்கொடுக்கவில்லை. அமீன்சந்த்தின் பகையும், வெறுப்பும் கூடாது என்பதற்காகவே தலையை ஆட்டினான். ஆனால் போராடத் திட்டமிட்டான, திட்டமிடத் தீரமிருந்தது அவனிடம்— எனினும் உயிருக்குப் பயந்த கோழை. தன் உயிரை வெல்லமென நினைக்கும் மனப்பான்மையுடையவன்.

'ஜோராம்சந்த்' கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனை எதிர்த்து எவ்வளவே தீவிர வேலைகள் செய்தான். அமீன்சந்த் தனது ஆளை அவனையே கொன்றுவிடும்படி ஏவி விட்டான். அவனும் அதற்காக ஒரு சமயம் தனது உயிரைத் திரணமாக மதித்து இரவு நேரத்தில் தாக்கினான். மோனிசந்த் பயந்துவிட்டான். பணிந்தும் விட்டான். அவன் அவ்வளவு கோழை! அமீனசந்த். மோனிசந்த்...இந்த இரண்டு சந்த்களில் அமீன்சந்த் பெரிய நரியல்லவா? அவனுக்குத் தெரியும் மோனிசந்த்தின் வார்த்தைகளில் முழு நம்பிக்கை வைக்கக் கூடாதென்று! இந்தப் பேருண்மையைத்தான் சோணிசந்த்தின் காதோடு காதாகச் சொல்லியனுப்பினான்.

இந்த நேரத்தில் திடீரென ஒரு தாடிக்காரன் மோனிசந்த் முன்னால் தோன்றினான்.

"நீ யார்?..."

அதட்டினான் சந்த்.

"என்னைப் பற்றிய கேள்வி வேண்டாம்... அமீன் சந்த்தை நம்பாதே...அவன் சொற்படி நடந்தால் நீ துரோகி"

"நானே முடிவு கட்டிவிட்டேன்..."

"அப்படியானால் என் நன்றி' அன்பைக் குழைத்து, ஆர்வத்தை இழைத்து"

அவன் போய்விட்டான்... யார்?... மோனிசந்த்துக்கு ஒன்றும விளங்கவில்லை. இருந்தாலும் நாடு பெரிய நெருக்கடியான நிலைமையிலிருக்கிறது. இப்பொழுது வழுவினால் இந்நாட்டின் எதிர்காலமே நழுவி விழுந்து நாசமாகி விடும் எனறு எண்ணினான். ஆகவே உடனே கிளைவின் முன்னேற்றத்தைத் தடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப் புறப்பட்டான்!

எட்டாம் அத்தியாயம்

இரண்டாம் பாகம்

கிளைவ் தனது கூடாரத்தில் ஒரு பண்டாரத்துடன் பேசிக்கொண்டிருந்தான். அவன் தான் அமீன்சந்த்— அல்ல, அல்ல... அமீன்சந்த் வேடத்தில் மறைந்துள்ள சோணிசந்த். கிளைவின் எதிரில் ஒரு வங்க தேசப்பட மிருந்தது. அதில் பல்டா, மோடாபூர், பட்ஜ்—பட்ஜ்; கல்கத்தா முதலிய இடங்களில் × என்று குறியிட்டிருந்தது. கிளைவ் சிரித்துக்கொண்டே கூறினான்.

"அமீன்சந்த் அவர்களே, உங்கள் உதவிக்கும், யோசனைக்கும் நன்றி"

"நாங்கள் படை கொடுக்க முடியாது...பக்குவமான யோசனைகள் தருவோம். ஆனால் எடையில், மதிப்பில் அதிகம் இரண்டாவதுதான்"

"ஆம். முழுமனதுடன் ஒப்புக் கொள்கிறேன்......வெற்றி வெறும் வெடிகுண்டுகளால் கிடைப்பதல்ல"

"வீரரே, நான் சொன்னது நினைவிலிருக்கட்டும்... மோனிசந்த் கோழை...அவன் உயிருக்கு ஆபத்தென்றால் படை, போர் ஒன்றும் நினைவிலிருக்காது. ஓட்டந்தான்..."

சூழ்ச்சியின் இரண்டாம் பாகமும வெற்றியாயிற்று. கையைக் குலுக்கினர். பிரிந்தனர்.

சோணிசந்த் நேராகத் தன் தலைவனைச் சந்திக்கப் புறப்பட்டான். அவன் இருண்ட பாதைகளின் வழியாகவே சென்றான். ஆனால் அவனை யாரோ பின் தொடர்கிறார்கள் என்று அவன் மனம அவனுக்குச் சொல்லிக் கொண்டே இருந்தது. ஆகவே அவன் திரும்பித் திரும்பிப பார்த்துக் கொண்டே போனான்...ஆனால் காலடி யோசைகள் கேட்டவண்ணமிருந்தன.

நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்து விட்டு ஒரு பாழடைந்த வீட்டினுள் நுழைந்தான்...அங்கு ஒரே இருட்டு ...முகம் தெரியாத அளவு கொஞ்ச தூரம நடப்பதற்குள் இரண்டு இரும்புக் கரங்கள் அவனைப் பிடித்து வாயைப் பொத்தி இழுத்தன...ஐயோ அவன் பயத்தால் பிணம் போலச் சாய்ந்தான்! அவனைத் தரதரவென......... இழுத்துக் கொண்டே போயிற்று.

ஒரு அறை...அங்கு மங்கலான ஒளி......ஒளியைத் தாண்டி விட்டது அந்த உருவம்...அந்த உருவம் அடர்ந்த தாடியுள்ள ஒரு வீரன்!

"அடே, வெள்ளையர்கூடாரத்தில் என்ன பேசினாய்?"

"........."

ஒரு அறை கன்னத்தில், இரண்டு அடிகள் முதுகில், மூன்று உதைகள் அடி வயிற்றில்...சோணிசந்த் சுருண்டு போனான்!

"பண்டாரம், பசிக்கு ஒரு பிடி உணவு..."

"நிறுத்தடா...உடனே உண்மையைக் கக்கவேண்டும்... இன்றேல் நீ பிணமாவாய்!"

மீண்டும் அடி, உதை, குத்து,...

அமீனசந்தின் ஒரு காம் போல இருக்கும் அவன்—உண்மையைச் சொல்லி விட்டான். அடி, உதை உதவுவது போல் அண்ணன் தமபி உதவுவார்களா? அடிமேல் அடி அடித்தால் அம்மியும நகருமே...!

"நாளைய போரிலே நிச்சயமாக மோனிசந்த் தோற்கப் போகிறான்...அதற்குரிய உபாயத்தைச் சொல்லி விட்டேன்..."

"என்னடா அது?"

"மோனிசந்த்தைப் போர் ஆரம்பத்தில் நேராகத் தாக்கச் சொன்னேன்..."

"நல்ல வீடணர் கூட்டமடா நீங்கள்...உங்கள் பரம்பரையே இப்படித்தானு?"

அவனை உலுக்கிக் கீழே தள்ளினுன்.

அப்பொழுது ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். அவள் அந்த வீரனைப் பார்த்ததும் 'ஹ......' என்றுகூவிவிட்டாள். ஏனெனில் முன்னொரு முறை இதே வீரனைத் தனது அறையின் கதவோரத்தில் கண்டு நடுங்கியிருக்கிருள். மறுபடியும் அவனைச் சந்தித்ததும் அவள் பயந்துவிட்டாள். நுழைந்தவள் ஊர்மிளா, அங்கு நின்றவன் யார்...? உண்மை ஊழியன் அஜிஸ்கானே! அவன் எப்படி வந்தான்? அது பெரிய புதிர்!

ஒன்பதாம் அத்தியாயம்

போர், போர்

போர்...

டிசம்பர்த் திங்கள் 27-ம் நாள் கப்பல்கள் கிளம்பி விட்டன. இனிப்போர், போர்...போரே! பல்டாவைக் கடந்து விட்டனர். அடுத்தபடியாக அவர்கள் வந்து சேரவேண்டிய மோடாபூர் என்ற இடத்தை மோனிசந்த் தனது களமாக அமைத்து எதிர்ப்பான் என்று எதிர்பார்த்தான். ஆனுல் அங்கேயும் எதிர்ப்பில்லை.

அடுத்தபடி போகவேண்டிய இடம் பட்ஜ்—பட்ஜ்...ஆனுல் அதைக் கிளைவ் எதிர்பார்த்த அளவு எளிதில் பிடித்துவிட முடியவில்லை. மோனிசந்த்தின் எதிர்ப்பு தாங்க முடியாத அளவு பெரிதாக வலிமையுடையதாக இருந்தது.

நிமிடத்திற்கு நிமிடம் புதுவிதத் தொல்லைகளை ஏவிக்கொண்டிருந்தனர். அடிக்கொரு முறை ஆபத்து வந்து தொட்டுப்பார்த்து ஓடிற்று. முகாலாயக் கப்பல்களும் தங்கள் பங்கைச் செய்யத் தவறவே இல்லை. எதிர்துப் போராடின. அவர்கள் முன்னேற்றம் அலைகளுக்குப் பல வீரர்களை பலியாக்கிய பின்னரே முடிந்தது......அம்மம்ம, பட்ஜ்—பட்ஜை அடைவதற்குள் அவர்கள் பட்டபாடு...... சொல்லுந் தரத்தன்று!

சில சந்தர்ப்பங்கள் கிளைவைத் தூண்டிவிடும் முன்னேறென்று...அடுத்த கணத்திலேயே ஒரு பெரிய தடங்கல் வரும். இயற்கை வேறு அவர்களுடன் ஒத்துழைக்க வில்லை. வெள்ளைய வீரர்கள் பெரிய தியாகிகளைப் போலவே எதையும் கருதாமல் போரிட்டனர். எனினும ஓயாச் சண்டையால் ஓய்வு தேவைப் பட்டது.. போர்க்களத்தில் ஓய்வு ஏது? அலைகளுக்கிடையே இருந்து தவித்தனர். நிலத்திற்குச் செல்லலாம் என்ருல் மோனிசந்தின் குதிரைப் படை தயாராக நின்று கொண்டிருந்தது!

துன்பத்திலும், துயரத்திலும் கிளைவ் சிரித்தான். எதிரிகளின் படைகளைத் துகள் துகளாக அடிக்கத்தான் முயன்ருன். எதிர்த் தளபதிகளைச்

4



சிதறவும் அடித்தான். ஆனாலும் அவர்களிடம் வெற்றி மங்கை எனோ விடாது தழுவி முத்தமிட்டவண்ணமிருந்தாள்.

கிளைவ் சிந்தித்தான்... அமீன் சந்த் அவன் மனக்கண் முன்னால் தோன்றினான். அவன் சொல்லிக் கொடுத்த யூகம் அவன் செவிகளில் ஒலித்தது!

அவன் போர்க்களத்தை உற்று நோக்கினான். மோனி சந்த் ஒரு யானையின் மீதிருந்து கொண்டு போர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். கிளைவ் இதுதான் தக்கசமயம் என்று கிடு கிடுவென அவன் அருகில் தனது வீரர்களை விரட்டி அவனை நேரடியாகத் தாக்கிட ஏவினான். கிளைவ் தனது துப்பாக்கியை அவன் தலைக்கு நேராகத் திருப்பிச் சுட்டான், சுட்டுக் கொண்டே இருந்தான்! மோனி சந்த் கொஞ்ச நேரம் சமாளித்தான்... இனி ஓட்டந்தான்! அவன் ஓட்டத்தை யாரால் பிடிக்க முடியும? யானையைத் திரும்பினான். தலைவனில்லாத படை பயந்து சிதறி யோடியது!

இந்தக் காட்சியைக் கண்ட வீரன் அஜிஸ்கான் உருவிய வாளை உறையிலிடாமலேயேபக்கத்திலே நின்ற குதிரை மீதேறிப் பறந்தான்... அவன் மறைந்தே விட்டான்!

போர்... இன்னும் நிற்கவில்லை. அந்தியாகிவிட்டது.

பட்ஜ் பட்ஜ் நகரின் கரையோரத்தில் ஒரு வெள்ளைய வீரன் ஏதோ உளறிக் கொட்டிக் கொண்டிருந்தான். அவ

னைச் சுற்றிலும் அந்தப் பகுதி மக்கள் கூடிவிட்டனர். மக்களுக்கு ஏற்கனவே போரினல் பீதி...அதிலும் உளறிக் கொட்டும ஒருமாலுமி வேறு கரைக்கு வந்து விட்டான் என்ருல் அவனைப்பற்றி யறிந்து கொள்ள எவ்வளவு ஆவலிருக்கும்... எவ்வளவு துடிதுடித்திருப்பார்கள்?

"நாளைக் காலையில் இந்தக் கருப்பன்களை யெல்லாம் சுட்டுப போடப் போகிருேம...ஆமாம்...கொள்ளை...கொலை...பட்ஜ் பட்ஜ் பைசல் செய்யப் போகிருேம்...என்ன... தெரிஞ்சுதா" இபபடி உளறினன் அந்தக் குடிகாரன்.

அவ்வளவுதான்......அங்கு சூழ்ந்திருந்த மக்கள் எங்கு போயினர்? காற்ருேடு கலந்து கரைந்து மறைந்து விட்டனரா... மாயமந்திரத்திஞல தங்களை மறைத்துக் கொண்டார்களா? கடைசியில் அந்தக குடிகாரனை அவனது தோழன் வந்து இழுத்துக் கொண்டு போனன...ஆனல் மக்கள எங்கெங்கோ சிதறிப் போய் விட்டனர்.

மறுநாள் கிளைவ் படைவீரர்கள் புடைசூழக கரையை வந்தடைந்தான. கோட்டையைப பிடித்து விட்டோம், கொத்தளத்தைத பணிய வைத்துவிட்டோம் என்று கும்மாளம் போட்டனர் அவனது பட்டாளத்தார். ஆனல் அந்த இடமோ காலி செய்யப் பட்டிருந்தது! குடிகாரன ஒருவனல் உண்மை வெளிப்பட்டு அந்தப் பகுதி மக்கள் அந்த இடத்தையே காலி செய்து விட்டோடினர்.

குப்பைத்தொட்டி

வரலாறு என்ற பெயருடன் வெளிவரும் புத்தகங்களை எதற்கு ஒப்பிடலாம் தெரியுமா? அது தேவையற்ற தேதிகளையும் ஊர், பெயர், பொய், பித்தலாட்டங்களையும் உள்ளடக்கிக் கொண்ட குப்பைத்தொட்டி

—டால்ஸ்டாய்

மோனிசந்த்—? ஐநூறு பேர்களை மட்டும் விட்டுவிட்டுச் சில மணி நேரங்களில் கல்கத்தாவை விட்டுக் கிளம்பி ஹூக்ளிக்குப் போய் அங்கிருந்து மீண்டும் மூர்ஷிடாபாத்துக்குப போய்விட்டான். அவன் உண்மையில் போரிட எண்ணினன். ஆனல் அவனது பரிதாபத்திற்குரிய பயங்கொள்ளித்தனத்தைப் பயனபடுத்திக் கொண்டான் தந்திரமிக்க கிளைவ்.

கடைசியாகக் கல்கத்தா மீது படையெடுத்தான கிளைவ், அந்நகரத்தின் பக்கம் துப்பாக்கி முனைகள் அதிக நேரம் திருப்பபபட வேண்டிய நிலையிலில்லை கல்கத்தா மீண்டும் பரங்கியர் பாதங்களில் விழுந்து விட்டது...அந்தோ!

அமீன் சந்த்.........அந்த அயோக்கிய சிகாமணிக்கு......பரம திருப்தி...தன நாட்டின் வீழ்ச்சியிலே மகிழ்ச்சி கொள்ளும் துரோகி! அவன் மகிழ்ந்தான்...மகிழ்ச்சி இல்லாமல் போகுமா? அவன் போட்ட திட்டம அணுவும் கோணமல், குறையாமல் நிறைவேறி விட்டதே!

(தொடரும்)

உதவாத காராபூந்தி, நாட்பட்ட ஓமப்பொடி, விலைபோகாத பக்கோடா இவற்ருேடு புதிதாக வறுத்த அவலைச் சேர்த்து "மிக்ஸ்சர்" என்று நாமம் இட்டு நமக்கெல்லாம் நாமம் சாத்துகிருர்களே, அதே வகையான வேலைதான் இந்த மேதாவிகளின் வேலையும்—'மிக்ஸ்சர்' வியாபார தந்திரம்; சம்ஸ்கிருதம் மேதாவி தந்திரம்

தமிழ் தந்தான்

திருமதி வரமணி

இ.பி., இ.மு. என்ற வரலாற்று வலையின் அரிப்புக்கெல்லாம் அகப்படாமல் பரந்து விரிந்து கிடக்கின்ற அந்தப் பழைய காலத்திலே நடந்தது இந்தக் கதை.

கதிரவன் தோற்றத்தைப் புட்கள் அறிவிக்கு முன் அவற்றையே எழுப்புவார்கள் அவர்கள் அந்த எல்லை வலையிலே சிக்காத. பழைய காலத்து மனிதர்கள் ஏதேதோ பாராயணம் செய்து கொண்டே கங்கையாறு நோக்கிச் செல்வார்கள். மேடும பள்ளமும் உண்டு; முள்ளும் புதரும் உண்டு. ஆனுலும் நடந்து நடந்து பழகிய அவர்களுக்கு இடைஞ்சல் ஒன்றும் தெரிவதில்லை. காலைக் கடன்களை முடித்துக் கரையேறுவார்கள். வழிபாடு செய்யக் கிழக்குத் திசையை நோக்கி அவர்கள் திருப்புவதும் கதிரவன் எழுவதும ஒரேசமயத்தில் நிகழ்வது அன்ருடக் காட்சி. கையிலே கடிகாரம கட்டாதவர்கள் தான். எப்படியோ அந்தக் 'கட்டை'கள் தாங்களாகவே எழக்கூடிய 'வித்தை'யைப் பெற்றிருந்தார்கள்.

பாராயணம் செய்கிருர்களே, இந்த மனிதர்கள், இவர்களுக்கென்ன நாகரிகம் என்ருல் என்னவென்று தெரியாதா? நகரம் அமைக்கவோ, நாகரிகம் வகுக்கவோ தெரியாதா?... இல்லையில்லை. தெரியும். ஆனுல்...காட்டு வாழ்க்கையையே அவர்கள் நடததினர். நாகரிக நகரங்கள் எல்லாம் அந்தக் காலத்திலும் இருந்தன. பின்னே இந்தப் 'பிறவி'கள்மட்டும் ஏன் இங்கே வந்தன?

○

மனித சமுதாயம் முன்னேற்றம் என்ற ஒரே வெறி பிடித்துத் தன் அறிவுக்குத் தோன்றிய படியெல்லாம் என்னென்னவோ செயல்களைச் செய்துவிட்டு, 'இதுதான் நாகரிகம்' என்ற முத்திரையிட்டு முழக்கி வருவது இந்தக் காலததில் மட்டுமல்ல. அநாதி என்று எட்டமுடியாத நிலையில் வைத்துப் பேசுகிற அந்தப் பழைய காலத்திலேயே இன்றைய

மனித சமுதாயத் தினிடையே காணப்படுகிற 'முன்னேற்ற' வெறி மனிதனைப் பற்றிவிட்டது அந்தக் காலத்திலும் இந்தக் காலத்தைப் போலவே 'நாகரிகம்' என்ற மதிப்பு மிக்க 'வியாபாரச் சரக்கு' நகரங்களில் தான் விளம்பரமாகிக் கிடந்தது. நகரங்களிலே பொருளின செறிவும் முடக்கமும் அன்றும் உண்டு. கலை என்ற பெயரால் சோமபலும் கேளிக்கையும் அன்றைக்கும் இருந்துவந்தன. ஏழைகள் என்றும அறிவிலார் என்றும் 'சிறப்பான, பட்டங்களைப் பெற்றுக் கிராமத்து மக்கள் 'நாகரிகம்' எனற ஏதோ ஒரு புரியாத சரகதை உண்டாக்கு வதற்காகத் தங்கள் குருதியை யெல்லாம் நெற்றி வியர்வையாக அந்தக் காலத்திலும் மாற்றிக் கொண்டுதான் இருந்தாரகள்.

நாம மேலே பார்த்த 'பிறவி' களோ நாகரிக நகரத்தையும் விட்டார்கள். உழைதது அலுக்கும கிராமத்தையும் விட்டார்கள். அருவியின முழக்கத்துக்குப் போட்டியாக் என்னவோ 'பாராயணம். என்ற பெயரால் கத்திக் கொண்டிருந்தார்கள்.

நகரத்தையும் நாட்டுப் புறத்தையும விட்டுவந்தவர்களே தவிர, துறந்து விட்டவர் களல்ல, அந்த முனிவர்கள. அது என்ன மாயமோ, நகரங்களின் தலைவர்கள் நாடாளும் மன்னர்கள் யாவரும் இந்தக் காட்டாட்களின் தயவை எதிர் பார்க்கும வகையிலேயே அந்த நாளின சமூக அமைப்பானது பொருந்தியிருந்தது! காட்டிலே கனிவகைகளும் கிழங்குகளும உண்டு, தண்டும் தருப்பையுமே நம்பி வாழும் கூட்டம்: இயற்கையின் சினத்துக்கு இரையாகாமல் பிழைகும வகை இவர்களுக்கு ஏது என்று நாம் ஒதுக்கத் தக்க பிறவிகள்!—ஆனல். எல்லா அரணும் ஆணை வலிமையும் பெற்ற மனனர்களும் இவர்களைக் கண்டு அஞ்சினர்! ஒதுங்கி—உலகியலை விட்டு நெடுந்தொலைவிலே அகன்று—ஆரணியத்திலே வாழ்கின்ற வர்களானுலும அவர்கள் பேராற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் நினைத்தால் மூன்றல்ல—எத்தனை உலகங்கள் இருந்தாலும் அத்தனை உலகங்களையும் அழித்துவிடலாம். புதிதாக உலகம் வேண்டுமா? ஆம்... அதற்கும் அவர்கள் வழியறிந்தவர்கள் தான்! திரிசங்கு சுவர்க்கம் உண்டாக்கினாராமே ஒருவர்!...இவை யெல்லாம் அன்றைக்கு வாழ்ந்த நம் மூதாதையரின் நம்பிக்கை.

கடவுளர்கள் எல்லோரையும் அந்த முனிவர்கள் நினைத்தவுடன் காணமுடியும். அவர்களோடு வாதிடவும் உரிமை பெற்றவர்கள்—என்றெல்லாம் அந்த முனிவர்களைப் பற்றி எழுதிவைத்திருக்கிருர்கள் ஆம. அவர்கள் 'பெரிய' ஆட்கள தாம்

சமஸ்கிருதத்திலேயே தான் அவர்கள் பேசுவது. சமஸ்கிருதமா? அது என்ன...? அது வேறொன்று மில்லை; கங்கை மேதாவிகளின் சூரத்தனத்தால் விளைந்துவிட்ட விபரீதம் தான், வேறொன்றும் இல்லை.

நகரங்களிலும் நகர்ப்புறங்களிலும வழங்குகிற பலபல மொழிகளிலுமிருந்து பல்வேறு சொற்களை எடுத்துத்

தொகுத்து அமைத்துக் கொண்ட ஒரு கோமாளிக் கதம்பம்தான் அந்தச் சம்ஸ்கிருதம். பிராகிருத மொழிகள பலவற்றிலிருந்து ஒருவருக்கும் புரியாத படியாக—வியப்பும விபரீதமும் விளையும்படியாக — உண்டாக்கியது அந்த மேதாவிகளின் மொழி. உதவாத காராபூந்தி, காட்பட்ட ஓமப்பொடி, விலை போகாத பகோடா இவற்றோடு புதிதாக வறுத்த அவலைச் சேர்த்து 'மிக்ஸ்சர்' என்று நாமம் இட்டு நமக்கெல்லாம் நாமம் சாத்துகிறார்களே, அதே வகையான வேலைதான் இந்த மேதாவிகளின் வேலையும் 'மிக்ஸ்சர்' வியாபார தந்திரம், சம்ஸ்கிருத மேதாவி தந்திரம்.

அந்த முனிவர்களின் பெயர்கள் தெரிய வேண்டுமல்லவா? வியாசமாமுனி, வான்மீகிமுனிவர், துர்வாசர், கௌதமர்... இப்படியாக ஏதாவது பெயர்களை நீங்களே வைத்துக் கொள்ளலாம். ஒரே ஒருவருடைய பெயர் மட்டும் நாம ஒரு மனப்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த மேதாவிகளின் கூட்டத்தில் அது ஒரு பயித்தியம்; அகத்தியர் என்று பெயர். மேதாவிகளுக்கெல்லாம் மேதாவியாக விளங்கியவர் தான். ஆனால், "அகத்தியர் வந்தால் நம்முடைய ஐயங்களெல்லாம் நீங்கிவிடும்" என்று கொண்டாடிய அந்த மேதாவிக் கூட்டம், "அது கிடக்கிறது பயித்தியம்" என்று முன்னுரை சொல்லி "விட்டுத் தள்ளுங்கள் அந்தப் பேச்சை" என்று முடிவுரை சொல்லுகிற அளவுக்கு அவர் ஒரு மாஜி மேதை' யாகிவிட்டார்

○

பயித்தியக்கார அகத்தியர் மேதாவி அகஸ்தியராக இருந்த காலத்தில் ஒருநாள்.

மாலை வேளையில் வழக்கத்துக்கு மாறாக அவர் மூளை சோர்ந்து கிடந்தது; உள்ளம் ஓய்வெடுக்க விரும்பவில்லை. அறிவும் உணர்வும முரண்டு செய்யவே, மேதாவியாரின பாடு சங்கடமாய்ப் போய் விட்டது. இருப்புக் கொள்ளவில்லை. காசி மன்னன் காணிக்கையாக அனுப்பிய புலித் தோலை விரித்துப் படுத்தார். புரண்டார். ஒன்றும் சரிவரவில்லை. எழுந்து ஆசிரமத்துக்குள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்தார், ஒன்றும நேரானபாடில்லை. அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, ஒரு துள்ளுத் துள்ளினார். அதிர்ச்சியிலே சரியாகிவிடலாம் என்ற அவர் எண்ணம் கைகூடவில்லை: ஏமாந்து போனார். புலித்தோலைக் காலால் உதைத்து ஒதுக்கி விட்டு விரைவாக ஆசிரமத்தை விட்டு வெளியேறினார். எங்கே போகிறோம் என்ற விளக்கம் இல்லாமல் நடந்துகொண்டேயிருந்தார். கால் வலிக்கிறது என்ற உணர்ச்சி அவரை ஒரு மரத்தடியில் உட்காரச் செய்தது. உணர்வின் வேகத்தை மறக்க எணணி ஓட்டம் ஓட்டமாக நடந்து பார்த்தார். உணர்வு சளைக்கவில்லை; கால் அலுத்துவிட்டது. மரத்தடியில் உட்கார்ந்து கணைக்காலை அமுக்கலானார். உணர்வின் வேகம தணியவில்லை. அறிவு இன்னும் எழ மறுக்கிறது. வாய்விட்டுக் கத்த ஆரம்பித்துவிட்டார். தாம் எழுதிய சுலோகங்களையும மற்ற மேதாவிகளின் சுலோகங்களையும் காற்

றிலே மிதக்கவிட்டார். கானகமே அலறிற்று. புட்கள் பறந்து பறந்து அலமந்தன. நரிக்கூட்டம வளைகளை விட்டு வெளிவர அஞ்சி ஒடுக்கமாகப் பதுங்கிற்று. காட்டையே ஆட்டிப் படைத்த அந்த மந்திரங்களாலும அவர் நிலைமை பழைய நிலைமைதான். எழுந்தோடிச் சென்று கங்கையிலே குதித்தார்; மூழ்கி மூழ்கி, எழுந்து எழுந்து, பாய்ந்து பாய்ந்து நீந்தினார். உடல் களைத்தது தான் மிச்சம். நிலவும புறப்பட்டு விட்டது. நடைப்பிணமாகக் குடிசைக்கு வந்து தொப்பென்று விரிப்பிலே விழுந்து விட்டார், மேதாவி அகத்தியர் மேனி அலுத்துப் போனதால் அடித்துப் போட்ட ஆள் மாதிரி தூங்கினார். இருந்தாலும, அந்த உடலுககுள்ளே துள்ளிக் குதித்து எக்காள மீட்டுக் கொணடிருந்த அவருடைய உளளம் குறும்பு செய்யத்தான் செய்தது. அடிக்கடி என்னென்னவோ பிதற்றிக் கொண்டே யிருந்தார். என்னென்ன கனவுகள கண்டாரோ, யாருக்குத் தெரியுமா?!

பொழுது புலர்ந்தது. வெயிலும் உறைக்கத் தொடங்கி விட்டது. மேதாவிகள் காலை நேர ஆராய்ச்சிக்காக ஒன்று கூடி விட்டார்கள். ''அகஸ்தியர் எங்கே?'' என்ற ஒரே கேள்வியை எல்லோரும கேட்டுக் கொண்டார்கள். விடை யாருக்கும் தெரியவில்லை. மேதாவி, பயித்தியமாகிக் கொண்டு வந்தது அவர்களுக்குத் தெரியாது. அந்த அகத்தியருக்கே அது தெரியாது!

○

காசி மன்னனின் அழைப்பை ஏற்றருளிக கானகத்து மேதாவிக் கூட்டம ஒருநாள காசியை நோக்கிப் புறப்பட்டது. வழி நெடுகிலும அகத்தியர் வாயைத் திறந்து ஒரு சொல் சொல்லவேண்டுமே!

''வழவழ என்று எந்நேரமும வாயாடுகிற அகஸ்தியர் ஏன் இபபடி ஆனார்?''

''ஆழ்ந்த ஆராய்ச்சியில் ஈடுபடுவது மேதாவிகளுக்கு அழகுதான். ஆனாலும இப்படி வாயையே மூடச்செய்கிற அளவுக்கு ஆராய்ச்சி செய்யவே கூடாது.''

''பேசாமல் விட்டு விடுங்கள். என்ன மாவது பெரிய கிரந்தம் உருவாகிக் கொண்டிருக்கலாம். நாம் அதைக் கெடுத்துவிடக் கூடாது.''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அது என்னவோ, அகஸ்தியர் போக்கு ஒன்றும் சரியாகபபடவில்லை,''—இப்படியாக மேதாவி முனிவர்கள அகத்தியரைப் பற்றிப் பேசிக் கொண்டே யிருந்தார்கள். அவர்கள் என்ன பேசியும ஒன்றும் பலன் ஏற்பட வில்லை. எபபோதாவது வாயைத் திறந்தால், ''காசிக்குப் போகாவிட்டால் என்ன? அங்கே போய் நாம் என்ன சாதிக்கப் போகிறோம்?'' என்றே தான் சொல்லுவார். அகத்தியரின் விபரீதமான மனப்போக்குக் காரணமாகததான் இப்படி அவர் பேசியதாக மேதாவிகள் எண்ணினார்கள். இந்த ''மேதாவி'' களுக்குப் ''பயித்தியக்''கார உலகத்தில் வேலை இல்லை என்ற கருத்தோடு தான் அகத்தியர் பேசினார் என்று அவர்களில் யாருமே

எண்ணவில்லை. அகத்தியருமே தம் பேச்சின் முழுப் பொருளையும் உணர்ந்து பேசவில்லை. ஏதோ ஒரு குரல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிறந்தது; அதை வெளிப்படுத்தினார். அவ்வளவுதான். 'மேதாவி'களின் உலகத்திலிருந்து 'பயித்திய' உலகத்துக்குத்தாம் வந்து கொண்டிருப்பதாக அவரே அறியவில்லை.

காசியில் இந்தக் கூட்டத்தைக் காணத் திரள் திரளாக மக்கள் கூடியிருந்தனர். "என்ன இருந்தாலும் நம்முடைய நிலையே அலாதிதான். மேதாவிகளாகிய நம்மைப் பார்ப்பதற்கு இந்தப் பாமர மக்கள், பாவம், எவ்வளவு ஆர்வத்தோடு கூடியிருக்கிறார்கள!' என்று அந்த 'மேதாவி'க் கூட்டம் எண்ணிற்று. 'பயித்தியக்' கார அகத்தியரோ கூட்டத்தைக் கண்டவுடனே திண்டாடிப் போனார், கூட்டத்து மக்களுள் ஒருவராகவே தம்மையும் எண்ணுமாறு தூண்டுகிறது. அவருடைய உள்ளம், 'மேதாவி'யாகிவிட்ட அவர் மூளையோ இழுத்துப் பிடிக்கிறது. '!அவர்களும் நம்மைப் போல் தானே! அவர்களோடு அளவளாவ வேண்டாமா?" என்று தூண்டும் பைத்தியக்கார உள்ளம். "சேசே நம்முடைய அரிய சாதனைக ளென்ன, காரிய மென்ன நாம் போய் அந்தப் பேதைக ளோடு அளவளாவுவதா! நாம் சொல்லுகிற ஒரு சுலோகமாவது இந்தக் கூட்டததில் ஒருவனுக்கேனும் விளங்குமா?! என்று முழங்கி, உள்ளத்தை இடித்து ஒடுக்கும் மேதாவி மூளை. இபபடியாகத் திண்டாடிய அகத்தியர் மேதாவிக் கூட்டத்தினிடையே திணறிக் கொண்டிருந்தார்.

மேதாவிகளின் வருகையால் தன் அரசுக்கே பெரிய பெருமை என்று நம்பிய காசி மன்னன், அவர்களை வரவேற்கவும், சிறப்புச் செய்யவும் பெரிய பெரிய ஏற்பாடுகள் செய்திருந்தான். புதுமையான விளம்பரங்களாலும் ஆடம்பரமான அறிவிப்புக்களாலும் அதிகாரம் மிக்க இடத்தவர் தொடர்பாலும் ஏமாந்து போகிறவர்கள் நாம் மட்டுமல்ல; நம் மூதாதையரும் அப்படித்தான். மன்னவன் தன்னுடைய ஆர்வத்தை விளமபரப்படுத்தியிருந்த வகையினைக் கண்டு மக்கள் பெருந் திரளாகக் கூடியிருந்தனர். கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்தால், சூரியனே சந்திரனாக மாறிவிடுவான் என்றும், காற்றிலே மனிதனைக் கரைத்து விடுவார்கள் என்றும எண்ணித் திரண்டு நெருங்கி வந்தவர்கள் போலத் தெரிந்தது.

வரவேற்பு முடிந்தது. பகலிலே மேதாவிகள் ஓய்வெடுப்பார்கள். மாலையிலே அவர்களுடைய மேதையையெல்லாம் மேடையிலே உலவச் செய்வார்கள் என்று மக்கள் அறிந்தபோது, "சரி சரி, மாலையிலே தான் மந்திரமா? இப்போது ஒன்றுமில்லையா?" என்று சொல்லிக்கொண்டே போய் விட்டார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

இதய ராணி

பாண்டியன்

அவளை நான் ஏன் பார்க்க வேண்டும்? பார்த்த 'குற்றத்' தினால் தான் இவ்வளவு வலுவான புயலை வரவழைத்துக் கொண்டேன்! ஐயோ நான் 'திருதிராட்டிரனா'? இல்லை கண்களைப் பெற்றிருப்பது தவறா? பார்த்ததோடு நிறுத்தாமல் அவள் உருவை ஏன் இதயத்தில் பதித்துக் கொண்டேன்? விடை சொல்லத் தெரியவில்லையே எனக்கு...

ஆம், அன்று எங்கோ நடந்து கொண்டிருந்தேன். வானவெளியிலே வட்டமிடும் பறவைகள் திட்டமிட்டா பறந்துகொண்டிருக்கின்றன! நானும் அப்படித்தான். கட்டுத் திட்டங்களில் மாட்டித் தவிக்காத மாடப்புறா நடந்து கொண்டிருந்தேன் கால் விட்டபடியே! ஆ! அவளை நான் பார்த்தேன், பார்த்தேன், பார்த்துக் கொண்டே இருந்தேன். எவ்வளவு நேரம்? எனக்குத் தெரியாது! மேலும் நடந்தேன். அந்த எண்ணச் சாயல் அதே நினைவு நிழல் உருவத்தின் புகை வடிவம்! அதை இருளைக் கிழித்துச் சிரித்து, அடுத்த கணத்திலேயே மரித்திடும் மின்னல் கோடு...வெள்ளிக் கிறல் என்று எண்ணினேன். ஏமாந்தேன், அவள் என் இதய தேயத்தின் 'விக்டோரியா' வாகி விட்டாள். தானே முடிசூடிக் கொண்டு விட்டாள். அவள் என் இதய ராணி. எதிர்காலச் சித்திரம். இலக்கிய ஓவியம்!

நான் பார்த்தேன். அவளும் என்னைப்பார்த்தாள். சிரித்தாள் அவள் சின்னஞ்சிறு வண்ண உதட்டின் மீது முறுவலின் நெளிவு ஓடி ஒளிந்தது. அவள் பக்கத்தில் ஒரு மலராத குண்டுமல்லி, இருவருக்கும் காவலாக வாடாமுல்லை. ஆம், அவள் தங்கையும் தாயும் உடன் வரவே நடந்து சென்றாள். ஐயோ அவள் முகத்தில் அவ்வளவு வனப்பைத் தேக்கி வைத்தவன் யார்? அவளது கண்களுக்கு அந்தக் கவர்ச்சிக் கலையை ஏன் கற்பிக்க வேண்டும்! அதனால் தானே இத்தனை வம்பு...மனப் போர்...எண்ண எரிமலை...நினைவுக் கொந்தளிப்பு...குருதிச் சுழற்சி...உணர்ச்சி வெள்ளம்! கணநேரக் கண்களின் சந்திப்பு ...இளஞ்சிரிப்பின் வரவேற்பு ...களிப்புக் கூத்தாடும் கண்களின் குறுகுறுப் பார்வை சொன்ன கதை...இத்துடன் பிரிந்து விட்டதாக எண்ணினேன். நான் ஒரு பித்தன். விவரமறியாதவன். ஏமாந்தேன். இதயராணியை வீடு கூட்டும் வேலாயியாக எண்ணிக் கொண்டேன்! அவளை மறக்க முனைந்தேன். அவள் பிடிவாதம் செய்தாள். அவள் முடிதுறக்க முடியாதென்று சொல்லி விட்டாள்!

எண்ணங்கள் தான் உலகை ஆள்கின்றனவாம். ஆளட்டும், நன்றாக! எனக்கு அது பற்றிய கவலை இல்லை. ஆனால் அவை—முடிசூடா மன்னர்கள்—என்னை ஏன் ஆட்டி வைக்கின்றன? நான் என்ன தீங்கிழைத்தேன்! தீராத பழி என்ன செய்து விட்டேன்! என்னைச் சித்திரவதை செய்கின்றன! எண்ணங்கள் துள்ளி விளையாடுகின்றனவாம், கெண்டை, விரால் போல,மனக் குளத்தில்...இப்படி ஒரு எழுத்தாளர் 'அவிழ்த்து' விட்டிருந்தார் தனது கைத்திறத்தை! அதைப் படிக்கப் படிக்க எனக்குக் கோபமும், ஆத்திரமும் தான் வருகின்றன. அவை மீன்களைப் போல விளையாடவும் இல்லை...எருமைகளைப் போல் குழப்பி விடவும் இல்லை: ...இவைகளெல்லாம் நடக்க என் மனம் குளமாக வல்லவா இருக்க வேண்டும்! அது தான் இல்லை. என் மனம் அனல்... செந்தழல்...இத்தனைக்கும் அந்த விழியழகியின் நினைவு தான் காரணம். அவளைத் தான் பழிகாரி என்று தூற்ற வேண்டும்.

அவள் யார்.....நீ யார்...... அவள் சூழ்நிலை என்ன...உன் சுற்றுச் சார்பு என்ன...பாண்டியா, வேண்டாம் இந்த ஆசை என்று என் இதயத்தின் ஆழத்திலிருந்து ஒரு தீனக் குரல் கேட்டுக் கொண்டே இருக்கிறது. என் செவிகள் செவிடாகி விடுகின்றன. இந்த நேரத்தில் மட்டுமா! அவளைப் பற்றிய ஆராய்ச்சி...உடனே நியூடனானேன! அவள் பெயர் பத்மாவாம்......ஆ ஆ!மா என்று முடியும் அந்தப் பெயரிலே ஒரு மதுரம்...அந்தப் பெயர் ஒலியே மோகனம்...... நான் அண்டத்தின் எந்த மூலையிலேயோ வாழும் சமூக அணு என்று எண்ணியிருந்தேன். என்ன சொல்லட்டும்? அவள் என் அண்டையிலேயே இருந்து தனது கெண்டை விழியால் என் உள்ளத்தைப் புண்ணாக்கவே பெண் வடிவெடுத்து வந்து விட்டாளா?

என் எண்ணங்களைச் சிறையிட்டேன். ஆசைக்கு 'ஜீவாந்திர சிட்சை' தந்தேன். என் கற்பனைக்குத் தடை விதித்தேன். ஆனாலும் அவள் என் உடலில், எலும்பில், நரம்பில், இரத்தத்தில் கலந்து விட்டாள். அவள் என் இதயத்திற்கு இராணி மட்டுமா என்னை இயக்குவிக்கும் ஆவியாகி விட்டாள்!

நாட்கள்...திங்கள்கள்... ஆண்டு...என் எண்ணங்கள் புரட்சி செய்கின்றன. சிறைக்குள்ளேயே மாநாடு கூடி ஆசைக் கைதியை விடுதலை செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி விட்டன, 'பாஸ்ட்லி'க்கு வந்த கதி என் மனச் சிறைக்கு வந்துவிடும் போலிருந்தது!

●

அதோ போகிறாள் உன் பத்மா! அந்த மான் கூட்டத்திற்கு மத்தியில், இந்தப் புகைப்படத்தில், பார்த்துக் கொள் என்று சொன்னால் கேட்கிறதா இந்த மனம்! கொஞ்ச நாட்கள் வரை தான் தோற்றத்தால் தேற்ற முடிந்தது. பிறகு தேம்பலாயிற்று! திரைக்குப் பின்னாலிருந்து 'திருவிளையாடல்கள்' செய்வதிலே திருப்தி யடைபவன், என்னை

வெளிக்கு விளம்பரம் படுத்திக் கொள்வதிலே ஆர்வமில்லாத வன். அது அவசியமில்லை யென்று முடிவு கட்டியவன். மணத்தைகொண்டு மலரை அறிந்துகொள்ளட்டும் என்ற போக்கிலே உள்ளவன. ஆனால் அவளிடம் நானே அறிமுகப் படுத்திக் கொள்வதா...இது முடியாது, கூடாது! அப்படிப் போராடிக் கொண்டிருக்கும் போதெல்லாம் எனக்கு நிறைய வாய்ப்புகள் இருந்தன பத்மா வைக் கண்டு பேச, உறவாட, பரிமாற! என் மனப் போர் முடிகிற நேரத்தில் வாய்ப்பும் கதைவைச் சாத்தித் தாழ்ப் பாளிட்டுக் கொண்டது...!

அவளைக் கண்டேன். பேசி னேன். கேட்டேன். கேட்டே விட்டேன். ஆம், அன்புப் பிச்சை! அவள மறுத்தாளா? இல்லை. அவள் மறுக்கவில்லை. என்னை விரும்புகிருள். ஆனால் தயங்குகிருள் வெறுக்கவில்லை. ஏற்றேன் என்னவும் முடிய வில்லை. ஏன்? எனக்குத் தெரி யாது! ஆனால் அவள மொழி வெறுப்பது போலத் தானிருக் கிறது. அவள் விழியோ என்னை அழைக்கிறது! நண் பரே! மன்னியுங்கள. எதிர் மறை விடை. உங்கள் படை யெடுப்பு எனக்குப் பெருந் தொல்லை. ஒரு பெண்ணின் எதிர்காலத்தின் களங்கம்! இப் படிச் சொன்னுன். பிறகு துள்ளியோடும் புள்ளிமான் போல ஓடி விட்டாள். ஆனால் ஓடும்பொழுது அவளைச் சந் திக்கத் தக்கதோர் முகவரி யைச் சொல்வானேன்? என்னை இழுத்து அலைக்கழிக்கவா? என்னைச் சோதிக்கிருளா? எனக்கு ஒன்றும் புரியவில் லையே! வர்ண வித்தைகள் புரியும் வான வில்லில் நடப் பது போலவும், பிறகு தலை குப்புற அடி வானத்தில் வந்து வீழ்வது போலவும் ஒரு பிரமை! நைந்து இற்று விழும் நம்பிக்கைக் கோலேந்தி, கலந்து நிற்கும் கற்பனை ஒளி விளக்கை எடுத்துக்கொண்டு எதிரில் வருவது சாவுக்குழியா அல்லது இன்ப ஏரியா என் பது புரியாமல் யாத்திரை செல்கிறது என் எதிர்காலம்! அவள என்னை இருளிலே தள் ளுகிருள். ஏக்க வீதியிலே விரட்டி யடிக்கிருள். அவள் எட்டாத கொம்புத்தேனு... நான்தான் என்ன நொண் டியா? அவளுக்கு இதயம் இருக்கிறதா......... இருந்தால் அது தசையாலானதா, இரும்பா?

●

நான் கணத்திற்கு கணம் செத்துக் கொண்டிருக் கிறேன். பேசும் பிணம் நான்... நடக்கும் சிலை நான்...இங்கும் அங்கும அசையும் இயந்திரம் நான்...ஆனால் மனிதன் இல்லை! என உலகத்திற்குப் பெயர் பெருமூச்சு உலகம். என் கூட்டாளிகள் ஏக்கம், தூக்க மின்மை, கண்ணீர் வேதனை...இப்படிப் பலர். பிற ருக்காக நான் வாழ்கிறேன்— எனக்காக அல்ல! பிறர் கண் களுக்குத் திரைகட்டப் பொய் நடிப்புச் செய்கிறேன். இல்லா விட்டால் இருந்த இடத்தி லிருந்து கொண்டே அந்த அழகு முகத்தைக் கனவிலா வது கண்டு களிப்பேன். அவ ளது புகைப் படத்தின் முன்னு லேயே உட்கார்ந்து கொண்டே

ஒரு பெரிய உலகையே படைத்து அதற்கு நான் மன்னனாகவும் அவளை மகாராணியாகவும் ஆக்கி விடுவேன். இந்தச் சதிகார உலகம் என்னைப் பார்த்தபடியே இருக்கிறது. அதற்குப் பயப்படுகிறேன். அதையும் மீறி விடுவேன். ஆனால் அவள் தயங்குகிறாள். ஏன்? தெளிவில்லை. அச்சமா? புரியவில்லை. நாணமா? அப்படியும் தெரியவில்லை. வெறுப்பா? இருக்க முடியாது. பெண்மைக்கே உரிய சலசலப்பா? சொன்னால் அல்லவா அறியமுடியும். விடை சொல்லவே அஞ்சும் பெண்மையைப் பார்த்து உரக்க உரக்கச் சிரிக்கிறது எனது நொந்த உள்ளம், வெந்து போன எண்ணம்! பத்மா... அவளை நான் மறக்க முடியாது ...அவள் என் வாழ்விலே வந்த முதல் எழிலரசி...கடைசியும் அவளே ஆகட்டும்! அவள் என் இதயக் கோட்டையில் புகுந்துவிட்ட பிறகு இனி வேறுயாருக்கும் அங்கு இடமில்லை...அவள் என் இதயராணி...இன்ப ஓவியம்... இலக்கியச் சித்திரம்...எதிர்காலக் கற்பனை...அவள்தான் பத்மா பாண்டியன! என் இதய ராணியாகிவிட்ட அவள் எங்கே இருக்கிறாள்? எப்படி இருப்பாள்? பத்மா... அவளுக்கு உருவம் தரப்போகிறவர் கைதேர்ந்த கலைஞர் 'காலம்' தான்!

போலி

சுகி

இந்த உலகத்திலே போலியைப் பலரும் வெறுக்கிறார்கள். யாராவது ஒன்றைப்போல மற்றொன்றை சிருஷ்டித்து விட்டால் 'பூ... இவ்வளவுதானா?' என்று குறை கூறுகிறார்கள். உண்மைக்கு எதிரிடையாக வருகிற 'காரியங்களை எல்லாம்' போலி என்று சொல்ல முடியாது. நல்ல கவிதை, உயர்ந்த சிற்பம், சங்கீதம் இவைகளுக்கு எவ்வளவு உழைப்பும் ஆர்வமும் இருக்க வேண்டுமோ, அதே ஆர்வம், சிரமம் ஏற்பட்ட பிறகுதான் இக்கலைகளுக் குண்டான போலியும் உண்டாகின்றன.

உருக்கு வாளைச் செய்கிறவனைப் போல் அட்டையில் உருக்கின் மினுமினுப்பும் பளபளப்பும் துடிப்பாக ஏற்றிவிடுகிறவனும் கலைஞனே. கம்பன் கவிதைகளிலே எது இடைச்செருகல் என்று கண்டு சொல்வதும் கள்ள நாணயங்களிலிருந்து போலியைப் பிரித்துக் காட்டுவதும் பகிரதப் பிரயத்தனங்களோடு சேர்ந்தவைதாம்!

எனது நண்பர் பணத்தை எண்ணி எண்ணி, வாத்து தண்ணீருக்குள் இறங்கும் ஜோரைப்போல அதிகச் சிரமமின்றிக் கள்ள நோட்டு, கள்ள நாணயங்களைப் பிரிக்கும் ரகசியத்தை எனக்குச் சொல்லித் தந்தார். இப்போது அந்த விபரங்கள் மறந்து போய்விட்டன. ஆனால் என் கண்களில் போலிக்கும் நிஜத்துக்குமுள்ள பாகுபாடு அவ்வளவாகப் புலனாவதில்லை. ஆகவே அவனும் ஒரு சிருஷ்டி கர்த்தா என்றே எண்ணுகிறேன்.

அரசாங்கமே கண்டு வியக்கும்படி புத்தம்புதிய நாணயங்களைச் சிருஷ்டிக்கும் நாணயஸ்தர்களிடம் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியுண்டு. நாணய செலாவணிப் பெருக்கத்துக்கும் நாணய வீக்கத்திற்கும் இவர்களுடைய தொண்டும் கை கொடுக்கின்றது. நாணயங்களை அச்சடிக்கும் நிபுணர்களே மூக்கில் விரல் வைக்கும்படி போலி கர்த்தாக்கள் உண்டாக்குவதில் நாமெல்லாம் பங்கெடுக்காவிட்டாலும் அவர்களிடம் நாம் மதிப்புக் கொள்வதில் தவறென்ன?

ஆயிரம் பதினாயிரம் என்று நம்மில் எத்தனை பேர் வைரம் வாங்குகிறோம். வைரத்தினால் திருப்தியடையும் பெண்ணுள்ளங்களைவிடப் போலி வைரங்களால் நிம்மதியடையும் லக்ஷக்கணக்கான பெண்ணுள்ளங்கள் இருக்கின்றன. போலி வைரத்தைக் கண்டு பிடித்தவனே மனித சமுதாயத்திற்கு அதிக சேவை செய்திருக்கிறான்! பாலுக்குச் சீனி யில்லையென்பார்க்கும், கூழுக்கு உப்பில்லையென்பார்க்கும் கவலை



ஒரே ரகமாக இருக்கிறது என்ருல், வைரம் வாங்க நினைக்கும் பெண்ணும், போலி வைரம் வாங்க நினைக்கும் பெண்ணும் ஒரே அளவில்தான் ஆனந்தமடைகிருர்கள் என்பது உண்மை வேதாந்தம்.

வைரத்தில் மட்டுமின்றி, இன்றைய நாகரிகத்தில் எது உண்மை எது போலி என்று வினவ முடியாதவாறு, அவ்வளவு நாசூக்காகப் பொருள்களைச் சிருஷ்டிக்கிருர்கள்! "அசல் அரிசி இட்லிதான்!" என்று ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அத்தனை சொகுசு, மென்மை, நிறம், ருசி. அதே சமயம் ரேஷன் அதிகாரிகள் நுழைந்து பரிசோதனை செய்து எங்களைப் போலவே நிறைந்த மனத்தோடு போய்ச் சேர்ந்தார்கள். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' என்றும் 'மாந்தர் உள்ளத்தனைய உயர்வு' என்றும் வள்ளுவர் சொல்லுகிற மாதிரி இட்லியில் ரசிகர்கள் விரும்பிய பொருள்கள் இருக்கும் வகையிலும், ரேஷன் அதிகாரிகள் விரும்பும் பொருள்கள் இருக்கும் வகையிலும் செய்கிற இந்த விந்தையை என்னென்று இயம்புவது?

ஓட்டல் பலகாரங்களில் மட்டுமல்ல, பற்பல துறைகளிலும் போலியின் புத்திசாதுரியம் துலக்கப்பட்டிருக்கிறது. மனித மனத்தின் ஆசாபாசங்களில் பல இப்போலி கர்த்தாக்கள் இல்லையெனில் பூர்த்தியடைய முடியாது. பட்டை எடுத்துக் கொள்ளுங்கள். பட்டின் தரம் விலை குறையுமே தவிர ஜிலு ஜிலுப்பு, பளபளப்பு அதிகமுள்ள போலிகளை கணக்கற்றவைகளில் காண்கிருேம். கில்ட் நகைகள் போடுகிற டால் வீச்சைக் கண்டால் பத்தரை மாற்றுப் பசும்பொன் நகைகள மூலையில் கிடக்கவேண்டியது தான். நகைவகை மட்டுமென்ன, மனிதர்களுக்குள்ளும இப்போலியே எடுப்பாக இருக்கிறது. இருட்டில்லா விட்டால் ஒளியின் சிறப்புக்கு இடமில்லையென்ற கணக்குப்படி, போலி மனிதன் இருந்தால்தான் உண்மை மனிதனுக்கு உயர்வு ஏற்படுகிறது.

போலியின் சிருஷ்டி நோக்கமே வியாபாரத்திலும் சரி, விளையாட்டிலும் சரி, மனிதப் பண்புகளிலும சரி, உண்மையை உயர்த்தவந்த ஒரு தெய்வீக ஒளி என்றே கொள்ள வேண்டும். செம்பும ஈயமும கலந்து போலி என்ற பொன் உலோகம் இல்லாது போனுல் நிஜப்பொன்னுக்கு யார் தலை வணங்குவார்கள்? வேதாந்தக் கொள்கைப்படி பார்க்கப் போனுல், உலகில் ஒவ்வொரு பொருளும் தன் கடமையைச் செய்யவேபிறக்கின்றன.ஈமுதல் யானை ஈருக, ஒவ்வொரு ஜீவனும் உலக நன்மையை முன்

னிட்டுப் பிறக்கின்றன. மனிதப் பூண்டு அதை அநாவசியம் என நினைக்கலாம். ஞானிகளில் பலர், இந்த உலகில் தாங்களும் கடவுளர்களும் தவிர எல்லாமே போலி என்று வாதாடுவார்கள். அது அவர்கள் சொந்தக் கொள்கை. ரஸிகனே வாடிவிழும் பூவும், தோன்றி மறையும நிலவொளியும், அசைந்தாடிச் செல்லும் தென்றலும் இறக்கையடித்து மறுகணம சாகும பட்டுப் பூச்சியும், போலியல்ல, அவை சாரம் நிறைந்தவை என்பான்.

ஒருவருக்கு உண்மையாகவும் பற்றுதல் தருவதாகவும் இருக்கும் பொருள் மற்றவருக்குப் போலி என்று படலாம். எனது நன்பர் ஒருவர் கிலிட்டு நகை வைத்துலக்ஷலக்ஷமாகப் பணம் சம்பாதித்துவிட்டார். அவரை போலி தான் வாழ்க்கையின் உண்மையாகிவிட்டது. நிஜக் காசுக்கடை வைத்தவர் இன்று தெருவில் நிற்கிறார். நிஜம் இவரைக் கைவிட்டு விட்டது. போலி கை தூக்கி விடுவதும் உண்மை. உண்மை மைகையடித்து அமிழ்த்தி விடுவதும் நமக்குத் தெரிந்த உண்மைகள்.

எத்தனையோ கதைகளிலும் வாழ்க்கையிலும் போலி மனைவிகள் பக்தி சிரத்தையாக வாழ்ந்து உயிருக்குயிராக இருப்பதும், நிஜ மனைவிகள் கழுத்தறுத்துக் கண்ணீர் வடிப்பதையும் பார்க்கிறோம். போலியின் பெருமையோ உண்மையின் பெருமையோ எங்கும் எப்போதும் ஒன்றுபோல இருப்பது இல்லை. நம் வாழ்வில் நாம் போலி ரஸிகனாகவோ பக்தனாகவோ சேவகனாகவோ நடிக்கும் காலத்தில் நம் வாழ்க்கைச்



சகடம் சுகமாகச் சுழல்வதையும் ,உண்மைக்குத் தொண்டனாக மாறும்போது சிரமப்படுவதையும் அனுபவிக்கிறோம். இளம் எழுத்தாளர் ஒருவர் மிகவும் சிரமப்பட்டுக் கவிதையொன்றை எழுதுகிறார். பத்திரிகைகள் திருப்பி அனுப்பி விடுகின்றன. உண்மைக்கும் நேர்மைக்கும் தோல்வி. இதனால் அவர் அலுத்துக்கொள்ளவில்லை. வஞ்சம தீர்க்கக் கம்பனிலிருந்து அங்கங்கே சில எழுத்துக்களை மாற்றி அனுப்புகிறார். அவ்வளவுதான்.

அவர் பெயரில் கவிதைகள் குவிகின்றன. எங்கு திருப்பினாலும் கவிதை மழை. இளங் கவிஞருக்குள்ள உற்சாகம் கம்பனிலிருந்து மெதுவாக இறங்கி, கண்ணில் காணும் யார் கவிதையையும் தமது வார்த்தைகளுக்குள் அடக்க ஆரம்பிக்கிறார். அவருக்குப் புகழும் பேரும் வந்துவிடுகின்றன, கங்கைக்கரை யோகிஸ்வரரைப் போல!

போலி எப்படி உண்மைக்கு வழி காட்டி என்பதற்குக் கங்கைக்கரை யோகிஸ்வரர் தான் எடுத்துக்காட்டு. ராஜா

ஒருவர் தம் மகளுக்கு ஒரு யோகியை மணமுடிக்க நினைத்தார். (தன் அந்தஸ்துக்கு அதிக நிலையை அடைய எண்ணுவதே போலி மனம் உடையார் கொள்கை) மகளுக்கு யோகிகளில் யாரேனும் ஒருவரை விபரம் சொல்லி அழைத்து வரும்படி ராஜா கட்டளையிட்டார். இந்த விபரம் அறிந்த ராஜகுமாரியின் அழகுப் பித்தன் ஒருவன் தானும் அத் திருக்கூட்டத்துள் புகுந்து ஜபதபங்களுடன் உட்கார்ந்து விட்டான். ராஜ சேவகர்கள் ஒவ்வொரு முனிவரிடமும் வந்த ராஜா "தமது பெண்ணைக் கொடுக்கச் சித்தமாக இருக்கிறார். சம்மதமிருந்தால் வாருங்கள்" என்றார்கள். முனிவர்கள் எல்லோரும சமாதியில் இருந்ததால் தலையசைக்கவில்லை. போலி சந்நியாசி மட்டும் தலையசைத்து வைத்தான். ராஜ சேவகர்கள் ஒருவரைத் தவிர மற்றவர்கள் சம்மதிக்க வில்லையென்றும், அந்த ஒருவரை அழைத்து வரலாமா என்றும் கேட்டார்கள். ராஜா சம்மதித்தான்.

ஆனல் திடீரென்று சம்மதித்தால் தன் குட்டு வெளிப்படுமென்ற நினைப்பில் போலி சந்யாசி பிகு செய்தான். முடியாது என்று பாவனை செய்தான். சேவகர்கள் அவனை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இதிலிருந்து போலிகளால்தான் உண்மைக்கு உயர்வு வருகிறது என்று தெரிகிறது. அப்படி யில்லாது போனல் உண்மை விரைவில் அழிந்துவிடும்.

'ஆர்த்த சபை நூற்றொருவர்' என்று பாடுவது உண்மை. 'வார்த்தை பதினயிரத்து ஒருவர்' எனபது போய் எல்லோரும் பேச்சாளர்களாக இருந்து விட்டால் 'பொது ஜனங்கள் யார்?' போலி பெருகப் பெருகத்தான் உண்மைக்குப் புகழும், மதிப்பும் அதிகம். இந்தப் பெருக்கம் உண்மையை உயர்த்த வந்த பூசாரம்; உண்மைக்குப் பாதுகாவலாக நிற்கும் வேலி.

போலி நாணயங்கள் இல்லை, போலிசார் வாழ்வில் சுவாரஸ்யமில்லை. எண்ணெயில் கலவன் இல்லை, பரிசோதனையாளர்க்கு



பொன்னி

மாதமிருமுறை

	இந்தியா	வெளி
	இலங்கை	நாடு
ஒருஆண்டு ரூ.	7-0-0	9-0-0
ஆறு மாத ரூ.	3-12-0	4-8-0

வாழ்க்கையில் பிடிப்பு இல்லை. போலி அரசியல் வாதிகள் இல்லை, பத்திரிகைகளில் ரஸம் இல்லை. போலி நடிகர்கள் இல்லை, கலை எப்படி முன்னேற்றம் அடையும்? போலி சங்கீதம், போலி இலக்கியம இப்படி எங்கும் போலிதான் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் ஆணிவேராக இருக்கிறது. இப்படியெல்லாம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளைப் போலப் போலி வியாபித்திருந்தும் இதை வளர்க்க யாரும் முன்வராமல் இருப்பதுதான் வருந்தத்தக்க விஷயம். போலியின் பெருமை பாடக் கவிகள் வேண்டும். போலியின் திறமை சொல்லப் பத்திரிகைகள் வேண்டும். போலியின் வளர்ச்சிக்குப் பாடு படப் பக்தர்கள் வேண்டும், போலிக்கு வணக்கம் செய்யத் தொண்டர்கள் வேண்டும். போலியின் வளர்ச்சிக்காக என்ெருரு சங்கம நிறுவினல், இதற்கு இந்நாட்டில் மட்டு மல்ல, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலான நாகரிக முதிர்ச்சியடைந்த நாடுகளிலும் கிளைச் சங்கங்கள் தோன்ற ஆரம்பிக்கும். ரஷ்யாவிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்ற மக்கள் உண்டு. அடிதடி போட்டு முன்வருவார்கள்.

உலகமக்கள் பின்பற்ற விரும்பும் தத்துவம், போலி. "போலி வாழ்க" என்று உலகமக்கள் கோஷமிடுவார்கள். 'ஒரே உலகம்' என்று கனுக்காண எத்தனை எத்தனையோ வழிகள் கொள்கைகள் சொல்லும் அறிஞர்கள் இந்தப் போலியை மறந்து விட்டார்கள். பெரியவர்களுக்கு மறதி இருப்பது இயல்பு. ஆனலும் இவ்வளவு உலகப் பணபு நிறைந்த போலியை மட்டும் மறந்து போய்விட்டார்களே. 'அதை' நினைக்கும் போதுதான் நாலு சொட்டு (போலிக்) கண்ணீர் விட வேண்டியதாகிறது. இதில் ஒரு ஆபத்தும் இருக்கிறது. நம் நாட்டுக்கும் இந்த போலியில் முதன்மை ஸ்தானம் கிடைப்பதரிது. இந்த உயர் ஸ்தானத்தை மேல் நாடுகள்—அதாவது நாகரிகத்தில் கரை கண்ட மேல் நாடுகள்— தட்டிக் கொண்டு போய்விடும். எந்த நாடு தொழில் வாணிபம் அரசியல் பொருளாதாரம ஆய கலைகளில் முன்னேறி வளர்ந்து விட்டதோ அங்கே தான் போலிகளும் வளர்ந்து விட்டன என்று புள்ளி விபர நிபுணர்கள் தெரிவிக்கிருர்கள். மேல் நாட்டைச் சுட்டிக்காட்டி எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடையும்படி வேண்டிக் கொள்ளும் போது இதற்குச் செவி சாய்ப்பவர்களிடம் எனக்குத் தனிப்பிரியம்.

உருவத்தின் பின் நிழல், பயிருக்குக் களை தொடர்வது போலப்போலிகள்வளர்வதற்கு வழி அதுதான் என்ற ஆனந்தக் கூத்து (இதுவும் போலிக் கூத்துத்தான்) ஆடுகின்றேன். என் கொள்கை மேலானது. இது போலியல்ல; உண்மை.



கடிகாரத்தில் மணி பத்தடித்தது. ரெவரெண்ட் ஞானமாணிக்கம் தன் படுக்கையறையின் கதவைத் தாழிட்டார்.

சிலுவையில் அறையப்பட்ட நிலையிலிருந்த கிறிஸ்து நாதரின் படம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் எதிரே சுடர்விட்டெரியும் மெழுகுவர்த்தி.

"பரமண்டலங்களிலே யிருக்கிற எங்கள் பிதாவே! உமமுடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடையராச்சியம் வருவதாக; உமது சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போலப் பூமியிலேயும செய்யப்படுவதாக. எங்கள் கடன்காரர்களை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் பாவங்களை மன்னியும். ஆண்டவரே, பரமபிதாவே நான் சென்ற பகலிலே செய்த குற்றத்தை மன்னியும். கோபத்தால் சிறுவன் ராயப்பனை அடித்ததற்காக என்னை மன்னித்து, சிறுவன ராயப்பனுக்கு மறுபடியும அந்தத் திருட்டுப் புத்தியைக் கொடுக்காது, அவனையும காத்து, மறுபடியும் என்னை இந்தச் சோதனைக்கு ஆளாக்காமல், அரவணைத்தருள வேண்டுமென்று மனமுருகிக் கேட்டுக்கொள்கிறேன் சுவாமி! — ஆமென"

ஜெபம் முடிந்து விட்டது. பகல் முழுதும அவரது உள்ளத்தை அழுத்தி வந்த பெருஞ்சுமை நீங்கி விட்டது. கிறிஸதவர்களெல்லாம் தாங்கள் அன்றாடம் செய்த பாபங்களுக்கு மன்னிப்புப் பெறும் காலமாகிய இரவு நேரத்திலே தான் ஞானமாணிக்கமும் ஜெபம் செய்தார். இவ்வளவு பேர்வழிகளின் குற்றங்களைக்

கேட்டு, அவைகளை மன்னித் தருள இயேசு பெருமானுக்கு நேரமிருக்குமா வென்பது, வேறுவிஷயம்! ஆனால் ஞான மாணிக்கம அதையெல்லாம் எண்ணவில்லை. அவரது நம்பிக்கை, இப்படி ஜெபம் செய் வதையே கடமையாகக் கருதி விட்டது.

ஞானமாணிக்கம் செய்த குற்றமும் அவ்வளவொன்றும் பிரமாதமானதில்லை. காணமற் போனது இரண்டணாத்தான் அற்பக்காசுதான்! இருந்தா லும்; முற்றும் துறந்த முனி புங்கவர்களையே அவை ஆட்டி வைக்கும் போது, 'உனக்காக உலகமே தவிர, உலகத்திற் காக நீயல்ல,' என்ற வாழ்க் கைத் தத்துவத்தை உடைய கிறிஸ்துவ மதப் பாதிரியைச் சும்மாவா விட்டு வைக்கும்? எதை அற்பமென மக்களுக் குப் போதித்து, ஆனால் தன்ன ளவில் அதற்குப் பிரதானம் தந்து, காணமற்போன அந்த இரண்டணாவைத் திருப்பி அடைவதில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்ட அதே ஞானமாணிக்கந்தான் அந்த அற்பக் காசை எடுத்த ராயப் பனைக் கைத்தடியால் பல தட வைகள் அடித்து விட்டார். அடித்த பிறகு, அவரது உள் ளத்திற்கு ஆறுதல் தேவைப் பட்டது. அதற்காகத்தான் ஜெபம்!

2

எப்பொழுதுமே திருநெல்வேலி ஜில்லா இந்து மதத்திற்கு இருப்பிடம். இன்று கூட, இந்து மதத்தின் சிலேட்டும் மூச்சு இந்த வட்டாரத்தில் தான் இழுத்துக் கொண்டிருக் கிறதாம்! இந்த மாதிரியான புண்ணிய பூமியில் கிறிஸ்தவ மதம் பரவிய தென்றால், அதற்கு ஞானமாணிக்கத்தின் தன்னலமற்ற சேவையும் பிரச் சாரமுமே காரணமாகும். பெண் ணுக்காகவோ, பணத்தைக் கருதியோ மதம் மாறாது, கொள்கைக்காக மனமாற்றம் அடைந்தவர்களை, அழித்து விட இந்துமத சனாதனிகளும் சைவப் பழங்களும் எவ்வ ளவோ முயன்றும் எதுவும் செய்ய முடியாது போயிற்று.

அத்துடன் மற்றொரு விஷ யம். கொள்கை மட்டும் பிரமா தமாக இருந்து விட்டால் போதுமா? அதைப் போதித்த வர் அதற்கு மாறாக நடக்காது, ஒழுங்காக நடக்கிறாரா என் பது தானே மிக முக்கியம். இந்த விஷயத்தில் ஞான மாணிக்கத்தை யாருமே குறை கூற முடியாது. வாழவேண்டிய இளமைப் பருவத்திலெல்லாம், ஆன்மீகத்தைப் பற்றிச் சர்ச் சையில் இறங்கி, ஐமபுலன்களை யும காயப் போட்டவர், இந்தப் பரந்த உலகில் அவருக்கென்று இருந்த பொருள்கள் நான்கே தான். பைபிள், வெண்தாடி, கைத்தடி, மூக்குக்கண்ணாடி இவைகள் தாம். அவருக் கிருந்த ஒரேயொரு ஆசை— தான் ஸ்தாபித்த நாசரேத்தம் பட்டி தேவாலயத்திற்கு வெள்ளிவிழாக் கொண்டாடி விடவேண்டும் —அவ்வளவு தான்.

3

வெகு நாட்களாக ரெவ ரெண்ட் ஞானமாணிக்கத் தின் மனதிலிருந்த ஆசையும் பூர்த்தியாகி விட்டது. நாச

ரேத்தம்பட்டி தேவாலயம் கட்டி இருபத்தைந்து ஆண்டு களாகி விட்டன.

அன்று வெள்ளி விழா. நாசரேத்தம்பட்டியே உருமாறி யிருந்தது. தேவாலயத்தின் சோடிப்பைப் பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. மாலை ஆறு மணிக்கு ரெவரெண்ட் ஞான மாணிக்கத்தின் வேதபோதனை வேறு. வேடிக்கை பார்க்கவும் வேதபோதனை கேட்கவும் அக் கம் பக்கத்துக் கிராமத்து மக் கள் வந்து குவிந்து விட்டனர்.

"தெய்வ விசுவாசிகளே!" என்று அழைத்து இயேசுவின் மலைப்பிரசங்கத்தைப் படித் தார் ஞானமாணிக்கம்—"சாந்த குணமுள்ளோர் பாக்கியவான் கள். அவர்கள் பூமியைச் சுதந் தரிப்பார்கள். தன் சகோதரன் மேல் கோபங் கொள்ளும் எவ னும் நியாய விசாரணைக்கு ஆளாவான். எனவே, முன் பாக உன் சகோதரனோடு சமா தானமாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து." என்ற வாசகத்திற்கு விளக் கம் கொடுக்கலானார். "தெய்வ குமாரர்களே! கோபம் பொல் லாதது. கோபங் கொண்டவன் திசைதிரும்பும் கைப்பிடியில்லா மோட்டார் வண்டியைப் போன் றவன். அதாவது, 'ஸ்டேரிங்' இல்லாத வண்டி எனவே, கோபத்தை விட்டொழியுங் கள்" என என்றுமில்லா தொரு உணர்ச்சி உத்வேகம் இவையெல்லாம் சேர்ந்து, பாதிரி ஞானமாணிக்கனாரை உருக்கமானதொரு சொற் பொழி வாற்றும்படி செய்து விட்டன.

அன்று முழுதும் பாதிரி யாருக்கு ஓய்வு ஒழிச்சலில்லாத வேலை. போதனை முடிய இரவு மணி ஒன்பதாகி விட்டது. பசி, களைப்பு இவைகளிடையே சிக்கிய ஞானமாணிக்கம் தேவாலயத்தைப் பூட்டிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட் டார்; எப்பொழுதும் போல வேதப் புத்தகத்தைத் தூக்கிய வாறு தள்ளாடிக் கொண்டே பின் தொடர்ந்தான் ராயப்பன்; என்ன தான் பலருடைய பாவ மூட்டைகளைத் தூக்கும் பொறுப்பு பாதிரியாருக்கு இருந்தாலும், அவரது வேதப் புத்தகத்தைத் தூக்கவே சிறு வனொருவன் தேவைப்பட் டான்.

ஞானமாணிக்கம் முதலில் பசியைத் தணித்துக்கொண்டு, களைப்பாற மாடிக்குச் சென் றார். மணி பத்தாகி விட்டது. வழக்கப்படி ராயப்பன் மாடிக்கு வரக்காணோம். கூப்பிட்டார். பதிலில்லை. மறுபடியும் உரத்த குரலில் அழைத்தார். ராயப் பன் பதுங்கிப் பதுங்கி வந் தான். கைகளிரண்டும் பின் னால் மறைந்திருந்தன. அவ னது மருண்ட பார்வை, அவன் ஏதோ மன்னிக்கமுடியாத குற்றமிழைத்து விட்டதாக அறிவித்தன.

"ராயப்பா! எங்கேயடா வேத புத்தகம்?" என்று சாந்தமா கக் கேட்டார் ஞானமாணிக்கம்

ராயப்பன் திருதிருவென விழித்தான். ஓடிவிடலாமா வென்ற எண்ணங்கூட அவ னுக்கிருந்தது. மறுமுறை கொஞ்சம் அதட்டுதலாகவே கேட்டார். இந்தத் தடவை, ராயப்பனின் கண்களிலிருந்து

இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. ஞானமாணிக்கம் இருப்பிடத்தைவிட்டு எழுந்து, ராயப்பனை நெருங்கி அவன் கைகளைப் பிடித்தார். இப்போதுவிஷயம் விளங்கிவிட்டது. என்ன அக்கிரமம்? அவன் செய்தது மன்னிக்கக் கூடிய குற்றமா? எந்தப் புத்தகத்தைத் தன் உடலாகவும் உயிராகவும் போற்றி வந்தாரோ, அந்தப் புத்தகம் கட்டுக்குலைந்து, தனித்தனித்தாளாக இருப்பதைக் கண்ட ரெவரெண்ட் ஞானமாணிக்கம பதைபதைத்துப் போனர். அதுவும் தன் லட்சியம் — ஆசை — நிறைவேறின இந்த நல்லநாளில், தன் பொக்கிஷமான வேதப் புத்தகத்திற்கு ஏற்பட்ட கதியை நினைத்ததும், அவரது சாந்தோபதேசமெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டது. கண்களில் கோபககனல் வீசியது. பக்கத்திலிருந்த தடியை எடுத்தார். ராயப்பன் மண்டையில் ஓங்கி ஒரு அடி. அவ்வளவுதான. ஆனுல் குறி தப்பிவிட்டது. பொட்டில் பலமான அடி விழுந்து விட்டது!

சில நாட்கள் கழித்து, பத்திரிகைகளில் கீழ்க்கண்ட செய்தி வெளிவந்தது. "நாசரேத்தம்பட்டி பாதிரியாரிடமிருந்த ராயபபன் என்ற சிறுவனின் அகால மரணம் வீட்டு மாடியின் ஓர் புரத்துச் சாளரம் விழுந்து இறந்தான். பாதிரியாருக்குக் காயமில்லை."

ஆண்டவனேயானுலும் சரி, ஆண்டவனின் அடியார்களாயினும் சரி, தெரிந்தோ தெரியாமலோ தாங்கள் செய்யும் குற்றங்களுக்குச் சட்டத்தால் தண்டனை கிடைக்குமென்று தெரிந்தால் போதும், கீழான மனிதனை கூடச் செய்யத் தயங்கும காரியத்தைச் செய்து, தப்பிக்க வழி பார்ப்பார்கள். அதே மாதிரிதான் ஞானமாணிக்கம் மனச்சாட்சியை விற்றுவிட வேண்டிய நிலைக்கு வந்தார். அவர் செய்த கொலைக்குத் தண்டனை யடையாமல் இருக்க, ஓர்புறத்துச் சாளரத்தின் ஓடுகளையும் மரங்களையும் நஷ்டமாகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனுல் பழி சும்மா விடுமா? பாபந்தான் மன்னிக்கப்படுமா? அதைப்பற்றித்தான் கவலையில்லையே! அன்று ராயப்பனைத் திருடியதற்காக அடித்த குற்றத்தை இரண்டு நிமிட ஜெபத்தால் மன்னித்த ரட்சகராகிய இயேசு இதற்கு ஒருமணிநேர ஜெபம் செய்தால் மனனிக்காமலா போய்விடுவார்!

ஆனுல், இந்தத் துணிவு— எணணம் — ஞானமாணிக்கத்திற்கு ஏற்படவில்லை. அவரது மனம் கட்டுக்கடங்கவில்லை. அவரும மனிதனுகப் பிறந்தவர் தானே!

। மறுநாள் முழுதும் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்தார். அறியாது செய்த — கோபத்தால் விளைந்த வினையை மறந்து, தன்னைச் சோதனைக்கு ஆளாக்காதிருக்கவேண்டினுர்-பலனில்லை. அவர் எந்த ஜெபத்தால் நிம்மதியடையலாமென்று நினைத்தாரோ, அந்த ஜெபத்தால் அவரது உள்ளம் போர்க்களமாகிவிட்டது. கேள்விகள் வந்துவந்து மோதின. ராயப்

பனுடன் சமாதானமான பிறகு ஆண்டவருக்குக் காணிக்கை செலுத்தலாமென்றால், ராயப்பன் இருக்குமிடம் தேடிச் செல்லப் பாதிரியாருக்கு அவ்வளவு துணிவில்லை. முடிவாக, ரெவரெண்ட் ஞானமாணிக்கம் 'அமைதி எங்கே?' என்று கேட்டுத்திரியும் பித்தநிலைக்கு வந்துவிட்டார்.

4

மகாத்மா கொலைக்குப் பின்பு பத்திரிகைகளில் பிரபலமாக அடிபட்ட விஷயம், திருநெல்வேலி ஜில்லா நாசரேத்தம்பட்டி பாதிரியார் ரெவரெண்ட் ஞானமாணிககம், தன அறுபதாவது வயதில் கிறிஸ்துவ மதத்தைவிட்டு விலகிய செய்திதான். பாதிரியின் திடீர் முடிவைப் பற்றிப் பத்திரிகைகளில் பலமான வாதப் பிரதிவாதங்கள் இருந்து வந்தன. ஆனால், தற்சமயம் பாதிரியார் எங்கேயிருக்கிறார் என்பதுமட்டும் யாருக்குமே தெரியாது!

எங்கோ ஒரு மூலையில் உயிர் வாழ்ந்துகொண்டிருந்த ஞானமாணிக்கத்திற்குத், தன்னைப் பற்றியும் தன முடிவைப்பற்றியும் நடக்கும் ஊகங்களையும் சர்ச்சைகளையும் கவனிக்கும் போது வேடிக்கையாக இருந்தது. கடைசியாகப் பத்திரிகைகளுக்கு விபரமானதொரு கடிதம எழுதித் தன் நிலையை விளக்குவதென்ற முடிவுக்கு வந்தார். அதன்படி, எழுதியனுப்பிய கடிதம், இன்றைய தேதி வரையில் எந்தப் பத்திரிகையிலும் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

ஆனால் அந்தக் கடிதத்தில் இருந்தது இதுதான்:

"எப்பொழுதுமே மனிதன் உணர்ச்சிவயப்பட்டவன். இதன்பலனாக, அன்றாடவாழ்க்கையில் எத்தனையோ குற்றங்களைச் செய்கிறான். அந்தக் குற்றங்களை மன்னித்து விடுமாறு ஆண்டவனிடம் வேண்டினால், பாபம் மன்னிக்கப்படுகிறது என்ற எண்ணத்தால் தன்னை ஏமாற்றிக் கொள்வதுடன, மேலும் மேலும பலகுற்றங்களைச் செய்து கடவுளையே ஏமாற்றி விடுகிறான். மதங்களெல்லாம் இந்த ஏமாற்றும் முறைக்கு வெகுவாக ஆதரவு தருகின்றன.

"மனிதனுக்கு நாள் முழுதும உழைக்க நேரமிருந்தால், அவன குற்றமிழைக்கவோ, கோபப்படவோ, எந்தபபாதகங்களையும் செய்யவோ சந்தர்ப்பம இடைப்பதில்லை. இது தெரியாமல் என் வாழ்நாளைப் பாழாக்இக் கொண்டேன்.

"இனி என்னைத் தேவாலயத்திலோ, கோவிலிலோ, பள்ளிவாசலிலோ பார்க்க முடியாது. என்னைப் பார்க்க விரும்புகிறவர்கள், வியர்வை கொட்ட வேலை செய்யும் தொழிலாளர் மத்தியில் என்னையும் ஒருவனாகக் காணலாம்.

"இப்பொழுது நான் மனிதனாகி விட்டேன்

தங்கள்,

ஞானமாணிக்கம்"

வளரும் இலக்கியம்

திருக்குறள் நாட்குறிப்பு

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்ட 1950-ஆம் ஆண்டு திருக்குறள் நாட்குறிப்புக கிடைக்கப பெற்ளோம். இந்து, கிறித்தவ,முகம் மதிய சமயங்களின் திருநாட்களும், அரசினர் விடுமுறை நாட்களும், நாளட்டவணை, செலவு கணக்கு, முகவரிகள் முதலிய பக்கங்களும் இணைக்கப்பெற்றுள்ளன. நல்ல வெள்ளைத்தாளில் அழகிய கட்டுடன் வெளிவந்துள்ளது. 336-முதல் 730-வரையுள்ள திருக்குறட் பாக்கள் கருத்துரையுடன் பக்கத்துக்கொளறுவீதம பயன்தரும் முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. விலை ரூ 1. தெ இ. சை. சி. நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 2/140 பிராட்வே, சென்னை 1.

சினிமா ஒழிக!

சினிமா உலகில் இன்றுள்ள 'புராண காலம், ஆபாசவேடம், பொருளற்ற வேடிக்கைகள்' முதலியவை ஒழிய வேண்டும் என்ற கருத்தைச் 'சேரன்' தீட்டியிருக்கிறூர். உணர்ச்சி வேகமுள்ள நடை. புரட்சிக் கருத்துக்கள். பாராட்டுகிறோம். நடிகர்கள் முதலாளியானல் படத்தில் ஏற்படும் தனியுரிமை பற்றியும் விவரித்திருக்கிறூர். இது போன்ற புத்தகங்களைப் பட முதலாளிகள் படித்தால், படித்து உணர்ந்தால் பயன் ஏற்படலாம். விலை 4 அணு கலைப் பணணை, 3, சூளை ஐரோடு, சென்னை—17

பெண்களை நம்பலாமா?

இப்படிக் கேட்கும் ஆடவரைப பார்த்துப் பத்மா என்ற ஒரு பெண் "ஆண்கள் மட்டும் என்ன உயர்ந்தவர்களா?" என்பது போன்ற சில குறிப்புக்கள் தருகிறூர் இந்தக் கட்டுரையில். ஆசிரியர் கலைமணி, விலை 4 அணு. சிலம்பு நூலகம், ஆபீஸர் லேன். வேலூர் N. A.

வரப்பெற்றோம்

கோரத்தாண்டவம் (சிறுகதைகள்)

ஆசிரியர்; ப. நாகராஜன் விலை 8 அணு. ஔவைநிலையம் காரை P. O. திருவானைக் காவல்வழி.

அகல்யாவின் காதல் (கதை)

ஆசிரியர். சாந்தா. விலை 6 அணு. மல்லிகா பிரசுராலயம், கட்டளை P. O. மாயனூர் S. I. Ry

நல்லாயன் மாதப் பத்திரிகை

(கிறிஸ்துமஸ் விசேஷ மலர்) விலை 3 அணு. ஆசிரியர் Rev. Fr. A. J. அடைக்கலம். 5, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. சென்னை.

கிராம சுய ஆட்சி

மாதமிருமுறை. ஆசிரியர் க. அய்யாறு நாயக்கர். விலை 2 அணு. கிராம சுய ஆட்சி, அய்யமபேட்டை.

கன்னித்தாய்: திருப்பூர் ப. கந்தசாமி தீட்டியது. விலை 6 அணு. தீந்தமிழ் நிலையம், துளசிராவ் வீதி, திருப்பூர், கோவை.

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

22. வாகை சூடி வஞ்சி புகுந்தனர்

முன்னணுகிய சேரவேந்தன் மாடலனோடு உரையாடிய பிறகு கன்னராகிய அரசர் நூறுபேருக்கும் தம் நாடு செல்லக் கட்டளையிட்டான்.

தமிழரசரின் போராண்மையை உணராது இகழ்ந்து போரிலே வேடம் புனைந்து உயிர்தப்பிய கனக - விஜயரை ஆரியப் பேடியோடு சோழ பாண்டியர்களிடம் அழைத்துச் சென்று காட்டிவருமாறு நீலன் முதலிய கஞ்சுக மாக்கள் ஆயிரவரை ஏவினான்.

தோற்ற அரசனைப்பேடியோடு அனுப்புவதன் மூலம், அவன் போர் முனையில் தோல்வியுற்று வீரமிழந்தவன் என்பதைக் காட்டுதற் பொருட்டு இவ்வாறு செய்வது பழைய மரபு

இதன் வாயிலாக கனக விஜயர்க்கு மாறாத இழிவும் சோழபாண்டியர்க்குரிய பழம் புகழும் பின்னும் பெருக தன் னாற்றல்பயன்பட்டதாகுமெனச் சேரன கருதினான். தமிழரசரை இகழ்ந்தாலும் அது தன்னை இகழ்ந்ததாகும் என இவன் கொண்ட எண்ணத்திற்கு இது முற்றிலும் பொருந்துவதே யாகும்.

இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. தாமரை மலராகிய இல்லத்திலே துயின்ற இளம் வண்டுகள் பகலவன் வருகையை மெல்லெனப்பாடி மாந்தரைத் துயிலெழுப்பின. புள்ளினங்கள் இன்னிசை எழுப்பி எழுந்தன. வடதிசை வென்று வாகை சூடிய குடதிசை மன்னவன் சேனைகள் வஞ்சிநகர் வந்து சேர்ந்தன.

பொன்மயமான சேரனது மாளிகையிலே கதிரவன சொரிந்த பொற்கிரணங்கள் பொன்மெருகிட்டுக் காட்சி நல்கின. சரஞ் சரமாய்த்தொங்கும் முத்துக்கொடிகள் காலை இளந் தென்றலின் அசைவிலே கண்ணுக்கு விருந்து செய்தன. பூக்களை அள்ளித் தெளித்ததுபோல் வேலைப்பாடமைந்த நீல விதானத்தின் கீழ்ப் பொற்கால் அமளியில் அன்னத்தின் மயிரினும் மெல்லிய படுக்கையிலே அரசிவேண்மாள் துயின்றுகொண்டிருந்தாள். 'வேந்தன் வெற்றி சூடி வந்தான், துணைவன் உன் துயர் துடைக்க வந்தான்' எனப் பல கூறிச் செவிலித்

தாயர் அவளைத் துயில் எழுப்பினர். அந்தப்புரத்திலுள்ள குள்ளனும், கூனனும் புது மலர்க் கூந்தல் புதுமணம் பெறுக எனக்கூறி வாழ்த்தினர்.

அரண்மனையின் அந்தப்புரத்திலே நிகழ்ந்தன கூறிய இளங்கோ இனி வஞ்சிநகர மக்களின் மகிழ்ச்சியைப் பலவாறு எடுத்துக்காட்டுகிறார்.

குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் நிலமக்கள வெற்றி புனைந்த வேந்தனைப் பாடிப் பாராட்டும் இயல்புகள் கூறப்படுகின்றன.

வானுற நிவந்த மலைகள், மலைசார்ந்த நிலமெல்லாம் தினைப்புனங்கள். கவண் வீசிப் புனங்காக்கும கானக்குறவர்கள் காவல் மறந்து மன்னனைக் காணச் சென்றனர். அதனால் புனம புகுந்த யானைகள் தினை கவர்ந்து திரிந்தன. கானக் குறத்தியர் கவண்வீசிப் பார்த்தனர். அலுத்தனர். பண்ணிசைத்துப் பாடினர். அந்த இன்னிசைப் பண்ணிலே சொக்கிவிட்ட யானைகள் வந்த செயல் மறந்து நின்றவாறே துயினறுவிட்டன. மகளிர் தம பாடலிலே மயங்கிவிட்ட யானைகளை நோக்கி

வாகை தும்பை
வடதிசைச் சூடிய
வேக யானையின்
வழியோன் ஈங்கென
திறத்திறம் பகர்ந்து
சேணோங்கு இதணத்துக்
குறத்தியர் பாடிய
குறிஞ்சிப் பாணி

'வாகைமாலைசூடி தும்பைமலர் அணிந்து வடதிசை வென்று அரச யானை அதோ வருகிறது! 'சென்று காண்' என்கிறாள் கானக்குறத்தி.

அந்தப்பண்சுமந்தபாடலிலே அரசனது புகழோடு நளினமாகப் பின்னிவருகிறது யானையைக் கடத்துகின்ற எண்ணம். இவ்வாறு குறிஞ்சிக் குறமகள் பரணிருந்து பாடியபாடல் மலை வெளி எல்லாம் எதிரொலித்து எழுந்தது. தினைப் புனத்தில் நின்ற நம்மை இனி இளங்கோ வயற்புறத்தின் வழியே அழைத்து வருகிறார். அங்கே ஏரிலே காளைகளைப் பூட்டி உழவர்கள் இனிமையாய்ப்பாடி உழுகின்றனர். வடநாட்டு அரசர்களின் மதிலை அழித்து வெள் வாகை விதைத்துக் கழுதை பூட்டிய ஏரினை உழுபவனாகிய சேரன் வெற்றி புனைந்து வந்தான். அவன் இப புவிமிசைப் பிறந்த நன்னாள் நாளை வருகிறது. அந்த நாளணி விழாவிலே நீயும் மகிழ்ந்து ஏர் நுகப்பூண்டு உழுவாய் என்று எருதுகளை நோக்கி உழவன் பாடுகின்ற மருதப் பண் எங்கும ஆர்கலித்தது.

முல்லை நிலத்திலே, ஓடிவரும் ஆன் பொருநை ஆற்றிலே நீராடி எழும மக்கள சூடிக் கழித்த மலர்கள், பூசிக் கரைத்த பொற் சுண்ணங்கள் எங்குமா பரவி வளைந்தோடும அலையிலே வானத்து (இந்திர) வில்லைப்போல் காட்சி தந்தன. தாமரைப் பூவையும், குவளை மலரையும் தம் தலையிலே லாவகமாய்ச் சூடிய ஆயர்கள் புனலிலே படிந்த தாழையின் கிளையிலே அமர்ந்து,

வில்லவன் வந்தான்
வியன்பே ரிமயத்துப்
பல்லான் நிரையொடு

படர்குவிர் நீரெனக்
காவலன் ஆனிரை
நீர்த்துறை படிஇக்
கோவலர் ஊதும்
குழலின் பாணி

'இமயத்தினின்றும் பகைவரது பசுக்கூட்டங்களை நம் அரசன் கொண்டுவந்தான். அந்தப் பசுக்களுடன் நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள்' என்று நீர்த்துறையிலே படிவித்து வேய்ங்குழலிலே இன்னிசை எழுப்பி ஊதினர்.

உலக வழக்கில் ஒரு காரியத்திலே வெற்றி கொள்பவனை 'வில்லன்' என்கிறோம். ஒரு பெரும் போரிலே வென்ற அரசனை 'வில்லவன்' என்று சிறப்பு விளங்க சிறிது நீட்டிச் சொல்ல ஆயர்கள் அறிந்திருக்கிறார்கள். அல்லாமலும் வில்லைக் கொடியிலே கொண்ட வீரனல்லவா? ஆயர்கள் உள்ளத்திலே புகுந்து இந்த ஆசிரியர் நயமாய்ப் புலப்படுத்துகிறார்.

நெய்தல் நிலம். அலைபாயும் கடற்கரை; பசுமை கொழிக்கும் புன்னைமர நிழலிலே வலம்புரிச் சங்கு பெற்றெடுத்த முத்துக்கள் கிடக்கின்றன. அவைகளைக் களங்காடு காய்களாய்க் கொண்ட இளம் பெண்கள் வேந்தன்சூடிவந்தவெற்றிகளைப் பாடுவோம எனப்பலவாறு பாட்டிசைக்கின்றனர்.

இவ்வாறு நான்கு நிலங்களிலிருந்தும் இனிதாய்ப் பிறந்த இன்னிசைப் பாடல்களை அரண்மனையின் அந்தப்புரத்திலே இருந்து செவியால் பருகிகோப்பெருந்தேவி சிந்தை மகிழ்ந்தாள். சேரனது வருகை எண்ணி உடல் பூரித்தாள். வலம்புரிச் சங்குகள் வெற்றி முழக்கம் செய்தன. மாலைப் பொழுதிலே பட்டத்து யானையின் அம்பாரிமீது அமர்ந்தசேரன் அரசவீதியின் வழியே பவனிவருகிறான். வஞ்சி நகர மக்கள் அவன் வருகையை எதிர்வந்து ஏற்று வானமும் இடியுமாறு வாழ்த்தெடுத்தனர். மகளிர்கள் அரிய நெல்லையும், அரும்பவிழ் மலரையும் தூவினர். மாதர்கள் மணிவிளக்கேற்றி வாழ்த்தினர். ஆடவர் பெரும் புகழ் கூறி ஏத்தினர், தொழுதனர்.

மலரை இதழ் விரியச்செய்கின்ற மாலைப் பொழுது வந்தது. அரசன் அரண்மனை புகுந்தான். வீரர்கள் தம்மனை புகுந்தனர். மனைவிமார் அக மலர முகமலர உபசரித்தனர். பகைவர் அழைத்த போர் முனையிலே வேலையும் வில்லையும் ஏற்று எதிர்த்து அதனால் நெஞ்சிலே பட்ட புண்கள் மனைவிமாரின் இனிய அணைப்பிலே ஆறிவிடுகின்றன. அப்பொழுது பாசறையில் தோன்றிய இவர்களது உருவங்களை ஒரு கணம் இந்த வீரர்கள் நினைத்துப் பார்க்கிறார்கள்.

அகிலுண விரித்த
அம்மென் கூந்தல்
முகில்நுழை மதியத்து
முரிகருஞ் சிலைக்கீழ்
மகரக் கொடியோன்
மலர்க்கணை துறந்து
சிதர் அரிபரந்த
செழுங் கடைத்தூது
மருந்தும் ஆயதிம்
மாலையென் றேத்த

அகிற் புகையுண்டு முகில் போல் பரந்த கருங் கூந்தல்; முகிலினுள்ளே நுழைந்து வரும முழுமதியம் போல் விளங்கும் திருமுகம்; அம் மதியத்தைப் போல் வளைந்து நிற்

கும் புருவங்கள்; அதன்கீழ் கயல்போல் ஓடிப் பிறழும் விழிகள். அந்தக் கடைக்கண் வந்து புரிந்த தூது, பாசறையிலே வருத்தம் செய்து வந்தது. அதே கண்கள் இம் மாலைப் பொழுதிலே மருந்துமாயின என எண்ணினர். இம் மகளிரது பவளக் கனிவாய் இதழ் விரிந்தன. பால் நிலவெனப் பற்கள் அரும்பின. அங்கே சுரந்த மூரல் விருந்தைத் தம் கணவர்க்கு அளித்தனர். காதல்தேன் பருகி மகிழ்ந்தனர். குலைந்த கருங்கூந்தலை அலைந்த அணிகளைக் கண்ணாடி கண்டு திருத்தினர். யாழை எடுத்தனர். குறிஞ்சிப் பண் பாடினர்.

மேருமலை போல் நிமிர்ந்த அரண்மனையிலே அரசி வேண்மாள் அணி அரங்கினின்றும் மெல்ல நகர்ந்து பால் நிலவு காண நிலா முற்றம் நோக்கி வந்தாள் ஒருபால் மங்கல மங்கையர் பல்லாண்டு பாடித் திருவிளக்கேற்றி அணி அணியாய் நின்றனர். நல்லிசை யாழும், இன்னிசை முழவும், பண்கனி பாடலும் ஒன்று கலந்து ஒலித்தன. பூவேந்தினர் சிலர். புகை ஏந்தினர் சிலர் ஆடை ஏந்தியும் அணி ஏந்தியும் நின்றனர் பலர். அங்கிருந்துவந்த அரசியுடன் செங்குட்டுவன் அணியரங்கம் ஏறினான். ஏறி அமர்ந்த அதே சமயத்தில் 'கலீர் கலீர்' எனச் சதங்கை ஒலிவந்தது. பாலாவி போன்ற மெல்லிய திரை சிறிது சிறிதாய் அகன்றது. 'சிவபார்வதி'நடனம் ஆரம்பமாகிவிட்டது. ஆடல் முடிவிலே அரசனைப் போற்றிமுடித்தான்.

இவ்வாடல் நிகழ்த்திய பறையூர்க் கூத்தச்சாக்கையனுக்குத் தன் மகிழ்ச்சியைக் கூறிவிட்டு அரசிருக்கை மண்டபத்திற்கு வந்து அமர்ந்தான் சேரன்.

கனகவிஜயரைச் சோழபாண்டியர்க்குக் காட்டி வரச்சென்ற நீலன் முதலியோரும், மாடல மறையோனும் தாம் வாயில் வந்து காணநிற்பதை அரசனுக்கு அறிவித்து உள்ளே புகுந்தனர். அரசனை வணங்கினர். வேந்தே சோழனது பூம்புகார் நகரத்தை அடைந்தோம். வச்சிரம் அவந்தி, மகத நாட்டினர் திறையாகக் கொடுத்த முத்துப்பந்தல், தோரண வாயில், பட்டி மண்டபம் பொருந்திய சித்திரமண்டபத்திலே செம்பியன் கொலுவீற்றிருந்தான். போரிலே தோற்றோடிய கனகவிஜயரோடுசென்று அவனடி வணங்கினோம். எங்களைக் கண்ட நிலையிலே வந்தகாரியம் உணர்ந்த சோழன்:—

நீள்ஆமர் அழுவத்து
நெடும்பே ராண்மையொடு
வாளும் குடையும்
மறக்களத்து ஒழித்து
கொல்லாக் கோலத்து
உயிர் உய்ந் தோரை
வெல்போர்க் கோடல்
வெற்றம் அன்றெனத்
தலைத்தேர்த் தானைத்
தலைவற்கு உரைத்தனர்

பெரும் போர் முனையிலே தம் ஆண்மையை விட்டு, சொல்லக்கூடாத தவவேடம் புனைந்து உயிர் பிழைத்து ஓடிய இக்கனக - விஜயரைப் பிடித்துக்கொண்டு வருதல் வெற்றியுமல்ல. வீரமுமல்ல என்று கூறினான். பின்னர் நாங்கள் விடைபெற்று மதுரை மூதூர் வந்தடைந்தோம். பாண்டியனைக் கண்டோம். அவனோ,

அமர்க்களம் அரசன
தாகத் துறந்து
தவப்பெருங் கோலம்
கொண்டோர் தம்மேல்
கொதியழல் சீற்றங்
கொண்டோன் கொற்றம்

புதுவது என்றனன்
போர்வேல் செழியன்

போர்க்களத்தை நும் அரசனுடையதாக விட்டு, தவ வேடங்கொண்டு ஒழிந்த இவர்கள்மீது கொதிசினம் கொண்ட சேரனதுவெற்றி புதுமையாய் இருக்கிறது என்று கூறியதாக உரைத்தனர்.

கேட்ட செங்குட்டுவனது தாமரைக் கண்கள் தழல் என மாறின. வெகுண்டு நகைத்தான். அதன் விளைவு யாதாகுமோ என எல்லோரும் அஞ்சிய் சமயத்திலே மாடலன் எழுந்தான். சேரனது வெற்றிப் புயலிலே பகைவரது வீரமெல்லாம் பஞ்செனச் சுழன்ற பல வரலாறுகளை அவன் சினம் ணியுமாறு இதமாய் எடுத்துக கூறுகிறான். செங்குட்டுவன் உலகாளத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டதை நினைவுபடுத்துகிறான். 'போர்' 'போர்' என்று நாளெல்லாம்போய்விட்டதைச்சிந்திக்குமுகமாக இனிச் செய்யத் தக்கனபற்றித் தூண்டுகிறான். இனி எஞ்சிய வாழ்நாள் இனிமையாய் அமைதியாய் அறம் பல அமைந்த இயல்பினதாய்க் கழியவேண்டும எனவும், அழியும இவ்வுடலைக் கொண்டு அழியாத இயல்பை அடைய வேண்டுமென்றும் பலவாறு எடுத்துக் கூறுகிறான். இதைக் கேட்டுக் கேட்டுக் கொதித்த சேரனது உள்ளம் சிறிது சிறிதாய் ஆறி அடங்கியது.

ஆரிய மன்னரைச் சிறை விடுத்துத் தம் நாடு செல்லக் கட்டளை இட்டான். சிறைக் கோட்டங்களைத் தூய்மையாக்கினன். கைதிகளை விடுவித்தும வரிமிகுந்த நாட்டினர்க்கு வரி விலக்கியும் ஆயக் கணக்கருக்கு ஆணையிட்டான்.

அரசர் செங்கோல் வழுவாது வளார மகளிர் கற்பு தளிர்த்து நாட்டிலே நல் வாழ்வைப் பெருக்கும் என்ற முன்னோர் எண்ணிய எண்ணத்தை நன்கறிந்த சேரன்,

அருந்திறல் அரசர்
முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக்
கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த
தண்டமிழ் நல்லுரை

மேற்கொண்டு செங்கோல் மன்னற்குத் தன்னை ஒரு எடுத்துக் காட்டாகவும் கற்புடை மகளிர்க்குக் கண்ணகியாரை மேதக்க சான்றாகவும் உலகம் உள்ளளவும் நினைவு கொள்ளத் தக்கவாறு கண்ணகியார்க்குச் சிலை அமைத்துக் கோயில் எழுப்ப ஆணை இட்டான்.

நம்நா(டு) அடைந்து
நளிர்சினை வேங்கைப்
பொன்னிணரிப் புதுநிழல்
பொருந்திய நங்கையை
அறக்களந்து அந்தணர்
ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர்
தம்மொடு சென்று
மேலோர் விழையும்
நூல்நெறி மாக்கள்
பாலபெற வகுத்த
பத்தினிக் கோட்டம்

சோழநாட்டிலே கண்ணகி பிறந்து புகழை நல்கினாள். பாண்டி நாட்டிலே புகுந்து கற்பறம் காட்டினாள். சேரநாடு வந்து நமக்குச் சிறப்பளித்தாள். இத்தகையாளுககு முன்னோர் வகுத்த சிற்ப விதிப்படி பத்தினிக்குக் கோயில் எழுந்தது. கைதேர்ந்த சிற்பிகள் கண்ணகியின் சிலையை நயமாய் உருவாக்கினர். இத்தகைய சிலைக்குச் செங்குட்டுவன் அறவோர், காலம் கணிப்போர், நிமித்தம் கூறுவோர், கம்மியர் ஆகிய இவர்களுடன் சென்று அணி பூட்டியும், மலர் சூட்டியும் விழா எடுத்தான்.

இமயத்தில் நாம்

"இமயத்தில் நாம்!" — பெயரைச் சொல்லும்போதே நாமும் விண்ணளாவும் வெள்ளிப பனிவரையின் உச்சியிலே உலவுவது போன்றதோர் உணர்ச்சிப் பெருக்கு நம உள்ளத்தில் எக்காளமிட்டெழுகிறது. அடுத்த நொடியில், பண்டைத் தமிழ் மன்னர்கள் வடவாரியாரை வென்று இமயத்தில் தமிழ்க்கொடி நாட்டிய வரலாறும் நம் நினைவுக்கு வருகிறது.

'இமயத்தில் நாம்' நாடகத் தொடக்கம் அந்நினைவையே நம் கண்முன் நிகழ்ச்சியாக்கிக் காட்டுகிறது. வில், கயல், புலிச் சின்னங்களுடன் கூடிய நம் தமிழ்க்கொடி இமயத்தின உச்சியில் பட்டொளி வீசிப் பறந்த வண்ணம் காட்சியளிக்க நாடகம் தொடங்குகின்றது. நாடக முழுவதும் தமிழ் மணம் கமழ்கின்றது. சோர்வுற்ற தமிழனைத் தட்டி எழுப்புகினறது நாடகத்தின் போக்கு!

நாடக ஆசிரியர் திரு ரா. வெங்கடாசலம் உரையாடல்களை மிக நன்ருக அமைத்திருக்கிருர். மதத்தை அரசியலிற் புகுத்தி நாட்டைப் பாழ்படுத்தப் பார்க்கும கயவர்களுக்கு, "மதம் உளளதானல் அது தானே பரவட்டும் அரசியல் வேறு, மதம் வேறு. இரண்டையும் ஒன்ருக்கிக் குழப்பாதிர்கள்!" என்று இளங்கோ வடிகள் வாயிலாகச் சரியான சூடு கொடுக்கிருர்.

மூலக் கதையில் இல்லாத பொற்ருெடி என்னும் பாவையைப் படைத்து, அவள் இளங்கோவின்மீது காதல் கொள்வதாகவும், அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவளைத் தமிழுக்குப் பணி செய்யுமாறு திருபபிவிட்டதாகவும் கற்பனை செய்திருப்பது பொருத்தமில்லாமல் இருக்கிறது.

"காதல் இலலாவிட்டால் கதை சுவைக்காது" என்ற தவருன எண்ணமே இக் கற்பனைக்குக் காரணமாக இருக்க வேண்டும். காதல், தமிழ்ப் பணிக்குத் தடையாகும் என்று ஆசிரியர் நினைக்கக் காரணம் என்னவோ தெரியவில்லை! இதுபோன்ற பொருந்தாக் கூற்றுக்களை, வீரத்தின் வரலாற்றில் இணைத்திருபபது அரசியலில் மதத்தைக் கலப்பதுபோலவே வருந்துதற்குரிய செய்திதான.

மற்றபடி, சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தின் ஒரு பகுதியை வைத்துக் கொண்டு, வீரமும உணர்ச்சியுமுள்ள நாடகமாக்கியிருக்கிருர் எனறே சொல்லலாம.

ஆரிய மன்னர்களான கனகனையும் விஜயனையும், ஆசிரியர் கனகவிசயன் என்ற ஒரே ஆளாக மாற்றிவிட்டார். இங்கே வரலாறு மாறுகிறது.

இந்த வரலாற்று மாற்றத்தால், நாடகத்திற்கு விறுவிறுப்போ வேறு சிறப்போ புதிதாக என்ன வந்துவிட்டது என்று புரியவில்லை.

நாடகப்படி, கனக விசயன் தமிழ் மொழியையும், தமிழரையும் இழிவாகப் பேசுகிறான். இதைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் வெகுண்டெழுந்து, வடநாட்டின் மீது படையெடுத்துக் கனகவிசயனை வென்று, அவன் தலையில் இமயக்கல்லைச் சுமக்கச் செய்து கங்கையில் நீராட்டித் தமிழகத்திற்குக் கொண்டு வருகிறான். கற்பரசி கண்ணகிக்குக் கோயில் எடுக்கிறான். இது தான் கதை.

இனவெறிகொண்ட ஒரு சில பழமைப் பித்தர்கள் பார்ப்பனரைத் தாக்கும் நோக்கத்துடன் தான் இந்நாடகம் நடிக்கப்படுகிறதென்றும், திராவிடக் கழகப் பிரசாரம் செய்யப்படுகிறதென்றும் கதறுகிறார்கள்.



'சிவலீலா' நாடகம் நடத்தும் டி. கே. எஸ். சகோதரர்கள், திராவிடக்கழகப் பிரசாரம செய்வார்களா என்பதை ஒரு சிறிது சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் வெறி தணிந்துபோகும், கதைப் போக்கில் சில மாறுதல்களுடன், உண்மையான வரலாற்றையே திறமையாக நடித்துக் காட்டிப் பாராட்டுப் பெறுகிறார்கள் டி. கே. எஸ். சகோதரர்கள்.

சேரன் செங்குட்டுவனாக நடிக்கும் திரு டி. கே. பகவதியின் நடிப்பு நாடக முழுவதும் சிறந்து விளங்குகிறது. நல்ல உயரமும், பரந்த மார்பும, பெருமித நடையுமாக அவர் மேடையில் தோன்றும்போது செங்குட்டுவன் இபபடி யிருந்திருப்பானே என்ற தோற்றம் உண்டாகிறது. "தமிழையும், தமிழரையும பழித்தான்" என்ற செய்தி கேட்டெழுந்த மாத்திரத்தில்வெகுண்டு வெஞ்சினம கூறும் கட்டத்தில் பகவதியின் நடிப்பு உச்சநிலை அடைகிறது.

நான் சென்ற தினத்தன்று, சண்முகத்திற்குப் பதிலாக திரு. சீதாராமன், இளங்கோவாகத் தோன்றினார். எத்தோற்றத்திலும் நடிக்க வல்ல நடிகன் தான் தான் என்பதை அவருடைய நடிப்பு தெற்றென விளக்கிவிட்டது. 'தமிழ்க்கன்னி' என்று அவர் பாடும் பாட்டு இனிமையாயிருக்கிறது.

கனக விசயனாக வரும் கோவிந்தன் அனாயாசமாக நடிக்கிறார். இயற்கையான திறமை இவரிடம் காணப்படு கிறது. பொற்கொடியாகவரும் காந்தா ஆர்வத்தோடு நடிக்கி றார்.

இந் நாடகத்திற்கென்றே புதிய வண்ணத்திரைகள் எழுதி, பார்ப்போர் வியக்கும் வண்ணம் காட்சிகள் அழகு செய்யப்பட்டிருக்கின்றன.

கற்பரசி கண்ணகிக்குக் கோயில் திறப்புவிழாச் செய் யும் காட்சியைப் பல வண்ண விளக்குகளின் ஒளியால் சிறக் கச் செய்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தின் முதற் பாட்டைப் பாடும்போது, பாட லுக்கேற்ப, நிலவு, பகலவன வான்மழை முதலியவற்றைக் காட்டும் முறையும், செங்குட் டுவன் கனவு காணும் கட்ட மும் வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளன.

தமிழின் பெருமையையும் தமிழனின் தன்மான உணர்ச் சியையும், தமிழ் வீரத்தையும் செயலாற்றலையும், மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில் இந் நாடகம் நல்ல பணிபுரிகி றது.

பழங்குப்பை நாடகங்களை நிறுத்திவிட்டு, இனிமேல், இதுபோன்ற புத்துணர்ச்சி யூட்டும் நாடகங்களைத் திருந் திய முறையில் டி. கே. எஸ். சகோதரர்களும், அவர்களைப் பார்த்துப் பிற நாடகக் கம் பெனியார்களும் நடத்தவேண் டும் என்பதே நம் விருப்பம்

— சி. கே. இராதாகிருஷ்ணன்